Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 30 ரூபா • தீபம் 134 • 11.03.2018

அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
AnnA EXPRESS COURIER SERVICE
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212215656 / 0703305500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும் குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக்குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட இன்றே எம்மை நாடுங்கள்.
கிளைகள் :
• யாழ்ப்பாணம்
• வேலணை
• ஊர்காவற்துறை
• சாவகச்சேரி
• மீசாலை
• முல்லைத்தீவு
• கிளிநொச்சி
• மல்லாவி
• வவுனியா
• திருகோணமலை
DHL



# கலவரத்தின் பின்னணி!

## யாருடைய அப்டேற் வெர்சன் விக்னேஸ்வரன்?

## ரோமன் றெய்ன்ஸ் சரிப்பட்டு வருவாரா?



சொல்லியடிக்கும் புலிகளின் தளபதி

# எய்மர் கடாபிக்கு என்ன நடந்தது?



## பதவி விலகுகிறார் மாவை!

## பொலிவிழந்த உழவர் விழா!

vivo - Y65 vivo - Y53
vivo Smart Phone
vivo - V7
YARL PHONE SHOP
யாழ் போன்சொப்
இல: 09, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை வெளிபுறம், யாழ்ப்பாணம்.
Tel:- 021 222 3817 / 021 222 7125 / 021 221 5455 / 0773611282
Phone Sales & Repair
யாழ் மண்ணில் முதன் முதலில் எம்மிடம் மட்டுமே VIVO moblie phone


Diplo
ASFAN TEXTILES
Exclusive Fashionable Men's Wear
No: 09, Grand Bazaar, Jaffna.
Tel: 070 277 2626 : AsfanTailors
Diplo
ASFAN TAILORS
FashionableTailors
No:31, Jummah Mosque,Jaffna.
Tel: 021 567 4477 Mobile: 070 277 2828
ஆடைகள் அனைத்தையும் அழகுற தைத்து பெற்றுக் கொள்ள முன்னோடி வாய்ந்த தையலாளர்கள் அமைந்துள்ள ஒரே இடம். ஆடைகளின் கவர்ச்சி அணிந்தால் புரியும்


KAJAMUGAN HARDWARE
கஜமுகன் ஹாட்வெயர்
கட்டிடப்பொருட்கள், அத்துருகிரிய
கம்பி வகைகள், சீமெந்து,
Maeson Mesh, DULUX பெயின்ற் வகைகள்
மற்றும் Pepsi Soad & Aquafina water
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஒரே இடம்
MITSUI CEMENT
NIPPON CEMENT
AQUAFINA
147, 149 Stanley Road, jaffna
147, 149 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
Tel: 021 222 2833, 021 222 9733 Fax: 021 222 2368
E.Mail: Kajamuganhw@hotmail.com

சமூக வலைத்தளங்களில் /deepamlive



# கருணாநிதிக்கு முன்னரே தகவல் கொடுத்தார்களா புலிகள்?

## ராஜிவ் காந்தி கொலை 23
### புலிகள் சிக்கிய கதை

கே.ராகோத்தமன்

நாங்கள் விசாரணையில் ஈடுபட்டிருந்த சமயம், ஒரு தகவல் கிடைத்தது. ராஜிவ் கொலைச் சம்பவம் நடப்பதற்கு முன்னால், தமிழகத்தில் இருந்த பல முக்கிய விடுதலைப் புலிகள், குறிப்பாக காயமுற்றவர்கள் மதுரை, சென்னை, நெய்வேலி, சேலம் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்திருக்கிறார்கள்.

ராஜிவைக் கொல்வது என்று முடிவெடுத்த பிறகு, இப்படித் தமிழகத்தில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த அனைவரையும் மருத்துவமனைகளிலிருந்து வெளியேற்றி, பாதுகாப்பாக எங்காவது வீடுகள் எடுத்துத் தங்க வைக்கத் திருச்சி சாந்தன் மூலம் பிரபாகரனும் பொட்டு அம்மானும் ஏற்பாடு செய்தார்கள்.

பல இடங்களில் அம்மாதிரியான ‘சேஃப் ஹவுஸ்கள்’ அவர்களுக்குக் கிடைத்தன.

விசாரணை முடிந்தபின்பே இவன்தான் சின்ன சாந்தன் என்பது தெரியவந்தது.





அப்படித் தங்கவைக்கப்பட்ட வீடுகளுள் ஒன்று வைகோவின் சகோதரர் ரவிச்சந்திரனுடைய வீடு என்பது விசாரணையில் தெரியவந்தது!

சமீபத்தில் வைகோவே இதனை ஒப்புக்கொண்ட செய்தியை நான் பார்த்தேன்.

இங்கே குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயமும் உண்டு. மே 21ம் திகதி ஸ்ரீபெரும்புதூரில் ராஜிவ் காந்தி கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் நடக்கவிருந்த அதே சமயம், தி.மு.க. தலைவர் கருணாநிதி கலந்துகொள்ளவிருந்த கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதே திகதி, அதே ஊர். இரண்டு மணி நேர வித்தியாசம் மட்டுமே. இரவு எட்டு மணிக்கு ராஜிவ் காந்தி கூட்டம் தொடங்குவதாகச் சொல்லப்பட்டிருந்தது.

கருணாநிதி கலந்துகொள்ளவிருந்த பொதுக்கூட்டம் மாலை ஆறு மணிக்குத் தொடங்குவதாகச் சொல்லப்பட்டது.

முன்னதாக, 19.5.91 அன்று தி.மு.க.காரர்கள் ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்துக்குச் சென்று பொதுக்கூட்டத்துக்கு முறைப்படி அனுமதிக் கடிதம் கொடுத்து, டவர் ப்ளாக், காந்தி மைதானத்தில் நிகழ்ச்சி நடக்க அனுமதி வாங்கியிருந்தார்கள்.

அவர்கள் அனுமதி பெற்றுத் திரும்பிய சில மணி நேரத்துக்குள்ளாக ஸ்ரீபெரும்புதூர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் மாத்தூர் ராமசாமி நாயுடு என்பவர் (இவர் மரகதம் சந்திரசேகரின் தேர்தல் பிரசார நிர்வாகி), ‘நாங்கள் பள்ளிக்கூட மைதானத்தில் நிகழ்ச்சி வைத்துக்கொள்கிறோம்’ என்று எழுதிக் கொடுத்தார்.

அந்தக் குறிப்பிட்ட மைதானம் ஸ்ரீபெரும்புதூர் ஊருக்குள் இல்லாமல், இரண்டு மூன்று கிலோ மீட்டர்கள் தள்ளி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்திருந்த இடம்.

முன்னர் ராஜிவ் பிரதமராக இருந்த சமயம் ஒருமுறை அந்த மைதானத்தில் ஹெலிகாப்டரில் வந்து இறங்கியிருக்கிறார்.

அதே இடத்தில்தான் இம்முறையும் ஹெலி பேட் அமைக்கப்பட்டு இருந்தது.

21ம் திகதியன்று நிகழ்ச்சியை முடித்துவிட்டு, இரவு ஸ்ரீபெரும் புதூரிலேயே தங்கிவிட்டு, மறுநாள் அங்கிருந்தே அவர் புறப்பட்டுப் பாண்டிச்சேரி போவதாகத் திட்டம் அல்லவா? அதற்காக.

### கான்சல் ஆன கலைஞர் கூட்டம்

எல்லாம் சரியாகத்தான் இருந்தது. ஆனால், 19ம் திகதி போலீஸ் அனுமதி பெற்ற இடத்துக்கு மாறாக, காங்கிரஸ்காரர்கள் வேறு இடத்தில் (சம்பவம் நடந்த இடம்) பந்தல் போடக் குழி தோண்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

இது நடந்தது மே 20ம் திகதி. விஷயம் கேள்விப்பட்டு காவல் துறையைச் சேர்ந்த ஏ.டி.எஸ்.பி ராமகிருஷ்ணன், ஏ.எஸ்.பி. பிரதீப் ஃபிலிப் ஆகியோர் நேரில் சென்று விசாரித்தார்கள்.

பொதுக்கூட்டத்துக்கு அனுமதி பெற்றது வேறு இடம். இப்போது அனுமதி பெறாத இன்னொரு இடத்தில் குழி தோண்டினால் என்ன அர்த்தம்? காங்கிரஸ்காரர்களுடன் அப்போது மரகதம் சந்திரசேகரே அந்த மைதானத்தில் இருந்தார்.

அவர்கள் அனைவரும் கடுமையாக வாதாடத் தொடங்கினார்கள். ‘ஊருக்கு வெளியே அத்தனை தூரத்தில் கொண்டு போய் கூட்டத்தை நடத்தினால் யார் வருவார்கள்?

இந்த இடமாவது மெயின் ரோடுக்கு அருகே உள்ளது. மக்கள் வந்துபோக வசதி. வெளியூர்க்காரர்களும் வருவதற்கு வசதியான இடம். எனவே இங்கேதான் நடத்துவோம். பள்ளி மைதானத்துக்குப் போவதாக இல்லை’ என்று சொல்லிவிட்டார்கள். காவல்துறை அதிகாரிகள் எத்தனையோ வாதாடிப் பார்த்தும் மரகதம் சந்திரசேகர் தன் கருத்தில் விடாப்பிடியாக இருந்தார்.

அவருக்குக் கூட்டம் நன்றாக நடக்கவேண்டும். நிறைய மக்கள் வரவேண்டும். ர்ராஜிவ் காந்தி கலந்துகொண்ட பொதுக்கூட்டம் மாபெரும் வெற்றியடைய வேண்டும். அவ்வளவுதான்.

தொடர்ந்து வாதாடிப் பயனில்லை என்னும் நிலையில் காவல் துறை அதிகாரிகள் திரும்பிவந்துவிட்டார்கள். என்ன செய்யமுடியும்? சண்டையா போட முடியும்?

சரி, கருணாநிதி கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் நடக்கும் இடத்துக்குப் பக்கத்திலேயே இந்த மைதானம் இருந்தாலும், இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் இடையே, இரண்டு மணிநேர வித்தியாசம் இருக்கிறது;

கருணாநிதி நிகழ்ச்சி முடிவடைந்ததும் எப்படியும் அந்தக் கூட்டம் அதற்குள் கலைந்துவிடும், பிறகு ராஜிவ் காந்தி நிகழ்ச்சிக்கான போக்குவரத்து ஒழுங்குகளை ஆரம்பித்துச் செய்யலாம் என்று ஒரு மாதிரி முடிவு செய்தார்கள்.

இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் சேர்த்து பாதுகாப்பு ஏற்பாடுகள், ரூட் பந்தோபஸ்து ஆகிய பணிகளில் ஈடுபடவும் ஆரம்பித்தார்கள்.

மறுநாள் விடிந்தது. மே 21ம் திகதி. இரண்டு தலைவர்களின் நிகழ்ச்சிகளுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கென தலா இருநூறு போலீசாரைப் பணியமர்த்தியிருந்தார்கள்.

காலை முதலே காவல்துறையினருக்குப் பரபரப்புதான். எந்தப் பிரச்னையும் வராமல், சிக்கல்கள் ஏற்படாமல் இரண்டு நிகழ்ச்சிகளும் நல்லபடியாக நடந்து முடிந்தாக வேண்டுமே?

அவர்கள் தங்கள் பணியில் தீவிரமாக இருந்த சமயம் சரியாக நண்பகல் பன்னிரண்டு மணிக்கு ஸ்ரீபெரும்புதூர் தி.மு.க. செயலாளர் கையில் ஒரு தந்திக் காகிதத்துடன் காவல் அதிகாரிகளிடம் வந்தார்.

‘எங்க தலைவர் இன்னிக்கி இங்க வரல சார். ப்ரோக்ராம் கான்சல் ஆயிடுச்சி.’

(தொடரும்)

ராஜீவ் வந்த கார்





# சிரியா எனும் நரகம்!

பதறவைக்கின்றன சிரியாவிலிருந்து வரும் புகைப்படங்கள். பச்சிளங் குழந்தைகளின் உடல்கள் கிடத்தப்பட்டிருக்கும் காட்சிகளும், ரத்தக் காயங்களுடன் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு ஓடும் பெற்றோரின் படங்களும், உருக்குலைந்து கிடக்கும் கட்டிடங்களும் நரகத்தை நினைவுபடுத்துகின்றன. கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 602 பேர் இறந்துள்ளனர். அவர்களில் 185 பேர் குழந்தைகள், 109 பேர் பெண்கள். தலைநகர் டமாஸ்கஸுக்குக் கிழக்கில் உள்ள கிழக்கு கூட்டா நகரில் பதுங்கியிருக்கும் ஐஎஸ் பயங்கரவாதிகள் மீது சிரிய ராணுவம், ரஷ்ய விமானப் படைகளின் உதவியுடன் கடும் தாக்குதல் நடத்திவருகிறது. ஆனால், இந்தத் தாக்குதலில் ஐஎஸ் பயங்கரவாதிகளை விடவும் அப்பாவிப் பொதுமக்கள்தான் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உலகைப் பதற வைத்திருக்கும் சிரியா மரணங்களுக்குக் காரணம் என்ன?



### எழுச்சியும் அடக்குமுறையும்

கடந்த ஏழு ஆண்டுகளாகத் தொடரும் உள்நாட்டுப் போர்தான் இதற்கு முக்கிய காரணம். 2011ல் பல்வேறு அரபு நாடுகளில் ஆட்சியாளர்களின் சர்வாதிகாரப் போக்கு, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராக மக்கள் ஆங்காங்கே திரண்டு தாங்களாகவே போராட்டத்தில் ஈடுபட்டனர். அதை 'அரபு வசந்தம்' என்றனர். இதனால் துனீசியா, எகிப்து, லிபியா, யேமனில் ஆட்சியாளர்கள் பதவி இழந்தனர். பஹ்ரைன், சிரியாவில் மக்கள் எழுச்சி வலுவாக இருந்தது. அல்ஜீரியா, ஈராக், ஜோர்டான், குவைத், மொராக்கோ, ஓமானில் பெரிய போராட்டங்கள் நடந்தன. லெபனான், மௌரிடானியா, சூடான், சவுதி அரேபியா, மேற்கு சகாரா நாடுகளில் மக்கள் போராட்டம் வலுவில்லாமல் வெறும் அடையாளமாக நிகழ்ந்தது.

சிரியாவைப் பொறுத்தவரை இந்தப் போராட்டங்களை அடக்குமுறையுடன் எதிர்கொண்டது அதிபர் பஷார் அல் அஸ்ஸாத் தலைமையிலான அரசு. ராணுவத்தின் மூலம் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அது பின்னர் அலையலையாகப் பரவி பெரிய போராட்டமாக மாறியது. இதற்கிடையே அதிபரை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளின் ஆதரவுப் படை ஒருபுறம், ஐஎஸ் பயங்கரவாதிகள் ஒருபுறம், அமெரிக்க ஆதரவிலான குர்துகள் ஒருபுறம் என்று எல்லாத் தரப்பிலிருந்தும் கடும் தாக்குதல்கள் நடக்கின்றன. அதிபரை எதிர்ப்பவர்கள் இடையே ஒற்றுமை இல்லை என்பதுடன் நோக்கங்களும் வெவ்வேறானவையாக இருப்பதால் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வராமலே இழுத்துக் கொண்டிருக்கிறது. மக்களிடையே செல்வாக்கை இழந்துவிட்ட அதிபர் ராணுவத்தின் விசுவாசத்தாலும் ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளின் உதவியாலும் பதவியில் தொடர்வதாலும் போர் ஓய்வதாக இல்லை. அனைத்துத் தரப்பு மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற அதிபர் தவறியதால் அந் நாடு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. போரிடும் குழுக்களை ஆதரிக்கும் நாடுகளும் எண்ணெய் வளத்தைக் குறிவைத்தும், சிரியாவில் அமைதி வந்துவிடக்கூடாது என்று திட்டமிட்டும் காய்களை நகர்த்துகின்றன. இவற்றுக்கு நடுவில் ஏதுமறியா அப்பாவிகள் பலியாவதுதான் கொடுமை.

### சிக்கல்களின் பின்னணி

மேற்காசியாவில் முக்கியமான நாடு சிரியா. சிரிய அரபுக்கள், கிரேக்கர்கள், ஆர்மீனியர்கள், அசிரியர்கள், குர்துகள், சர்காசியன்கள், மண்டியாக்கள் சேர்ந்து வாழ்கின்றனர். மதங்களும் பலதரப்பட்டவை. சன்னிகள், ஷியாக்கள், சலாஃபியர்கள், இஸ்மாயீல்கள், அலாவைட்டுகள், ட்ரூஸ்கள், மண்டியாக்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், யாஜிதிக்கள் என்று பலர்.

இந்நாட்டுக்கு மேற்கில் லெபனான், மத்தியத் தரைக்கடல், வடக்கில் துருக்கி, கிழக்கில் இராக், தெற்கில் ஜோர்டான், தென்மேற்கில் இஸ்ரேல் உள்ளன. 1967ல் நடந்த மத்திய கிழக்குப் போரில் சிரியாவின் கோலான் குன்றுப் பகுதிகளில் மூன்றில் இரண்டு மடங்கைக் கைப்பற்றிய இஸ்ரேல், 1981ல் தனது நாட்டு எல்லையுடன் அதைச் சேர்த்துக்கொண்டுவிட்டது. வளமான சமவெளி, உயர்ந்த மலைகள், எண்ணெய் வளம் மிக்க பாலைவனம் கொண்டது சிரியா. யூப்ரடிஸ் நதி பாயும் பள்ளத்தாக்கு செழிப்பானது. எண்ணெய் ஏற்றுமதி, சுற்றுலா, விவசாயம் ஆகியவை நாட்டுக்கு வளம் சேர்த்தன.

நாட்டின் வருமானத்தில் 40% எண்ணெய் ஏற்றுமதி மூலம் கிடைத்தது. வேளாண்மை மூலம் ஜிடிபியில் 20% கிடைத்தது. சுற்றுலாத் துறை 20% வருவாயைப் பெற்றுத் தந்தது. இப்போது உள்நாட்டுப் போர் காரணமாக பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஈரான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் பெருந் தொகையைக் கடன் வாங்கி சமாளிக்கிறது சிரிய அரசு. எண்ணெய் ஏற்றுமதி மட்டும் மூன்றில் இரண்டு மடங்கு வீழ்ச்சியடைந்தது. அதனால் வேலைவாய்ப்பும் குறைந்துவிட்டது.

2010ல் 12 பில்லியன் டொலர்களாக இருந்த ஏற்றுமதி மதிப்பு, 2012 ல் 4 பில்லியன் டொலர்களாகச் சரிந்துவிட்டது. ஜிடிபி யில் மட்டும் 2011ல் ஏற்பட்ட 3% சரிவு, 2012ல் 20% ஆகக் குறைந்திருப்பது சரிவின் வேகத்தைக் காட்டுகிறது. 1995ல் ஒரு நாளைக்கு 6 லட்சம் பீப்பாய்கள் கச்சா பெட்ரோலிய எண்ணெய் எடுத்த சிரியா, 2012ல் 1,82,500 பீப்பாய்களைத்தான் எடுக்க முடிந்தது. இப்போது இதுவும் குறைந்துவிட்டது. அது மட்டுமல்லாமல் எண்ணெயின் தரமும் குறைந்துவிட்டது. புதிய வயலில் எண்ணெய் இருப்பு அடையாளம் காணப்பட்டாலும் எடுத்து விற்க முடியவில்லை. உள்நாட்டுப் போரால் நாட்டு மக்களில் 30% வறியவர்களாகிவிட்டனர். 11.4% பேர் வறுமைக் கோட்டுக்கும் கீழே வாழ்கின்றனர். குழந்தைகள் விளையாட்டு, படிப்பு என்று ஏதுமில்லாமல் அன்றாடம் போர்ச் சூழலிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். ஏழெட்டு வயது குழந்தைகள்கூட துப்பாக்கிகளுடன் பெரியவர்களுக்குத் துணையாகக் களத்தில் நிற்கின்றனர்.

இதற்கிடையே நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றிய ஐ.எஸ். சிரியாவின் எண்ணெய் வயல்களிலும் பெரும் பகுதியைக் கைப்பற்றி, எண்ணெயை விற்று தனது எதேச்சாதிகார அரசை வலுப்படுத்திக்கொண்டிருந்தது. ஆயுதங்களுக்குப் பெரும் பகுதியைச் செலவிட்டது. 2013 ல் மட்டும் உள்நாட்டுப் போரில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இறந்துவிட்டனர். அவர்களில் 11,000

தொடர்ச்சி 24-ம் பக்கம்...

# மாவையின் அப்டேற் வெர்சனா விக்னேஸ்வரன்?

## இனி தமிழரசுக்கட்சி 2.0 அரசியல்தான்!

நம்மாழ்வார்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் ஒரு நூல் வெளியீட்டு நிகழ்வு நடந்தது. வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் அதில் கலந்து கொண்டிருந்தார். பத்திரிகைகளில் அரசியல் கட்டுரைகள் எழுதுபவர்கள் சிலர் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். பேச்சாளர்களும் அவர்கள்தான். முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் அரசியலில் தனி அடையாளமாக மேலெழ வேண்டிய காலம் வரும், அதை பயன்படுத்தி தவிர்க்க முடியாத அடையாளமாக முதலமைச்சர் மாறுவார், அடுத்த முதலமைச்சரும் அவர்தான் என்ற சாரப்பட உரையாற்றினார்கள். அவர்கள் இப்படி கொளுத்தி விட்டுக் கொண்டிருந்த சமயத்தில், முதலமைச்சர் முகத்தில் மெல்லிய புன்முறுவலுடன் உட்கார்ந்திருந்தார். இந்த பேச்சுக்களை அவர் இரசித்துக் கொண்டிருந்தார்.

முதலமைச்சர் அடுத்து என்ன முடிவெடுக்க போகிறார்? இந்த மாகாணசபை முதலமைச்சர் பதவிக் காலத்திற்குபின்னரும்,தமிழ் அரசியலில் தொடர போகிறாரா? அப்படி

> **விக்னேஸ்வரன் புதியதொரு கூட்டணியை நோக்கி செல்கிறார் என தமிழ் அரசியல் பரப்பில் அண்மைக்காலமாக பலர் எழுதுகிறார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் களமிறங்கும் தெரிவை விக்னேஸ்வரன் இன்னும் கைவிடவில்லை. அல்லது, அப்படியான சூழல் ஒன்று உருவாகுவதை தடுக்கும் அரசியல் சக்தி அவரிடமில்லை.**


தொடர்ந்தால், தமிழரசுக்கட்சியுடன் இணைந்திருப்பாரா? இல்லையெனில், செற்பாட்டு அரசியலில் பலவீனமான முதலமைச்சர், எப்படி தனித்த அரசியல் இயக்கத்தை உருவாக்குவார்? இப்படியெல்லாம் ஏராளம் கேள்விகள் வரிசையில் உள்ளன. அவற்றில் முதன்மையான கேள்விக்கு இந்த நாட்களில் விடை கிடைத்து வருகிறது.

அந்த கேள்வி இந்த பதவிக்காலத்தின் பின்னர் முதலமைச்சர் என்ன முடிவெடுக்க போகிறார்? தமிழ் அரசியலில் நீடிக்கப் போகிறாரா? என்பதே. கடந்த சில மாத நிகழ்வுகள் இதற்கான பதிலை அரூபமாக ஏற்படுத்தியுள்ளது. ஆம், முதலமைச்சர் தமிழ் அரசியலில் நீடிக்கப் போகிறார்!

எப்படி நீடிக்கப் போகிறார்?

அதற்கான தெளிவான பதிலை சொல்ல முன்னர், முதலமைச்சரின் இயல்பொன்றை பற்றி குறிப்பிட வேண்டும். முதலமைச்சரிற்கு மிக நெருங்கிய வட்டத்தில் உள்ள ஒருவர் அடிக்கடி குறிப்பிடுவார், “அவர் எப்பொழுது என்ன முடிவெடுப்பார் என்பது தெரியாது. ஒரு விசயத்தில் அவர் எடுக்கும் முடிவில் செல்வாக்கு செலுத்துவது, அவர் யாரை இறுதியாக சந்திக்கிறார் என்பதிலேயே தங்கியுள்ளது” என.

தீர்மானங்கள் எடுப்பதில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவ்வளவு பலமானவர் கிடையாது. அவரது முடிவுகளில் ராஜதந்திர தொனி இருப்பது அரிது. இதில் மெதுமெதுவாகத்தான் அவர் முன்னேறி வருகிறார். முடிவெடுப்பதில் இவ்வளவு பலவீனமான முதலமைச்சர், அரசியலில் எப்படி நீடிக்கப் போகிறார் என்பதை உடனடியாக தெரிந்து கொள்வது சிரமம்தான். ஆனால் இந்த நாட்களில் அவர் தனது நிலையெதுவென்பதை உள்ளூர உய்த்தறிந்துள்ளார் என்றே தோன்றுகிறது.



விக்னேஸ்வரனின் அரசியல் என்பது அடுத்த முதலமைச்சர் என்பதுதான். முதலமைச்சர் பதவியின் மூலம் எதையாவது செய்யலாமென அவர் நம்புகிறார். அதாவது, ஏற்படுத்தப்பட்ட இலங்கையின் நிர்வாக, அரசியலமைப்பு முறைமைகளிற்கு உட்பட்ட விதத்திலேயே அவரால் அரசில் செய்ய முடியும், அரசியல் போராட்டம் செய்ய முடியும். இது தமிழ் அரசியல் செயற்பாட்டு பாரம்பரியத்தில் புதியதொரு அம்சம். தீவிர அரசியல் செயற்பாட்டாளர்கள் அப்படியிருப்பதில்லை. அவர்கள் போராடி தமக்கான இடத்தை கண்டுபிடிப்பார்கள். இதில் இன்னொரு நகைமுரணும் உண்டு. ஈழத்தமிழ் அரசியலில் அப்படியான முயற்சிகளை செய்தவர்கள் அதிகபட்ச ரிஸ்க்கான வாழ்க்கையை சந்தித்தார்கள். மரணத்தையும் தழுவினார்கள். அந்த முயற்சியில் அவர்களால் வெற்றியடையவே முடியவில்லை.

இப்படியான ஈழ அரசியல் பாரம்பரியத்தில், 2009 இன் பின்னர் மேலெழுந்த அரசியல் சக்திகள் அதிகபட்ச விமர்சனத்தை சந்தித்தது ஆச்சரியமானதல்ல. தமிழரசுக்கட்சியாகட்டும், ஆயுத இயக்கங்களாகட்டும், தமிழ் தேசிய கூட்டமைப்பாகட்டும் அனைத்துமே மேலே சொன்ன “அடங்கமறு“ அரசியல் பாதையில் உருவானவைதான். ஆனால் இன்று, அவை தமது விடாப்பிடி தன்மைகள் பலவற்றை நீக்கி, இன்று புதியதொரு அரசியல் வெர்சனை (Version) உருவாக்கியுள்ளன.

அரசியலில் நீடிப்பதெனில், விக்னேஸ்வரனிற்கு இப்போதுவரை இரண்டு தெரிவுகள் உள்ளன. முதலாவது, ஏற்கனவே அவர் அரசியலுக்கு வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு அல்லது தமிழரசுக்கட்சியின் மூலமே வடமாகாணசபை தேர்தலில் களமிறங்குவது. அல்லது, புதியதொரு கூட்டணியை உருவாக்குவது.

விக்னேஸ்வரன் புதியதொரு கூட்டணியை நோக்கி செல்கிறார் என தமிழ் அரசியல் பரப்பில் அண்மைக் காலமாக பலர் எழுதுகிறார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் களமிறங்கும் தெரிவை விக்னேஸ்வரன் இன்னும் கைவிடவில்லை. அல்லது, அப்படியான சூழல் ஒன்று உருவாகுவதை தடுக்கும் அரசியல் சக்தி அவரிடமில்லை.

தமிழரசுக்கட்சியுடன் விக்னேஸ்வரனிற்கு கொள்கைரீதியிலான அதிக முரண்பாடுகள் கிடையாது. அதில் எம்.ஏ.சுமந்திரனின் அரசியல் ஆதிக்கம் அதிகமாக உள்ளது மட்டுமே பிரச்சனையாக உள்ளது. சுமந்திரனின் அரசில் ஆதிக்கம் நீக்கப்பட்ட தமிழரசுக்கட்சியோ, தமிழ் தேசியக் கூட்டமைப்போ விக்னேஸ்வரனிற்கு அசளகரியத்தை கொடுக்காது. அப்படியொரு தமிழரசுக்கட்சியை, அல்லது அப்படி தோன்றும் தமிழரசுக்கட்சியை நோக்கி அவர் நகர்த்த முனையக்கூடும்.

அடுத்த முதல்வர் வேட்பாளராக யாரை களமிறக்குவதென்ற விவாதம் தமிழரசுக்கட்சிக்குள் ஏற்படும் சமயத்தில்தான், ஒரு அரசியல் பேரம் நிகழும். தமிழரசுக்கட்சியின் முதல்வர் வேட்பாளராகும் வாய்ப்பிருந்தால், விக்னேஸ்வரன் வெளியில் செல்லும் வாய்ப்பு அதிகபட்சமாக இருக்காது. அப்படி நடந்தால், மாவை சேனாதிராசா மீண்டுமொரு முறை காத்திருப்போர் பட்டியலில் இணைய வேண்டியிருக்கும். தமிழ் அரசியல் சூழல் செல்லும் திசையை கவனித்தால், விக்னேஸ்வரனை மீண்டும் முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்கும் நெருக்கடியையே இரா.சம்பந்தனிற்கு ஏற்படுத்தும் வாய்ப்புள்ளதாக தெரிகிறது. எனினும், அண்மைக் காலத்தில் கூட்டமைப்பின் முடிவெடுக்கும் அதிகாரம் சம்பந்தரிற்கு வெளியிலும் சென்று கொண்டிருப்பதையும், பல குறுநில மன்னர்கள் மேலெழுவதையும் கவனிக்க வேண்டும்.

தமிழரசுக்கட்சிக்குள் இடமில்லாவிட்டால், வீட்டுக்குத்தான் போக வேண்டுமென்ற நெருக்கடி விக்னேஸ்வரனிற்கு இல்லை. அதனால்தான் தனக்கான கூட்டணியொன்றிற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். தமிழ் மக்கள் பேரவையென்பது, விக்னேஸ்வரனின் எதிர்கால அரசியல் செயற்பாட்டிற்கான நடைமேடையே. பேரவையிலிருந்து புதியதொரு கூட்டணிக்கு செல்லும் வாய்ப்புக்கள் உள்ளன. அப்படியொரு கூட்டணியமைந்தால், அது தமிழரசுக் கட்சியின் அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பின் வெர்சன் 2.0 ஆகவே இருக்கும்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் அரசியல் கூட்டணி வைத்திருக்க முடியாதென முதலமைச்சர் உறுதியாக நம்புகிறார். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் நிலைப்பாடுகளும், முதலமைச்சரின் அரசியல் நிலைப்பாடுகளும்

தொடர்ச்சி 8-ம் பக்கம்...

# பதவி விலகுகிறார் மாவை...
# கலவரங்களின் பின்னணி இதுதான்!
## அனந்தி வரவில்லை, ஆனால் பிக்அப் வந்தது!

கருடன்

“அனலடிக்கிறது. வீட்டிற்குள்ளும் இருக்க முடியவில்லை. வெளியிலும் தலைகாட்ட முடியவில்லை” என்றபடி வியர்வையை துடைத்துக் கொண்டு வந்தார் கருடர்.

“காலநிலையை சொல்கிறீரா, களநிலையை சொல்கிறீரா?” என்றோம்.

“இரண்டையும்தான். மார்ச் மாதத்திலேயே வெப்பம் எகிறத் தொடங்கி விட்டது. அதைகூட சமாளிக்கலாம். தெற்கில் சிங்கள முஸ்லிம் கலவரம் பற்றியெரிய தொடங்கிவிட்டது. காலநிலையை கூட சமாளிக்கலாம். ஆனால் இந்த கலவரம் பயங்கர ஆபத்தானது. இது இனக்கலவரம் என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் ஆபத்தான அரசியல் கலவரம்“

“அரசியல் கலவரமா? விபரமாக சொல்லுங்கள்”

“மிக ஆபத்தான அரசியல் கலவரம் தான். ஒரு சில தனிநபர்களின் அரசியல் ஆசைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல் கலவரம் இது. இதன்பின்னால் ஆட்சிமாற்ற திட்டங்களும் இருக்கின்றன.

மஹிந்த ராஜபக்சவை ஜனாதிபதி பதவியிலிருந்து வீழ்த்த முடியாதென்றுதான் ஒருகாலத்தில் எல்லோரும் கருதினார்கள். அப்போது அளுத்கம கலவரம் வந்தது. ஏற்கனவே தமிழர்கள் ராஜபக்சக்களில் இருந்து விலகியிருந்தார்கள். அளுத்கமவுடன் முஸ்லிம்களும் விலகினார்கள். சிறுபான்மையினங்கள் மொத்தமாக விலக, ராஜபக்சவின் இருண்ட ஆட்சி விழுந்தது.

இப்போது ராஜபக்சக்கள், தம்மை வீழ்த்த பயன்படுத்திய அதே உத்தியை கையில் எடுத்துள்ளார்கள். அதுதான் இந்த கலவரம். அப்படியென்றால் இது அரசியல் கலவரம்தானே”

“ஓஹோ... இதற்கு பின்னால் இவ்வளவு விசயங்கள் உள்ளனவா?”

“இன்னும் நிறைய விசயமிருக்கிறது. உள்ளூராட்சி தேர்தலில் மஹிந்த அணி வென்றது. இந்த வெற்றியுடன், ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்தலாமென்ற நம்பிக்கை அவர்களிடம் ஏற்பட்டு விட்டது. தேர்தலிற்கு முன்னர், மைத்திரி தரப்புடன் நடத்திய இரகசிய சந்திப்புக்களில் இணங்கிய பல விசயங்களிற்கு, தேர்தலின் பின்னர் அவர்கள் மறுப்பு தெரிவித்தது இதனால்தான்.

### கலவரங்களின் பின்னால் ஆட்சி கனவு

வெளிநாட்டில் தங்கியிருந்த மஹிந்த குடும்ப உறுப்பினர்கள் பலர் நாடு திரும்பி, அரசியல் காய் நகர்த்தல்களை முடுக்கி விட்டனர். கைது அச்சத்தால் நாட்டைவிட்டு சென்றவர்கள், இனி அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாதென்ற நம்பிக்கையில் திரும்பினார்கள். அரசாங்கம் அவ்வளவு பலவீனமாகி விட்டது. சரத் பொன்சேகாவை சட்டம், ஒழுங்கு அமைச்சராக்க கூடாதென நிபந்தனை விதிக்கிறார்கள் என்றால், அரசாங்கத்தின் பலவீனத்தையும், வெளியிலுள்ள மஹிந்த அணியின் பலத்தையும் கணித்துக் கொள்ளுங்கள்.

தேர்தல் முடிந்த கையோடு, கொழும்பிலுள்ள இந்திய, அமெரிக்க தூதரங்கள் அரசாங்கத்திற்கு இரகசியமாக சிவப்பு எச்சரிக்கை தகவலொன்றை அனுப்பியிருந்தன. இனக்கலவரமொன்றிற்கான இரகசிய திட்டங்கள் உள்ளன என அதில் எச்சரித்திருந்தனர்.

அதன்பின்னர்தான் அம்பாறையில் வன்முறை தோற்றுவிக்கப்பட்டது. அங்கு சில கடைகளும், பள்ளிவாசலும் தாக்கப்பட்டது. அம்பாறை கலவரத்திற்கான பகுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னால் இரண்டு காரணங்கள் இருந்தன.

முஸ்லிம் காங்கிரசின் கோட்டைக்குள் கலவரம் நடக்க வேண்டும். அப்படியென்றால்தான், இந்த அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டிய நெருக்கடியை காங்கிரசிற்கு கொடுக்கலாம். கலவரங்கள் ஏற்படுத்திய அதிருப்தியில், அரசிற்கு ஆதரவாக இருக்ককூடாதென மக்கள் அழுத்தம் கொடுப்பார்கள், அப்படியான நிலமையில் அரசிலிருந்து வெளியேறியே தீர வேண்டுமென்ற நெருக்கடி காங்கிரசிற்கு ஏற்படும். காங்கிரஸ் வெளியேறினால், ரிசாட் பதியுதீன் மட்டும் ஒட்டிக்கொண்டிருக்க முடியாது. முஸ்லிம் மக்களை அரசிலிருந்து ஒதுக்கும் மேஜர் புரஜெக்டின் ஆரம்பம் அம்பாறையாகத்தான் இருக்கலாமென நினைத்ததற்கு முதல் காரணம் இது.

இரண்டாவது, முஸ்லிம்கள் செறிந்து பலமாக வாழும் பகுதிதான் கலவரத்திற்கு உகந்தது. அப்படியென்றால்தான் முஸ்லிம்கள் திருப்பி தாக்குவார்கள். முஸ்லிம்கள் திருப்பி தாக்கினால்தான் கலவரத்தை நன்றாக ஊற்றி வளர்க்கலாம்!

### முன்னரே தெரிந்த கண்டி கலவரம்

ஆனால், அம்பாறை கலவரம் எதிர்பார்த்ததைபோல பற்றிக் கொள்ளவில்லை. சில நாட்களில் அடங்கிவிட்டது. அம்பாறை கலவரம் அடங்கிக் கொண்டிருந்த சமயத்திலேயே, சிங்கள புலனாய்வு செய்தித்தளம் ஒன்று எச்சரிக்கை செய்தியை வெளியிட்டிருந்தது. சிங்களவர்களை திருப்பி தாக்ககூடிய, முஸ்லிம் உணர்வுள்ள பிரதேசமொன்றில் பெரிய கலவரமொன்றை தூண்டிவிடும் இரகசிய முயற்சி நடக்கிறது என செய்தி வெளியிட்டிருந்தது. அந்த செய்தி வெளியாகி, மூன்று நாளில் கண்டியில் கலவரம் ஆரம்பித்தது. அதாவது சிங்கள இளைஞர் மீது தாக்குதல் நடப்பதற்கு முன்னரே, கலவரத்திற்கான திட்டம் தயாராகி விட்டது.”

“கண்டி கலவரமும்திட்டமிடப்பட்ட ஒன்றா?”

“ஆம். அதில் சந்தேகம் இல்லை. வெளிப்பார்வைக்கு, சிங்கள இளைஞன் மரணமானதால் ஆத்திரமடைந்தவர்கள் தாக்குதல் நடத்தியதாக தோன்றும். ஆனால் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் யாருமே, மரணமடைந்த இளைஞனின் உறவினர்களோ, பிரதேசத்தை சேர்ந்தவர்களோ கிடையாது. அம்பாறையில் கலவரம் மூண்டால் அழைத்து செல்லப்படுவதற்கு தயாராக்கப்பட்ட கும்பலே கண்டிக்குள் புகுந்து கலவரத்தை பெரிதாக்கியது.

உண்மையில், கண்டியில் நடந்தது தனிப்பட்ட பிரச்சனையொன்று. அதில் சம்பந்தப்பட்டவர்களை சட்டம் தன் வழிமுறையில் கையாண்டு தண்டனை வழங்கும். அந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்களிற்கு, இப்படி நிலைமை மாறுமென தெரிந்திருக்காது. அந்த சம்பவத்தை சாதகமாக பாவித்துள்ளார்கள் சிலர்.

இறந்தவரின் குடும்பத்திற்கும் கலவரகாரர்களிற்குமிடையில் சம்பந்தம் கிடையாது. வெளிமாவட்டத்திலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள்தான் கலவரத்தில் ஈடுபட்டார்கள் என்பதை, அந்த வீடியோவை நன்றாக கவனிப்பவர்கள் தெரிந்துகொள்ளலாம்.

‘இங்கு சிங்கள கடைகளையே காண முடியவில்லையே. எல்லாம் முஸ்லிம் கடைகளாக உள்ளதே’ என அவர்கள் பேசிக்கொள்வது வீடியோக்





கருடன் பக்கம்



கண்டிக்கு சென்ற மட்டக்களப்பு மங்களராமய விகாரதிபதி சுமணரத்ன தேரர்



மட்டக்களப்பில் இருந்து கல்முனைக்கு வேலை நிமித்தம் சென்றவர்கள், கதவடைப்பு போராட்டத்தால் சிக்கிக்கொண்டனர். அவர்களை இளைஞர்கள் பாதுகாப்பாக மட்டக்களப்பிற்கு அழைத்து வந்தனர்.

களில் பதிவாகியுள்ளது. தாங்கள் வேறிடங்களிலிருந்து வந்ததாக சிலர் அதில் சொல்கிறார்கள். அந்த பகுதி பரிச்சயமில்லாமல் திண்டாடுவதும் வீடியோவில் பதிவாகியுள்ளது. ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் இனவன்முறையில் ஈடுபட வாய்ப்பில்லை"

"இது எங்குபோய் முடியும்?"

"இதற்கு இப்போதைக்கு பதில் சொல்ல முடியாது. ஜனாதிபதியாகுவதற்கு சிறுபான்மையினங்களை ஒன்றிணைத்து நல்லதொரு சூத்திரத்தை கடந்த தேர்தலில் உருவாக்கியிருந்தனர். இந்த சூத்திரம் வெற்றியளிக்கும்வரை ராஜபக்சக்களால் ஜனாதிபதியாக கனவு காணவும் முடியாது. இதை நன்றாக தெரிந்ததால்தான், அந்த சூத்திரத்தை உடைக்க முயற்சிகள் நடக்கிறது. சிறுபான்மையினங்களை ஒன்றாக்க எந்த வழிமுறையை கையாண்டார்களோ, அதே வழிமுறையை கையாண்டு, உடைக்கும் முயற்சி நடக்கிறது.

ஆட்சிமாற்றத்திற்கு இனக்கலவரத்தை கருவியாக பாவிப்பது சில தனிநபர்களிற்கு மட்டுமே இலாபத்தை கொடுக்கும். நாட்டிற்கு மீள முடியாத பேரழிவையே கொடுக்கும். இதை மட்டுமே இப்போதைக்கு சொல்லலாம்"

"ம்... வடக்கு அரசியல் களம் எப்படியிருக்கிறது?" கருடரை வடக்கிற்கு இழுத்தோம்.

"முக்கியமான விசயம் ஒன்றுள்ளது. தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, எம்.பி பதவியை இராஜினாமா செய்கிறார்"

"இதென்ன புதுக்குண்டை போடுகிறீர்கள்"

"இது புதுக்குண்டல்ல. பழைய குண்டுதான். ஐந்து வருடத்தின் முன் வெடித்திருக்க வேண்டும். வெடிக்கவில்லை. இப்பொழுதுதான் வெடிக்கிறது"

"விபரமாக சொல்லுங்கள்"

### மாவையின் குண்டு, பழைய குண்டு!

"செப்ரெம்பர் மாதம் மாகாணசபை தேர்தல் அறிவிக்கப்படவுள்ளது. வடமாகாணசபை தேர்தலில் தமிழரசுக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக மாவை களமிறங்கவுள்ளார். அதற்கான முன்னேற்பாடுகள் ஆரம்பித்து விட்டன. வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கு சற்று முன்னதாக அவர் பதவி விலகி விடுவார்.

மாவை சேனாதிராசாவையே அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்குவதற்கு கட்சியின் உயர்மட்ட சம்மதமும் கிடைத்துவிட்டது. கடைசி நேரத்தில் சம்பந்தர் தலையிடாவிட்டால், மாவைதான் தமிழரசுக் கட்சியின் முதல்வர் வேட்பாளர். பங்காளிக்கட்சிகளும் அதை எதிர்க்கப் போவதில்லை. பங்காளி கட்சிகளிடம் சிலபல அதிருப்திகள் இருந்தாலும், அதை அவர்கள் வெளிக்காட்ட மாட்டார்கள். சம்பந்தரின் முடிவு என்ற தடையை தாண்டினால், மாவைதான் முதலமைச்சர்.

அதைவிட சுவாரஸ்யம் சாவகச்சேரி தமிழரசுக்கட்சி அமைப்பாளராக இருந்த அருந்தவபாலனிற்கும் ஒரு இரகசிய செய்தி அனுப்பப்பட்டுள்ளது. மாவை சேனாதிராசா சில மாதங்களில் பதவி விலகி விடுவார், அந்த வெற்றிடத்திற்கு உங்களை நியமிக்கிறோம் என்பதே அந்த தகவல். மாவை தரப்பிலிருந்து சென்றவர்கள் சில தடவைகள் அருந்தவபாலனுடன் பேச்சு நடத்தியுள்ளனர். கட்சியை விட்டு செல்லாதீர்கள், உங்களிற்கு எம்.பி ஆசனம் தருகிறோம் என வாக்களித்துள்ளனர். இதற்கு பின்னர்தான், தமிழ் மக்கள் பேரவைக்குள் செல்வதில் அருந்தவபாலன் தயக்கம் காட்டியுள்ளார்."

"தமிழ் மக்கள் பேரவைக்குள் சிக்கல் என்கிறார்களே?"

"ம்... பெரிய சிக்கல் நடக்கிறது. விரைவில் பெரிய உடைவு நடந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெளியேற வாய்ப்புள்ளது. பேரவையையும், தன்னையும் பயன்படுத்தி தமிழ் தேசிய மக்கள் முன்னணி இலாபமடைகிறது என முதலமைச்சர் யோசிக்க ஆரம்பித்து விட்டார். முன்னணி பலமடைவது ஆபத்தானது, தனது அரசியல் நகர்விற்கு சிக்கலாகிவிடுமென அவர் நினைக்கிறார். அதற்காகவே கடந்த பேரவை கூட்டத்தில் அதிரடி மாற்றங்கள் நடந்தன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியை ஊட்டி வளர்ப்பதில்லையென்ற முடிவை முதலமைச்சர் எடுத்து விட்டார் என்பதை முன்னரும் சொல்லியுள்ளேன். பேரவைக்குள் உள்ள கட்சிகளை இணைத்து மத்திய குழு இருக்கும் நிலையில், கட்சிகளை தவிர்த்து செயற்குழுவை இதற்காகத்தான் நியமித்தார். செயற்குழுவை கடந்த கூட்டத்தில் முதலமைச்சர் அறிவித்தார். பதினொருவர் கொண்ட செயற்குழுவில், த.தே.ம.முன்னணி ஆதரவாளராக ஜனா என்பவரும் ஒருவர். பேரவை செயற்பாட்டில் நீண்டகாலமாக அவர் ஈடுபட்டு வருகிறார். முன்னணியை முதல்வர் தவிர்த்த அதிருப்தியில், சிறிதுகாலம் ஒதுங்கியிருக்க போகிறேன் என முதல்வரிடம் கூறினார். முதல்வரும் உடனடியாக "தாராளமாக ஒதுங்கியிருங்கள். திருகோணமலை கூட்டம் முடிந்ததும் ஒதுங்குங்கள்" என்றார். முதல்வர் அப்படி சொன்னது பலருக்கு அதிருப்தி.

பேரவைக்குள் இருப்பவர்களில் கணிசமான த.தே.ம.மு ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களும் அதிருப்தியில் இருக்கிறார்கள். பேரவைக்குள் இருந்து அவர்கள் வெளியேறினால், அதன் பின்னரே பேரவையின் உண்மையான செயல்திறன் என்னவென்பது தெரியவரும். எழுக தமிழ் போன்ற மக்களை அணிதிரட்டும் இன்னொரு நிகழ்வை அவர்களால் நடத்த முடியுமா என்று தெரியவில்லை.

### தமிழரசுக்கட்சியா, தமிழ் மக்கள் பேரவையும்?

பேரவைக்குள் தனக்கு ஆதரவான பலமான அணியொன்றை உருவாக்க வேண்டுமென முதலமைச்சர் நினைக்கிறார். அதனால்தான் ஐங்கரநேசன், அனந்தி, அருந்தவபாலன் போன்றவர்களை பேரவைக்குள் கொண்டு வந்தார். ஆனால், இவர்களை இணைத்ததும் சர்ச்சையாகியுள்ளது. பேரவைக்குள் கலந்துரையாடாமல் தன்னிஷ்டப்படி முதல்வர் முடிவெடுத்துள்ளார். பேரவைக்குள் இருக்கும் கட்சி தலைவர்களிற்கே கூட்டத்திலன்றுதான், புதியவர்கள் வரும் விசயம் தெரியும். தமிழரசுக்கட்சிக்குள் ஜனநாயகம் இல்லையென விமர்சனம் செய்யும் பலர் பேரவைக்குள் இருக்கிறார்கள். இன்னொரு தமிழரசுக்கட்சி போர்முலாவையா உருவாக்கி வைத்திருக்கிறோம் என பயங்கர அப்செற்றில் இருக்கிறார்கள்.

பேரவை கூட்டத்தில் முதலமைச்சர் ஆற்றிய உரை முழுமையாக அனேக பத்திரிகைகளில் வெளியாகியிருக்கவில்லை. பேரவை செயற்பாட்டில் அங்கம்வகிக்கும் விஜயசுந்தரத்தின் வலம்புரி பத்திரிகையிலும் முதலமைச்சரின் உரைக்கு கத்திரி விழுந்துள்ளது. பேரவைக்குள் புதிதாக வந்தவர்கள் பற்றி முதலமைச்சர் கூறிய விசயங்களை கத்தரித்து விட்டார்கள். இதையும் முதலமைச்சர் குறித்து வைத்துக்கொண்டுள்ளார். தன்னை முழுமையாக ஆதரிக்கும் ஊடகம் ஒன்றுமில்லையென நெருக்கமானவர்களிடம் முதலமைச்சர் வருத்தப்பட்டுமிருக்கிறார்.

முதலமைச்சரின் உரையில் ஐங்கரநேசன், அனந்தி, அருந்தவபாலன் கலந்துகொள்வதாக வாசிக்கப்பட்டபோதும், ஐங்கரநேசன் மட்டுமே கலந்து கொண்டார். அருந்தவபாலனுடன் தமிழரசுக்கட்சி பேச்சு நடத்தியதால் வரவில்லையென கூறப்பட்டாலும், தனிப்பட்ட நிகழ்வொன்றிற்கு சென்றதால் வர முடியவில்லை, அடுத்த கூட்டத்திற்கு வருவேன் என்றுதான் அருந்தவபாலன் தரப்பால் சொல்லப்பட்டுள்ளது. அனந்தி இன்னும் எந்த முடிவையும் எடுக்கவில்லையென அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள். ஆனால், அன்றைய பேரவை கூட்டத்திற்கு அனந்தியின் உத்தியோகபூர்வ பிக்அப் வாகனத்திலேயே, சி.க.சிற்றம்பலம் வந்தார்"



தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
தொடர்புகளிற்கு
ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563
அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562
செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com



# தேவி, மிதுன், போனி கபூர்... ராம் கோபால் வர்மா சொன்னதும் நிஜத்தில் நடந்ததும் என்ன?

'நடிகை ஸ்ரீதேவி, உண்மையிலேயே சந்தோஷமாக வாழ்ந்தாரா அல்லது நிஜத்திலும் நடித்தாரா?' என்று பிரபல இயக்குநர் ராம்கோபால் வர்மா கேள்வி எழுப்பியுள்ளார். ஸ்ரீதேவி, வாழ்க்கையில் பல விஷயங்களில் தோல்வியைச் சந்தித்தவர்தான். கோலிவுட்டுடன் ஒப்பிடுகையில் பாலிவுட் மிகப் பெரியது. பத்மினி, வைஜெயந்தி மாலா, வஹிதா ரஹ்மான், ஹேமமாலினி, ரேகா வரிசையில் தென்னிந்தியாவிலிருந்து சென்று பாலிவுட்டில் மிகப்பெரிய வெற்றிபெற்றவர் ஸ்ரீதேவி. பாலிவுட்டில் 'லேடி சூப்பர்ஸ்டார்' என்ற அந்தஸ்த்தைப் பெற்ற ஒரே நடிகை இவர் மட்டுமே! அவரின் சொந்த வாழ்க்கை அவ்வளவு மகிழ்ச்சியாகவா இருந்தது?

ஸ்ரீதேவி பாலிவுட்டுக்குச் சென்ற சமயத்தில் மிதுன் சக்கரவர்த்தி பொப்புலராக இருந்தார். 'டிஸ்கோ டான்ஸர்' படத்தின் ஹீரோ அவர். அட்டகாசமாக நடனம் ஆடுவார். மிதுனுடன் சேர்ந்து சில படங்களில் ஸ்ரீதேவி நடித்தார். முதலில் மிதுனைத்தான் ஸ்ரீதேவி ரகசியத் திருமணம் செய்தார். மிதுனுக்கோ ஏற்கெனவே திருமணமாகி குழந்தைகள் இருந்தனர். மனைவியின் பெயர் யோகிதா பாலி.

இந்தச் சூழலில், ஸ்ரீதேவியை வெளிப்படையாக 'மனைவி' என்று அறிவிக்கத் தயங்கினார் மிதுன்.

இதற்கிடையே 1975 முதல் 1980 வரை வெளியான ஸ்ரீதேவியின் தமிழ் சினிமாக்களைப் பார்த்து போனி கபூருக்கும் அவர் மீது காதல் மலர்ந்தது. ராம்கோபால் வர்மா எப்படி ஸ்ரீதேவியை வைத்து படம் எடுக்க வேண்டும் என்ற லட்சியத்தோடு சினிமாவுக்குள் நுழைந்தாரோ... அதேபோன்று போனி கபூரும் ஸ்ரீதேவியை வைத்து படம் தயாரிப்பதே லட்சியமாகக்கொண்டார்.

சென்னையில் வசித்துவந்த ஸ்ரீதேவியைச் சந்திக்க முயன்றார் போனி கபூர். அந்தச் சமயத்தில் சிங்கப்பூரில் படப்பிடிப்பில் ஸ்ரீதேவி இருந்ததால், போனி கபூர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்ற கதையும் உண்டு. 1983ம் ஆண்டு வெளியான 'சத்மா' (மூன்றாம் பிறை)வுக்கு முன்னரே இரு இந்திப் படங்களில் நடித்திருந்தார். ஆனால், 'சத்மா' வெளியான பிறகே ஸ்ரீதேவியின் நடிப்பை பாலிவுட் உன்னிப்பாகக் கவனிக்க ஆரம்பித்தது.

இதற்கிடையே போனி கபூருக்குப் பெண் பார்த்தனர், அவரின் பெற்றோர். அந்தப் பெண்தான் மோனா. மிதுன்ஸ்ரீதேவி விவகாரத்தால், போனி கபூர் மோனாவை திருமணம்செய்துகொண்டார். ஆனால், அவரை வைத்து சினிமா தயாரிக்க வேண்டும் என்ற ஆசையை மட்டும் கைவிடவில்லை. படப்பிடிப்பு ஒன்றில் ஸ்ரீதேவியைச் சந்தித்தார். தன் புதுப் படம் பற்றி அவரிடம் கூறினார். அந்தப் படம்தான் 1987ம் ஆண்டு வெளியாகி மெகா ஹிட்டான 'மிஸ்டர் இந்தியா'. இந்தப் படத்தில் நடிக்க 10 லட்சம் ரூபாய் சம்பளம் கேட்டார் ஸ்ரீதேவியின் தாயார் ராஜேஸ்வரி. போனி கபூரோ 11 லட்சம் ரூபாய்க்கு செக் அளித்தார்.

'மிஸ்டர் இந்தியா' படப்பிடிப்பின்போது, மிதுனுக்கும் தனக்குமிடையே இருந்த உறவை போனி கபூரிடம் கூறினார். ஸ்ரீதேவியை 'மனைவி' என்று வெளிப்படையாக மிதுன் அறிவிக்கத் தயாராக இல்லாத நிலையில், போனி கபூரோ அவருக்காக எதுவேண்டுமானாலும் செய்ய தயாராக இருந்தார். போனி கபூரின் ஆறுதல் வார்த்தைகள் அவரைத் தேற்றின. மிதுனிடம் இல்லாத காதலை போனி கபூரிடம் ஸ்ரீதேவி கண்டார். 'நான் கனவில் கண்ட ஆண் அவர்' என்று போனி கபூர் பற்றி ஸ்ரீதேவி கூறுவார். ஸ்ரீதேவி தாயார் ராஜேஸ்வரி வாங்கியிருந்த கடன் முழுவதையும் போனி கபூர் அடைக்க, ஸ்ரீதேவியின் நம்பிக்கையைப் பெற்றார் போனி கபூர். 'மிஸ்டர் இந்தியா'வுக்குப் பிறகு யாஷ் சோப்ரா இயக்கத்தில் வெளியான 'சாந்தினி' சூப்பர் டூப்பர் ஹிட் ஆக, 'லேடி சூப்பர்ஸ்டார்' அந்தஸ்த்தை எட்டினார் ஸ்ரீதேவி.

இதற்கிடையே, போனி கபூருக்கு முதல் மனைவி மூலம் இரு குழந்தைகள் பிறந்திருந்தன. அதில், ஒருவர்தான் தற்போதைய இந்திப் பட ஹீரோ அர்ஜுன் கபூர், நடிகை அன்சூலா கபூர். 1996ம் ஆண்டு போனி கபூர் ஸ்ரீதேவியைத் திருமணம் செய்துகொள்ள, குடும்பத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. போனி கபூரின் மனைவி மோனா, தன் குழந்தைகளுடன் கணவரைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்தார். மோனாவின் தாயார் தன் மகளின் வாழ்க்கையை ஸ்ரீதேவி பாழடித்துவிட்டதாகக் கருதினார். கர்ப்பமாக இருந்த ஸ்ரீதேவியைப் பார்த்த மோனாவின் தாயாருக்குக் கடும் கோபம் ஏற்பட, அவரின் வயிற்றில் கையால் ஓங்கிக் குத்தக்கூட முயன்றார்.

போனி கபூரைத் திருமணம் செய்த ஸ்ரீதேவி, தன் குடும்பத்தை மிகவும் நேசித்தார். ஸ்ரீதேவி இல்லாமல் அந்தக் குடும்பத்தில் அணுவும் அசையாது. போனி கபூருக்கும் ஸ்ரீதேவி மீது வற்றாத காதல். ஸ்ரீதேவி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேகம் எழ முதல் காரணமாக இருந்தது, ஒரு நிகழ்வு!

துபாயில் பிப்ரவரி 20ம் திகதி திருமணம் நடைபெறுகிறது. 22ம் திகதி போனி கபூர் இளைய மகள் குஷியுடன் மும்பை திரும்புகிறார். பிறகு 24ம் திகதி மீண்டும் துபாய்க்கு அவர் தனியாகச் சென்றது ஏன் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது அல்லவா? மனைவிக்கு 'சர்ப்ரைஸ்' அளிப்பதற்காகச் சென்றதாக போனி கபூர் கூறினார். 'இந்த வயதில் என்ன சர்ப்ரைஸ்?' என்ற வினாவும் நமக்குள் எழும். இந்த வயதிலும் அவருக்கு சர்ப்ரைஸ் அளிக்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டியது, மனைவி மீது இருந்த வற்றாத காதல்தான்.

ஸ்ரீதேவியின் மரணம், போனி கபூரின் மூத்த மகன் அர்ஜுன், அன்சூலா ஆகியோருக்கும் கடும் துயரத்தை அளித்தது. தகவல் கிடைத்ததும், சித்தப்பா அனில்கபூர் வீட்டில் தங்கியிருந்த சகோதரிகள் ஜான்வி, குஷியை நோக்கி ஓடோடி வந்து ஆறுதல் அளித்துத் தேற்றினர். பிறகு, சித்தியின் உடலைக் கொண்டு வர, அர்ஜுன் துபாய் சென்று தந்தைக்கு உதவினார். தனி விமானத்தில் சடலத்தை அவர்தான் மும்பைக்குக் கொண்டு வந்தார். இறுதிச் சடங்கு முடிந்த பிறகு, போனி கபூர் கண்ணீருடன் ஒரு ட்விட் போட்டுள்ளார். அதில், 'உலகத்துக்கு ஸ்ரீதேவி சாந்தினி; எங்கள் குடும்பத்துக்கு அவர்தான் எல்லாமே. இந்தச் சமயத்தில் அர்ஜுன், அன்சூலாவின் ஆதரவும் அன்பும் கிடைத்ததை ஓர் ஆசீர்வாதமாகவே கருதுகிறேன். நான், ஜான்வி, குஷி இந்தப் பெரும் இழப்பிலிருந்து மீண்டு வர, அவர்கள் காட்டும் அன்பும் அரவணைப்பும்தான் எங்களுக்கு உதவும்' என்று நெகிழ்வுடன் குறிப்பிட்டுள்ளார்.

முத்துப்பல் சிரிப்பால்தான் ஸ்ரீதேவி ரசிகர்களைக் கட்டிப்போட்டார். பொது நிகழ்ச்சியிலும் முத்துப்பல் தெரிய சிரிப்பார். சிரிப்பவர்கள் எல்லோரும் சந்தோஷமானவர்கள் இல்லையென்று உணர்த்திச் சென்றிருக்கிறார் மயில்!

---

5-ம் பக்க தொடர்ச்சி...

வேறுவேறானவை. அரசியல் இலக்கில் தொடங்கி, அதற்கான அணுகுமுறை வரை இரண்டு தரப்பும் வெவ்வேறு நிலைப்பாடுடையவர்கள். அதாவது தமிழரசுக்கட்சியின் நிலைப்பாட்டிற்கும்,தமிழ்தேசியமக்கள் முன்னணியின் நிலைப்பாட்டிற்கும் உள்ள வித்தியாம் அது. அதனால்தான் முதல்வரின் அரசியல் தமிழரசுக்கட்சி வெர்சன் 2.0 என்றேன். இதில் இன்னொரு விசயத்தையும் கவனிக்க வேண்டும். உள்ளூராட்சி தேர்தலின் பின்னர், தமிழரசுக்கட்சிக்குள்ளும் கடும்போக்காளர்களின் குரல்கள் மேலெழுந்து வருகிறது. அல்லது அப்படியான தொனியில் பேச ஆரம்பிக்கிறார்கள்.

2009 அரசியல் மாற்றத்திற்கு பின்னர் மேலெழுந்த அரசியல்சக்திகள் ஏன் விமர்சனத்திற்கு உள்ளாகின என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். இதில் மாவை சேனாதிராசாவும் ஒருவர். அவர் மீதும் கடுமையான விமர்சனங்களை பலர் வைத்தனர். இதில் மாவை சேனாதிராசாவை



தனித்து குறிப்பிட காரணம் தமிழ் அரசியலில் ஒருகாலத்தில் அதிக ரிஸ்க் எடுத்தவர் அவர். இலங்கையின் அரசியல், நிர்வாக அமைப்புக்களிற்கு உட்படாமல், புதிய அமைப் பொன்றிற்காக கனவு கண்டவர், முயற்சித்தவர். ஆனால், அரசியல் மாற்றத்தில், சமகால சூழலை வந்தடைந்திருக்கிறார்கள்.

அரசியல்ரீதியாக பார்த்தால் மாவை சேனாதிராசாவிற்கும், விக்னேஸ் வரனிற்குமிடையில் எந்த வேறுபாடும் கிடையாது. நிலைப்பாடுகள், வழிமுறைகளில் ஒத்தவர்களாகவே காணப்படுகிறார்கள். சிலசில நுணுக் கமான அம்சங்களில்தான் வித்தியாசம் உள்ளது. மாவை சேனாதிராசா தனது அரசியலின் தொடக்க, மத்திய காலத்தில் எப்படி பேசினாரோ, அப்படி பேசாததே அவரது சறுக்கல். அந்த சறுக்கலை விக்னேஸ்வரன் சந்திக்கவில்லை. காரணம், தற்போதைய தமிழரசியலின் வெகுஜன பலவீன மான சில கூறுகள் அவரிடமில்லை. அதாவது, 'வர்த்தக உற்பத்திகள் சந்தையில் எதிர்பார்த்த வரவேற்பை பெறாத சந்தர்ப்பத்தில், 'அந்த தவறுகளை சரி செய்து, அப்டேற் வெர்சன்கள் வெளியாவதில்லையா, அப்படியான வித்தியாசமே மாவைக் கும், விக்னேஸ்வரனிற்குமிடை யிலான வித்தியாசம். மாவை சேனாதி ராசாவின் அரசியலில் எந்த மாற்றத் திற்குமான அப்டேற்றுக்கும் இனி வாய்ப்பில்லையென்றே தோன்று கிறது. அப்படி பார்த்தால், இருவருக்கு மிடையிலான போட்டியில் மாவை யின் அப்டேற் வெர்சனான விக்னேஸ்வரன்தான் ஜெயிக்க வாய்ப் பிருக்கிறது.

இந்த போட்டியில் யார் ஜெயித் தாலும், தமிழ் அரசியல் அடுத்த ஐந்து வருடத்திற்கும் தமிழரசுக்கட்சி 2.0 அரசியல்தான் நடக்கப் போகிறது!

மினி தொடர் 6

# எய்மர் கடாபி சொல்லியடிக்கும் புலிகளின் தளபதி!

## யுத்தத்தின் இறுதி நிமிடங்கள்.... கட்டுக்கதைகளும் உண்மைக்கதைகளும்






கிளிநொச்சி சர்வதேச செய்தியாளர் மாநாடு. பின்னால் நிற்கிறார் கடாபி

விடுதலைப் புலிகள் தொடர்பாக நிறைய உல்டா கதைகள் உள்ளன. இவற்றில் சில இயல்பாக மக்கள் மத்தியில் உருவாகியிருப்பவை. இன்னும் சில, வெளிநாட்டு ஊடகங்கள் சிலவற்றால், சும்மா அடித்து விடப்பட்டவை. இந்த வகையான "அடித்துவிடப்பட்ட" கதைகள் சிலவற்றை பற்றி இந்த தொடரில் இதுவரை வாசகர்களிற்கு குறிப்பிட்டிருந்தோம். இந்த வாரம் ஒரு மாறுதலுக்காக, புலிகள் பற்றி இயல்பாக மக்கள் மத்தியில் பரவியுள்ள தவறான கதைகளில் ஒன்றை பற்றி குறிப்பிட போகிறோம்.

அதற்கு முன்பாக ஒரு விசயம். இந்த தொடர் வாசகர்களின் அமோக ஆதரவை பெற்றுள்ளது. அலுவலக தொலைபேசி இலக்கங்களிற்கு தொடர்பை ஏற்படுத்தும் வாசகர்கள், பல விசயங்களை குறிப்பிட்டு, அது பற்றிய உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும்படி கேட்டபடியிருக்கிறார்கள். இந்தவாரம் எம்முடன் உரையாடும் வாசகர்கள், அடுத்தவார இதழில் அது பற்றிய கட்டுரையை பெரும்பாலானவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தீபத்தில் வெளியாகும் தொடர்கள் எல்லாமே நீண்ட திட்டமிடலின் பின்னரே வெளியாகும். அதனால்தான் அவை வாசகர்களிடம் வரவேற்பை பெற்றுள்ளன. சில விசயங்களை வாராந்தம் வெளியிட வேண்டியிருக்கும். பொருத்தமான சமயத்தில் வாசகர்கள் கேட்டவற்றையும் எழுதுவோம்.

அதிக வாசகர்கள் எம்மிடம் கேட்ட சந்தேகம் புலிகளின் முக்கிய தளபதி கடாபி தொடர்பானது. கடாபி துல்லியமாக துப்பாக்கியால் சுடுவாராமே என்று தொடங்கி, அவர் நிழலை பார்த்தபடி வானத்தில் பறக்கும் பறவையை சுட்டு விழுத்துவாராம், இன்னொருவரின் தலையில் அப்பிளை வைத்துவிட்டு அதை துல்லியமாக சுட்டாராம், பிரபாகரனுடன் துல்லியமாக சுடும் போட்டியில் ஈடுபட்டாராம் என்று குறிப்பிட்டு, இதெல்லாம் உண்மையா என்று கேட்டார்கள். இன்னும் சிலர், ஒரு காலத்தில் புகழ்பெற்ற தளபதியாக இருந்த கடாபி ஏன் பின்னாளில் ஒதுக்கிவைக்கப்பட்டார்? அவருக்கு என்ன நடந்தது? என கேட்டார்கள். கடாபியை பற்றி அதிகமாக வாசகர்கள் கேட்டிருந்ததால், கடாபி பற்றி விபரமாக குறிப்பிடுகிறோம்.

கடாபி துல்லியமாக சுடுவாரா? இப்படியொரு கேள்வி கேட்டால், அதற்கான பதில் ஆம் என்பதுதான். அதேபோல, எதிரே ஒருவரை நிறுத்தி, அவரின் தலையில் அப்பிளை வைத்துவிட்டு, துல்லியமாக அப்பிளை சுட்டு விழுத்துவாரா என்று கேட்டால், அதற்கான பதில் தெரியாது என்பதாகத்தான் இருக்கும். ஏனெனில், அப்படியொரு விசப்பரீட்சையில் கடாபி என்றுமே ஈடுபட்டதில்லையென்பதே உண்மை.

அப்படியானால், அவர் பற்றி உலாவிய கதைகள் எல்லாம் பொய்யா?

கடாபியின் ஆரம்ப நாட்களில் இருந்து குறிப்பிடுகிறோம். இதை படிப்பவர்களிற்கு எல்லா குழப்பங்களும் தீரும்.

யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கொற்றாவத்தை தான் கடாபி பிறந்த இடம். 1984 இல் விடுதலைப்புலிகளில் இணைந்து கொண்டார். அப்போது கடாபி சிறிய பையன். தமிழ்நாட்டில் 09வதுபயிற்சிமுகாமில்பயிற்சிபெற்றார்.

அப்போது அவரது துப்பாக்கி சுடும் திறன்

பிரபாகரனின் மெய்ப்பாதுகவலர் அணியில் இலக்கு தவறாமல் சுடக்கூடியவர்கள் இருக்க வேண்டுமென நினைத்து, கடாபியையும் மெய்ப்பாதுகாவலர் அணியில் இணைத்தனர். பிரபாகரனிற்கு நெருக்கமாக கடாபி சென்ற சம்பவம் இதுதான்.

அன்றிலிருந்து கிட்டத்தட்ட பதினெட்டு வருடங்கள் பிரபாகரனின் நிழலாக கடாபி இருந்தார். விடுதலைப் புலிகள் அமைப்பில் வேறெவரும், கடாபி அளவிற்கு பிரபாகரனுடன் நெருக்கமாக இருந்ததில்லை. பிரபாகரன் முதன்முதலாக மக்கள் முன் தோன்றியது, சுதுமலை அம்மன் கோயிலில் நடந்த கூட்டத்தில். இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் புலிகளின் நிலைப்பாட்டை அறிவிக்க ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் அது. பிரபாகரன் உரையாற்றும்போது, அருகில் இளைஞனாக நின்றவர் கடாபி.

பிரபாகரன் இறுதியாக பகிரங்கமாக வந்தது, 2002 இல் கிளிநொச்சியில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில். அரசு புலிகள் சமாதான உடன்படிக்கை பற்றி ஊடகவியலாளர்களை சந்தித்து உரையாடினார். அப்பொழுதும் பிரபாகரனிற்கு அருகில் நின்ற மெய்ப்பாதுகாவலர் கடாபிதான்.

ஆனால் ஒரு வித்தியாசம். சுதுமலை கூட்டத்தில், பிரபாகரனின் பாதுகாப்பு அணியின் ஒரு உறுப்பினராக நின்றார். கிளிநொச்சி பத்திரிகையாளர் சந்திப்பில், பிரபாகரனின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்திற்குமே பொறுப்பானவராக செயற்பட்டார்.

பிரபாகரனின் புகைப்படங்கள் எப்பொழுதெல்லாம் வெளியில் வருகிறதோ, அப்பொழுதெல்லாம் கடாபியும் அதிலிருப்பார்.

கடாபியின் துப்பாக்கி சுடும் திறன், பிரபாகரனுடனான நெருக்கம் எல்லாம் சேர, இயல்பாகவே போராளிகள், மக்கள் மத்தியில் பலவித "கதைகள்" உலாவத் தொடங்கின. பிரபாகரனின் பாதுகாப்பு அணியிலேயே கடாபி இருந்தார். விடுதலைப்புலிகள் அமைப்பே மிக இரகசியமானது. அங்கு என்ன நடக்கிறதென்பது வெளியில் தெரியாது. அதிலும், பிரபாகரனின் பாதுகாப்பு அணி இன்னும் பல மடங்கு இரகசியமானது. பாதுகாப்பு அணிக்குள் நடக்கும் விசயங்கள், புலிகளின் மற்றைய படையணிகளிற்குகூட தெரியாது. அவ்வளவு இரகசியமாக வைத்திருப்பார்கள். கடாபி இருந்தது, புலிகளின் பாதுகாப்பு அணியில். எனவே, அவர் பற்றிய தகவல்கள் பல மிகைப்படுத்தியதாகவும், புனையப்பட்டதாகவும் புலிகளின் ஏனைய படையணிகளிற்குள்ளும் பரவியதில் தர்க்க நியாயமுண்டு. புலிகளிற்குள்ளேயே கடாபியை பற்றி இப்படியான "கதைகள்" உலாவியபோது, மக்களிடம் அவை உலாவியதில் வியப்பொன்றுமில்லைத்தானே.

கடாபி பற்றிய உலாவிய மிகைப்படுத்தப்பட்ட கதைகள் சிலவற்றை பட்டியலிடுகிறோம். வானத்தில் பறந்து கொண்டிருக்கும் பறவையை, நிலத்தில் விழும் அதன் நிழலை பார்த்தே கடாபி



சுதுமலையில் பிரபாகரன் உரையாற்றுகிறார். அருகில் கடாபி

தொடர்ச்சி 16-ம் பக்கம்...


# மேம்படுத்தப்பட்ட நுண்ணுயிர்க் கரைசல்!

மேம்படுத்தபட்ட நுண்ணுயிர்க் கரைசல் தயாரிக்கும்முறை இதுதான். 10 அடி நீளம், 4 அடி உயரம், 4 அடி அகலம் என்ற அளவில் சிமெண்ட் தொட்டி கட்டிக்கொள்ள வேண்டும். தொட்டியின் அடியில் கூழாங்கற்களைப் பரப்பி அதன்மேல் நைலோன் வலையைப்போட்டு இழுத்துக்கட்டிக்கொள்ள வேண்டும். வலையின் மேல் 4 அங்குல உயரத்துக்கு மணலைக் கொட்டிப் பரப்பிக்கொள்ள வேண்டும். தொட்டிக்குள் தலா 5 கிலோ அளவு புளிய இலை, கறிவேப்பிலை, ஆவாரஞ்செடி, எருக்கன் இலை, கத்திரிச்செடி, சோற்றுக்கற்றாழை மடல் அல்லது துத்தி இலை, சவுக்கு இலை, கிளரிசீடியா இலை என ஏதாவது ஒரு வகைப் பூ ஆகியவற்றைப்போட்டு, தொட்டியில் 90 சதவிகிதக் கொள்ளளவுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். அடுத்து 50 லிட்டர் பசுமாட்டுச் சிறுநீரைத் தொட்டிக்குள் ஊற்ற வேண்டும்.


10 கிலோ ஈரமான பசுமாட்டுச் சாணத்துடன் 1 கிலோ 'சூடோமோனஸ்' உயிர் உரத்தைக் கலந்து ஒரு கோணிச் சாக்கினுள் போட்டு வைத்துக்கொள்ள வேண்டும். இதேபோன்று 10 கிலோ தாய்ந்த பசு மாட்டுச் சாணத்துடன் 1 கிலோ 'அசோஸ்பைரில்லம்', 10 கிலோ எருமைச் சாணத்துடன் 1 கிலோ 'பாஸ்போ பக்டீரியா', 10 கிலோ குதிரைச் சாணத்துடன் 1 கிலோ 'டிரைக்கோ டெர்மா விரிடி' ஆகியவற்றைக் கலந்து த்னித்தனியான கோணிச் சாக்கினுள் போட்டு வைத்துக்கொள்ள வேண்டும். இதேபோன்று 10 கிலோ ஆட்டு எரு, 10 கிலோ பன்றிச் சாணத்துடன் பிற உயிர் உரங்களைக் கலந்து தனித்தனியான கோணிச் சாக்கினுள் போட்டு வைத்துக்கொள்ள வேண்டும். இந்த ஆறு மூட்டைகளையும் தொட்டிக்குள் இருக்கும் தண்ணீரில் மூழ்குவதுபோலக் கட்டித் தொங்கவிட வேண்டும்.

தலா 10 கிலோ அளவு கனிந்த பப்பாளி, வாழை, மாம்பழம், சப்போட்டாப் பழங்கள் மற்றும் நிலத்தின் ஜீவனுள்ள மண் ஆகியவற்றைத் தனித்தனியாகக் கோணிச்சாக்கில் கட்டித் தொட்டிக்குள் இருக்கும் தண்ணீரில் மூழ்குவது போலக் கட்டித் தொங்கவிட வேண்டும். தலா 5 கிலோ அளவு தேங்காய் பிண்ணாக்கு, கடலைப்பிண்ணாக்கு, கொள்ளுமாவு ஆகிய வற்றைத் தனித்தனியாகக் கோணிச்சாக்கில் கட்டித் தொட்டிக்குள் இருக்கும் தண்ணீரில் மூழ்குவதுபோல கட்டித் தொங்கவிட வேண்டும். இவையனைத்தும் ஒரு வாரம் ஊறினால் மேம்படுத்தப்பட்ட நுண்ணுயிர்க் கரைசல் தயார். 15 நாள்களுக்கு ஒருமுறை ஏக்கருக்கு 200 லிட்டர் அளவு கரைசலைப் பாசன நீருடன் கலந்துவிடலாம். தொட்டியில் சேர்த்த பொருள்களை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்ற வேண்டும். தொட்டியில் கரைசலின் அளவு குறையக் குறைய 50 லிட்டர் பசுமாட்டுச் சிறுநீரை ஊற்றி, அதோடு தொட்டி நிறையும் வரை தண்ணீரைச் சேர்த்துக்கொள்ளலாம். இப்படி மூன்று மாதங்கள் வரை தொடர்ந்து பயன்படுத்தலாம்.

பிறகு, புதிதாக மூட்டைகளைப் போட்டு உருவாகும் கரைசலைத் தொடர்ந்து பயிர் களுக்குக் கொடுக்கலாம். இந்த மாதிரி தொட்டி கட்டி, தொழில்நுட்பத்தைச் செயல்படுத்த சுமார் 45 ஆயிரம் ரூபாய் செலவாகும்.


இயற்கை எரிவாயு தயாரிப்பிற்கான தொட்டி


மூர்த்தி



# அடம்பன் ஒருங்கிணைந்த பண்ணை!

தீபத்தில் பல்வேறு விசயங்கள் வெளியாகின்றன, விவசாயிகளிற் கான பகுதியையும் வெளியிடலாமே என நீண்டகாலமாக வாசகர்கள் பலர் கேட்டு வருகிறார்கள். சில மாதங்களின் முன்னர் தீபத்தில் தென்னை பயிர்ச்செய்கை பற்றிய முழுமையான தொடரொன்று வெளியாகியிருந்தது. அதன் பின்னர் சிறிய இடைவேளைக்கு பின்னர், இப்பொழுது மீண்டும் விவசாயிகளிற்கான பகுதியை ஆரம்பிக்கிறோம்.

இலங்கையிலுள்ள முன்னணி விவசாயத்துறை சார்ந்தவர்கள், விவசாயிகள் இந்த பகுதியில் எழுத வுள்ளனர். விவசாயிகளிற்கான புதிய தொழில்நுட்பங்கள், விவசாய உத்திகள், அனுபவங்களை தீபம் அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்தவாரம் சில அறிமுகங்களை தருகிறோம். மன்னார் அடம்பன் பகுதியில் ஒருங்கிணைந்த பண்ணை யொன்றை நடத்தி வருகிறார் மூர்த்தி. 12 ஏக்கர் நிலத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு என அசத்தி வருகிறார். ஆடு, மாடு, பன்றி, கோழி, வாத்து, காடை, கௌதாரி, மீன் முதலியவற்றுடன் நெல், காய்கறிகளும் உற்பத்தி செய்து வருகிறார். செயற்கை இரசாயனங்கள் எதுவுமே இந்த பண்ணையில் பாவிக்கப்படுவதில்லை. இதனால் தூர இடங்களில் இருந்தும் பண்ணைக்கு பலர் தேடி வருகிறார்கள்.

மீன் வாங்க வருபவர்களிற்கு மீன் கிடைக்காது. தூண்டில்தான் கிடைக் கும். அங்குள்ள குளத்தில் மீன்பிடித்துக் கொண்டு செல்லலாம். அதற்காக சிறிய தொகையொன்றையே அறவிடுகி றார்கள்.

நுண்ணுயிர் கரைசல் உற்பத்தி, இயற்கை கழிவுகளில் இருந்து மின் சாரம் உற்பத்தியென முற்றிலும் சுயசார்பு பண்ணையாக அது இயங்கு கிறது. பண்ணையின் தேவைக்கான மின்சாரம், எரிவாயு என்பன இயற்கை கழிவுகளில் இருந்தே பெறப்படுகிறது. ஒருங்கிணைந்த பண்ணை ஆரம்பிக்க விரும்புபவர்கள், அடம்பன் பண் ணையை ஒருமுறை சென்று பார்வை யிடலாம். மண்புழு உற்பத்திமுறை, பயிர்ச்செய்கை முறைகளில் புதியபுதிய உத்திகளை அங்கு உபயோகிக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் ஒருங்கிணைந்த பண்ணைகள் எதுவும் இதுவரை உருவாகியிருப்பதாக தகவல் இல்லாத சூழலில், ஒரு முன்னுதாரண முயற்சியாக மூர்த்தி அடம்பன் பண்ணையை உருவாக்கி, வெற்றிகரமாக மேலாண்மை செய்து வருகிறார்.

# இப்படித்தான் சாகுபடி செய்யணும்!


தலா ஒரு ஏக்கர் தென்னந்தோப்பில் ஊடுபயிராக அரசாணி மற்றும் தம்புரா சுரைக்காய் ஆகியவற்றைச் சாகுபடி செய்யும் முறை குறித்துக் கோவிந்தராஜன் சொன்ன விஷயங்கள் பாடமாக இங்கே...

பூசணி, சுரைக்காய் இரண்டுக்கும் சாகுபடி முறை ஒன்றுதான். ஒரு ஏக்கர் தென்னந்தோப்பில் 5 தொன் தொழுவுரத்தைக் கொட்டி நன்கு உழுது ஆவணிப்பட்டத்தில் பலதானிய விதைப்பு செய்ய வேண்டும். அவற்றில் பூவெடுத்ததும் மடக்கி உழவுசெய்ய வேண்டும். பிறகு கார்த்திகைப் பட்டத்தில் பூசணி விதைகளை 3 சதவிகித பஞ்சகவ்யா கரைசலில் மூழ்க வைத்து எடுத்து, நிழலில் உலர்த்தி விதைநேர்த்தி செய்து நடவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கர் நிலத்தில் விதைக்க 50 விதைகள் போதுமானவை. பரவலாக பூசணி விதைகளை நடவு செய்து, தென்னை மரங்களுக்கு அமைத்துள்ள சொட்டுநீர்க் குழாய் களிலிருந்து பூசணிக்கும் பாசன வசதி கிடைக்குமாறு வசதி செய்ய வேண்டும்.

விதைத்த 15, 30 மற்றும் 45ம் நாள்களில் களை எடுக்க வேண்டும். 15 நாள்களுக்கு ஒருமுறை 200 லிட்டர் மேம்படுத்தப்பட்ட நுண்ணுயிர்க் கரைசலைப் பாசன நீரில் கலந்து விட வேண்டும். 50ம் நாளில் கொடிகள் மண் தெரியாத அளவுக்கு நிலம் முழுதும் படர்ந்துவிடும். மார்கழி மாதத்தில் பூ எடுக்கத்தொடங்கும்.

இந்த நேரத்தில் தேடி வரும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பெண்ணெய்க் கரைசலைக் கலந்து தெளிக்க வேண்டும். பிஞ்சு பிடிக்கும் சமயத்தில் காய்ப்புழுக்கள் தாக்குதலைச் சமாளிக்க இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய்க் கரைசலைத் தெளிக்க வேண்டும். 90ம் நாளுக்குமேல் காய்கள் பெருத்து அறுவடைக்குத் தயாராகிவிடும். 2 கிலோ முதல் 3 கிலோ அளவு இருக்கும் காய்களை அறுவ்டை செய்யலாம்."






# ஹல்க் ஹோகன், ஸ்டோன் கோல்டு, ஜான் சினா வரிசையில் ரோமன் ரெய்ன்ஸ், சரிப்பட்டு வருவாரா?

WWEயில் 'எரா' எனப்படும் ஒவ்வொரு யுகத்திற்கும் ஒரு தலைவன் உருவாகிக்கொண்டேயிருப்பான். கோல்டன் எராவுக்கு 'இம்மோர்டல்' ஹல்க் ஹோகன், நியூ ஏஜ் எராவுக்கு 'தி ஹிட்மேன்' ப்ரெட் ஹார்ட், ஆட்டிட்யூட் எராவுக்கு 'டெக்ஸாஸ் ரேட்டில் ஸ்நேக்' ஸ்டோன் கோல்ட், ரூத்லெஸ் அக்ரஷன் மற்றும் பிஜி எராவுக்கு 'தி சாம்ப்' ஜோன் சினா போன்றோர் WWEயின் முகமாகவே வளர்ந்து, மல்யுத்த அரங்கிலும் ரசிகர்கள் மனதிலும் திறம்பட கோலோச்சினார்கள்.

அடைமொழி வைத்தவர்கள் அழிந்ததில்லை மக்களே! இவர்களின் வரிசையில் நிகழ்காலத்து 'நியூ' எராவின் தலைவனாக WWE தற்போது முன் நிறுத்துவது, இல்லை இல்லை... தூக்கி நிறுத்துவது ரோமன் ரெய்ன்ஸை. அவருக்கும் ரோமன் எம்பயர் எனும் அடைமொழி உள்ளது. என்ன, ரசிகர்களை திருப்திப்படுத்த தடுமாறிக்கொண்டிருப்பவரின் அடைமொழி, 'வடை'மொழி ஆகிக்கொண்டிருப்பதுதான் இங்கே பெரும் சோகம். உண்மையிலேயே, ரோமன் ரெய்ன்ஸ் அடுத்த தலைவனாகத் தகுதியுள்ளவர்தானா, அவரால் WWEயின் முகமாக வளர முடியுமா? ஆவோ...அடிமட்டம் வரை சென்று அலசுவோம்.

ஷீல்டின் உறுப்பினராக இருந்த போதே ரோமன் ரெய்ன்ஸை 'பவர் ரெஸ்ட்லரா'க உருவகப்படுத்திவிட்டார்கள். 'பவர் ரெஸ்ட்லர்' என்பவர் யாரெனில் எதிரிகளை ஜாக்கிசானைப் போல் பறந்து பறந்து அடிக்காமல், ராஜ்கிரணைப் போல் அடித்துப் பறக்கவிடுபவர். முன்னாள் தலைவர்களான ஹல்க் ஹோகனும் பவர் ரெஸ்ட்லர்தான், ஜோன் சினாவும் பவர் ரெஸ்ட்லர்தான். ஹல்க் ஹோகன், மாமிசமலை ஆன்ட்ரே தி ஜ்யான்டை மல்லாக்கத் தூக்கிப் போட்டதைப்போலவே ஜோன் சினா, பிக் ஷோவை மல்லாக்கத் தூக்கிப்போட்டபோதுதான் 'புது தலைவன் வந்துட்டான்டா' என ரசிகர்கள் ஆர்ப்பரித்தார்கள். ஆனால், ஏன் ரோமன் ரெய்ன்ஸால் அவர்களது இடத்தை நிரப்பத் தடுமாறுகிறார்? காரணம், மூவ்களிலுள்ள வறட்சி. சாமோன் டிராப், பவர் பாம், ஸ்பியர், சூப்பர்மேன் பன்ச் என மொத்தமே 10 மூவ்களைத்தான் மூச்சு முட்ட போட்டுக்கொண்டிருப்பார்.

பவர் ரெஸ்ட்லர்களுக்கு மூவ் குறைவாகத்தான் இருக்கும். ஆனால், இவ்வளவு குறைவாக இருக்கக் கூடாது சாரே. ஸ்பியர் எல்லாம் எட்ஜ், கோல்ட் பெர்க் காலத்திலேயே வழக்கொழிந்துவிட்டது. ரைனோ, பட்டிஸ்டா, பாபி லாஸ்லேவில் ஆரம்பித்து பிக் ஷோ வரை பலபேர் 'ஸ்பியரை' சிக்னேச்சர் மூவாகப் பயன்படுத்தி கசக்கி எறிந்துவிட்டார்கள். 'ஆட்டிட்யூட் அட்ஜஸ்ட்மென்ட்'எனும் சிக்னேச்சர் மூவ் அலுப்புத் தட்ட ஆரம்பிக்கையில் அதற்கு மாற்றாக 'எஸ்.டி.எஃப்' எனும் சப்மிஷன் மூவைக் கண்டு பிடித்துக்கொண்டார் ஜோன் சினா. அந்தத் தெளிவு விரைவிலேயே ரோமனிடம் பிறக்க வேண்டும்.

ஒரு WWE ரெஸ்ட்லர் மல்யுத்தத்தில் மட்டுமல்ல, மைக்கிலும் எதிரிகளைப் பந்தாட வேண்டும். எதிரிகளைக் கலாய்த்துக் கதறவிட்டால்தான் கைதட்டல் பறக்கும். வீரர்கள் கையில் மைக்கோடு வந்தால் நம் ஊரில்தான் சனலை மாற்றிவிடுகிறோம். உண்மையில், ஒரு நல்ல ரெஸ்ட்லருக்கான தகுதியாகப் பேச்சுத்திறமையும் ரெஸ்ட்லிங் வல்லுநர்களால் நிர்ணயிக்கப்படுகிறது. 'இங்கே பேச்சுக்கே இடமில்லை. வெறும் வீச்சுதான்' என வசனம் பேசினால் வந்த வழியிலேயே கிளம்பச் சொல்லி பஸ் காசு கொடுத்துவிடுவார்கள். பட்டிஸ்டா, ரெண்டி ஓற்றன் போன்றோர் கோட்டைவிட்டது மைக்கில்தான். ரோமன் ரெய்ன்ஸ் பேசக் கற்றுக்கொள்ளவில்லை என்றால், அடுத்த பட்டிஸ்டாவாக மாறுவது நிச்சயம். சமீபத்தில் ப்ராக் லெஸ்னரை எதிர்த்து நல்ல ப்ரோமோ ஒன்றை ரோமன் கொடுத்திருக்கிறார், நம்புவோம்!

இரண்டாவது, முன்னணி வீரனாக இருப்பவர் பேசிப் பேசியே புதுப்புது பன்ச் வசனங்களை உருவாக்க வேண்டும். அப்போதுதான் அந்த வசனங்கள் பொறிக்கப்பட்ட பொருள்கள் ஏகபோகமாய் விற்பனையாகும், WWE நிறுவனமும் லாபம் சம்பாதிக்கும். இதற்குமுன் WWEயின் முகமாக இருந்தவர்கள் அனைவருமே இதனை செம்மையாய் செய்துகாட்டியவர்கள். 'வாட்', 'தட்ஸ் தி பாட்டம் லைன். பிகாஸ், ஸ்டோன் கோல்ட் ஸெட் ஸோ...', 'ஆஸ்டின் 3:16' என ஸ்டோன் கோல்ட் எக்கச்சக்க வசனங்களை உதிர்த்து, மிகவும் லாபகரமான வீரராக வலம் வந்தார். 'பிரதர்' என்ற வார்த்தையைக் கேட்டாலே நமக்கு ஹல்க்ஹோகன் ஞாபகம்தான் வருகிறது. 'வேர்டுலைஃப்', 'நெவர் கிவ் அப்', 'ஹஸ்ட்ல், லாயல்டி, ரெஸ்பெக்ட்', 'ரைஸ் அபோவ் ஹேட்' என ஜோன் சினாவின் வசனங்கள் கொண்ட பொருள்களும் ஒருகாலத்தில் பரபரப்பாக விற்றுத்தீர்ந்தன. இன்றும் விற்றுக்கொண்டிருக்கின்றன. ஜோன் சினாதான் இப்போதும் மெர்சன்டைஸ் மன்னன்!

ஹல்க் ஹோகன் WWEயின் முகமாக இருந்த காலத்திலும் அல்டிமேட் வாரியர், மாச்சோ மேன், ஆன்ட்ரே தி ஜ்யான்ட் எனப் பலருக்கும் பெரும் ரசிகக்கூட்டமே இருந்தது. ஆட்டிட்யூட் எராவின் முகம் ஸ்டோன் கோல்ட்தான் என்றாலும், தி ரொக், ட்ரிபிள் ஹெச், கர்ட் ஆங்கிள், ஹார்டி பாய்ஸ், க்றிஸ் ஜெரிக்கோ, எட்ஜ் என மற்ற வீரர்களும் புகழின் உச்சத்தில் இருந்தார்கள். அதே போல், ரூத்லெஸ் அக்ரஷன் மற்றும் பிஜி எராவின் முகம் ஜோன் சினாதான் என்றாலும் பட்டிஸ்டா, ப்ராக் லெஸ்னர், ரெண்டி ஓற்றன், ரே மிஸ்டிரியோ என மற்றவர்களும் பிரபலமான வீரர்களாக வலம் வந்தனர். ஆனால், மற்றவர்களிடமிருந்து ஜோன் சினா, ஹல்க் ஹோகன் மற்றும் ஸ்டோன் கோல்டை தனித்துக் காட்டியது அவர்களது கிம்மிக். ஜோன் சினா மிகவும் கூலான ராப் பாடகர் என்றால், ஸ்டோன் கோல்ட் முதலாளியையே போட்டுப் பிளக்கும் ஆன்டி ஹீரோ. இப்படி கிம்மிக்கிலிருந்த திடம்தான் மற்றவர்களிடமிருந்து அவர்களைத் தனித்துக் காட்டியது. ஆனால், ரோமன் ரெய்ன்ஸின் கிம்மிக்கோ மிகவும் பலவீனமானது. ஷீல்டின் உறுப்பினராக ஓகே. தனி ஆளாக, ரோமன் ரெய்ன்ஸாக அவரது கிம்மிக்

தொடர்ச்சி 16-ம் பக்கம்...



## இப்படியும் நடக்குமா?

# தலைசுற்றவைக்கும் ஆயுத சப்ளை ஒப்ரேஷன்!

### புலனாய்வு அதிகாரியின் ராஜதந்திர விளையாட்டு!

வெளிநாட்டு தலைவர்களை "போடுவதற்கு" அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ செய்த இரகசிய ஒப்ரேசன்கள் பற்றிய தொடரை கடந்த சில வாரங்களாக வெளியிட்டு வந்திருந்தோம். அதில் இன்னும் சில சுவாரஸ்ய சம்பவங்கள் உள்ளன. ஆனால், அதை எழுதுவதற்கு முன்னர், இன்னொரு மினி சீரிஸ் ஒன்று தொடங்கலாமென உத்தேசித்துள்ளோம். தொடர்ந்து ஒரேவிதமான ஒப்ரேசன்களை படிப்பதால் வாசகர்களிற்கு அலுப்பு தட்டலாமல்லவா, அதனால்தான்!

இம்முறை நாம் குறிப்பிட இருப்பது இஸ்ரேல் புலனாய்வு அமைப்பாக மொசாட் செய்த இரகசிய ஒப்ரேசன் ஒன்று பற்றி. பயங்கர த்ரில்லரான இந்த ஒப்ரேசன், வாசகர்களிற்கு நிச்சயம் விருந்தளிக்கும்.

இந்த தொடரை எங்கிருந்து ஆரம்பிப்பது என யோசித்தபோது, டேவிட் கிம்சியில்இருந்து ஆரம்பிப்பதே முறையென தோன்றியது. அப்படியே ஆரம்பிக்கிறோம்.

யாரிந்த டேவிட் கிம்சி?

மொசாட்டில் இருந்து மிகப்பிரபல்யமான, முக்கிய புள்ளி. மொசாட்டின் முக்கிய பல நடவடிக்கைகளை திட்டமிட்டவர். ஆனால், சிலபல காரணங்களால் மொசாட்டைவிட்டு சிறிது காலம் வெளியில் இருக்க விரும்பினார்.அதற்குசரியான காரணம் யாருக்கும் தெரியாது. மொசாட்டின் தலைமையில் ஏற்பட்ட மாற்றம்தான் காரணமென்றும், அவருக்கு உரிய அங்கீகாரம் கிடைக்காத விரக்தியே காரணமென்றும் பலவிதமான கதைகள் உலாவுகின்றன. உண்மை கிம்சிக்கும், மொசாட் அதிகாரிகளிற்கும் மட்டுமே தெரியும்.

ஆனால் கிம்சி போன்ற ஒரு அதிகாரியை வெளியே விட இஸ்ரேல் விரும்புமா? இல்லை. யாராவது முட்டாள் அரசுதான் அப்படி செய்யும். கிம்சிக்காக அதிகபட்ச விட்டுக்கொடுப்பை இஸ்ரேல் செய்தது. "நீங்கள் மொசட்டை விட்டு போகிறேன் என்ற முடிவுடன், இஸ்ரேலை விட்டோ, அரசதுறையை விட்டோ போகவேண்டியதில்லை. விருப்பமான இன்னொரு துறையில் வேலை செய்யுங்கள். சில காலத்தின் பின்னர், மீண்டும் மொசாட்டுடன் வேலை செய்யலாமென தோன்றினால் தாராளமாக திரும்பி வாருங்கள்" என்றார்கள்.

இப்படியாக கிம்சி மாறியது இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சிற்கு. அங்கு உயர்பதவியொன்றில் நியமிக்கப்பட்டார்.

வெளியுறவு அமைச்சிற்கு சென்றவர், வெளியுறவு அமைச்சின் வேலைகளைத்தானே செய்வார். அப்படித்தான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் கிம்சி செய்ததோ, மொசாட் செய்யும் வேலையை!

இஸ்ரேல் வெளியுறவுத்துறைக்கு மாற்றப்பட்ட மொசாட் அதிகாரியான கிம்சி, இஸ்ரேல் வெளியுறவுத்துறையில் இருந்தபடி, மொசாட் செய்யும் வேலையை செய்தார். அதுவும் தனது எதிரிநாட்டுக்கு ஆயுதம் சப்ளை செய்தார். கேட்கவே வில்லங்கமாக இருக்கிறதல்லவா, அடுத்த சில வாரங்களிற்கு சுவாரஸ்யத்திற்கு பஞ்சமில்லாத தொடரொன்றை தருகிறோம்.

கிம்சி வெளியுறவு அமைச்சுக்குள் சென்ற சில வாரங்களிலேயே அமெரிக்காவில் மிகப் பெரிய அரசியல் பூகம்பம் ஒன்று ஏற்பட்டது. வாட்டர் கேட் ஊழல். அரசு மட்டுமல்ல, அமெரிக்க புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏயும் சிக்கலில் மாட்டியது.

வாட்டர்கேட் ஊழல் என்னவென்பதை மேலோட்டமாக குறிப்பிடுகிறோம். 1970களில் அமெரிக்க ஜனாதிபதியாக நிக்சன் இருந்த சமயத்தில், இந்த சம்பவம் நடந்தது. நிக்சன் குடியரசு கட்சியை சேர்ந்தவர். தேர்தல் சமயத்தில, எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் தேர்தல் உத்திகளை அறிய, அவர்களின் கட்சி தலைமையகத்திற்குள் திருட்டுத்தனமாக நுழைந்து சில தில்லாலங்கடி வேலைகளை செய்திருந்தார்கள். இது அம்பலமாக, நிக்சன் பதவியை விட்டே விலக வேண்டியதானது. நிக்சனிற்காக ஒட்டுக்கேட்கும் வேலையை செய்தது சி.ஐ.ஏ!

வாட்டர்கேட் ஊழலில் ஜனாதிபதி நிச்ஸன் பதவி இழந்துவிட, அடுத்த ஜனாதிபதியாக பதவியேற்றவர் ரொனால்ட் ரீகன்.

அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கு வந்த ரீகன், சி.ஐ.ஏ என்றால் கொஞ்சம் அலர்ஜியானார். இயன்றவரை அவர்களை ஒதுக்கினார். சி.ஐ.ஏ போன்ற அமைப்புக்கள் வெளிநாட்டில் இரகசிய கொலை, கடத்தல் மட்டுமே செய்ய லாயக்கு என்பதுதான் ரீகனின் எண்ணம். அரசியல் விவகாரங்களில் தலையிட்டால், வாட்டர் கேட் மாதிரி சொதப்பும் என நினைத்தார்.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி ஒருவரால் சி.ஐ.ஏ.வை தள்ளி வைத்துவிட்டு தாக்குப்பிடிக்க முடியுமா? அதுவும் முக்கியமாக வெளிநாடுகளில் சி.ஐ.ஏ. இல்லாமல் ஏதாவது இரகசிய ஒப்ரேஷன்களை செய்ய முடியுமா?

இந்த கேள்வியிலேயே, இந்த சுவாரஸ்ய தொடர் அடங்கியுள்ளது.

புதிதாக அமெரிக்க ஜனாதிபதியான ரீகனால் சி.ஐ.ஏ.வுக்கு புதிய தலைவராக கொண்டுவரப்பட்டவர் வில்லியம் கேசி. இவர் இஸ்ரேலுக்கு நெருக்கமானவர் அல்ல. இதனால், இவரை கோர்னர் செய்வதற்காக மொசாட்டில் ஒரு தனி பிரிவே அமைக்கப்பட்டது.

சி.ஐ.ஏ. என்ன செய்கின்றது என்பதை உளவு பார்ப்பதுதான் அவர்களின் வேலை!

சி.ஐ.ஏ. ஆப்கானிஸ்தானிலும், மத்திய அமெரிக்காவிலுள்ள சில நாடுகளிலும் தீவிரமான சில ஒப்ரேஷன்களை செய்து கொண்டிருந்த நாட்கள் அவை. அந்த ஒப்ரேஷன்களில் சி.ஐ.ஏ. இரகசியமான சில அரசியல் கொலைகளையும் செய்தது. (சி.ஐ.ஏ செய்த வெளிநாட்டு தலைவர்கள் கொலை தொடரில் அதை படித்திருக்கலாம்) மொசாட் இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தது.

டேவிட் கிம்சி மொசாட்டில் இருந்து வெளியே வந்து வெளியுறவு அமைச்சில் இணைந்து விட்டிருந்தாலும், மொசாட்டில் அவருக்கு தொடர்புகள் இருந்தன. அந்த விதத்தில், புலனாய்வுத்துறைகளிற்குள் நடப்பவை எல்லாமே, அவருக்கு அப்டேட் ஆகிக்கொண்டிருந்தன.

கிம்சி வெளியுறவு அமைச்சுப் பணிக்கு வந்து சில மாதங்களில், இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சு மிக முக்கியமான முடிவு ஒன்றை எடுத்து, இஸ்ரேலியப் பிரதமரிடமும் அதற்கான அனுமதியை பெற்றது. அதைத்தான், எதிரிநாட்டுக்கே ஆயுத சப்ளை செய்த தொடரென ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தோம்.

டேவிட் கிம்சி

அந்த எதிரிநாடு எது தெரியுமா?

ஈரான்!

இதை பலருக்கு நம்புவது கடினமாக இருக்கும். ஈரானிய இலக்குகள் மீது இஸ்ரேல் விமானப்படை அதிரடி தாக்குதல் நடத்தியது, இரண்டு நாடுகளும் நேரடியாக போர் புரிந்தது என இரண்டு நாடுகளும் கீரியும், பாம்புமாக இருந்தன. அப்படியிருக்க, இஸ்ரேல் இரகசியமாக ஈரானுக்கு ஆயுத சப்ளை செய்ததென்றால், யாரால் நம்ப முடியும்?

ஆனால், அதுதான் உண்மை.

ஈரானுக்கு இஸ்ரேல் எதிரிதான்


தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# கடைசிநாளில் வண்ணத்துப்பூச்சிப் பூங்கா

உலகம் சுற்றிப் பார்ப்போம் 21

சாள்ஸ் ஜே போர்மன்

பெதலூடா [Petalouda] என்றால் கிரேக்க மொழியில் வண்ணத்துப் பூச்சி என்று அர்த்தம். சுவீடனுக்கு திரும்பும் நாளுக்கு முதல்நாள் நாங்கள் சுற்றிப்பார்க்க திட்டமிட்டிருந்த இடம் பெதலூடஸ், அதாவது வண்ணத்துப்பூச்சி பூங்கா.



காலையில் எட்டு மணிக்கே பூங்கா திறக்கப்பட்டுவிடும் என்பதை அறிந்து கொண்டபோதே அதைத் திறக்கும்போதே போய்விட்டால்தான் சுற்றுலாப் பயணிகள் நிறையப்பேர் வர முதல் அமைதியான சூழலை இடைஞ்சலில்லாமல் ரசிக்கலாம் என்று முடிவு செய்துகொண்டோம்.

எங்கள் விடுதியிலிருந்து சுமார் 25 கி.மீ தூரத்தில் இருந்தது அந்த அழகான காட்டுப்பகுதி. பச்சைப்பசேலென்ற அடந்த காட்டுமரங்கள் எங்களை சில கி.மீ தூரத்திலிருந்தே உள்வாங்கிக் கொண்டன. கடற் பிரதேசத்திலில் அக்காலையிலேயே உணர்ந்த வெக்கைக் காற்றின் ஞாபகமேயின்றி இதமான குளிர் காற்று எங்களை வருடிச் சென்றது.

ஒரு பள்ளத்தாக்கிலிருக்கும் ஸீதியா என்ற அந்த காட்டுப்பகுதியை பெலகானோஸ் என்ற அருவி செழிப்பாக்கி வைத்திருக்கிறது. நாங்கள் போன மாதங்கள் அப்பிராந்தியத்தின் வரண்ட காலம் என்பதால் அவ்வருவிதான் வழக்கமாகப் பாயும் வண்டல் மண்ணின் ஈடே ஊர்ந்து கொண்டிருந்தது. ஆங்காங்கே அவ்வருவி தன் நிறைமாத சந்தர்ப்பங்களில் ஏற்படுத்தி வைத்திருந்த நீர்த்தேங்கங்களும் பாசியுடன் வரண்டு கிடக்க அதற்குள் சில தவளைகள் விளையாடிக்கொண்டிருக்க, பறவைகள் தாகம் தீர்த்துக் கொண்டிருந்தன.



பெதலூடஸ் என்பது அந்த வண்ணத்துப்பூச்சிப் பூங்காவின் பெயர் மட்டுமல்ல, அப்பிராந்தியத்திலுள்ள பல சிறு கிராமங்களையும் உள்ளடக்கிய நகரின் பெயரும்தான் என்பதை அங்கேதான் தெரிந்து கொண்டேன்.

வாகனங்கள் நிறுத்துமிடத்தில் காரை நிறுத்திவிட்டு எங்கள் பையையும் எடுத்துக்கொண்டு கீழிறங்கினோம். காலை உணவும், குடிப்பதற்கான நீரும் கொண்டு வந்திருந்தோம். அது ஒரு பாதுகாக்கப்படும் காட்டுப் பிரதேசமென்பதால் பூங்காவுக்குள் இருக்கும் உணவு விடுதியை தவிர வேறெதுவும் கிடைக்காது.

பூங்காவை நெருங்க முதல் வாசலில் ரோடோஸின் இயற்கை சரித்திர அருங்காட்சியகத்தை காண முடிந்தது. அதைப் பிறகு பார்க்கலாம் என்று முடிவு செய்து கொண்டு பூங்கா வாசலில் சென்று நுழைவதற்கான கட்டணம் செலுத்தி சீட்டை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தோம்.

இப் பிராந்தியத்தில் வருடத்தின் 6 8 வது மாதங்களில் Jersey Tiger Moth என்ற ஒரு வகையான வண்ணத்துப்பூச்சி படையெடுத்து வருகிறது. காரணமாக இருப்பவை இங்கிருக்கும் முக்கிய தாவர வகையாகும்.

ஓரியண்டல் ஸ்வீட்கம்–டர்க்கிஷ் ஸ்வீட்கம் என்றழைக்கப்படும் இந்த மரங்கள் தென்மேற்கு துருக்கி, ரோடோஸ் பகுதியில் முக்கியமாகக் காணப்படுகின்றன. இதன் தாவரவியல் பெயர் Liquidambarorientalis ஆகும். இலையுதிர் காலங்களில் மிக அழகான சிகப்பு, மஞ்சள் கலந்த நிறங்களில் மாறி அதன்பின் தமது இலைகளை இவை உதிர்த்தி விடுகின்றன.

சுமார் முப்பது மீற்றர் உயரத்துக்கு வளரும் இம்மரங்களின் அடிப்பகுதி ரப்பர் மரங்களின் அளவுள்ளவை. இம் மரங்களில் இருந்து வழியும் ரசமும் அதன் வாசமும்தான் குறிப்பிட்ட வண்ணத்துப்பூச்சி இனத்தை இப்பிராந்தியத்தை நோக்கி ஈர்த்து வருகிறது.

அழகான சிறிய மரப்பாலங்கள், கீற்றாக ஓடும் நீரூற்றுக்கள், ஆங்காங்கே சிறிய நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றால் நிறைந்திருந்தது அந்தப் பூங்கா. மிக அடர்ந்த காடுகளின் ஊடாகச் சில இடங்களில் மட்டுமே சூரிய வெளிச்சம் நிலத்தைத் தொடுகிறது.

பூங்கா ஆரம்பிக்கும் பகுதியில் ஆங்காங்கே ஓரிரு வண்ணத்துப் பூச்சிகள்தான் எங்களைச் சுற்றிப் பறந்தன. “அட இதுக்குத்தானா இத்தனை விளம்பரம் செய்துகொள்கிறார்கள்” என்று சிரித்துக்-கொண்டு சொன்னபடி கதிர் அவைகளின் பின்னால் ஓடிக்கொண்டிருந்தான்.

ஆனால் அப்பள்ளத்தாக்கு பிரதேசத்தில் நடக்க, நடக்க வண்ணத்துப் பூச்சிகள் எங்களை முகத்தில் அறைவது போல பறந்து கொண்டிருந்தன. சில இடங்களில் மரங்களை, போடப்பட்டிருந்த மரப்பாலங்களையெல்லாம் வண்ணத்துப் பூச்சிகள் தங்களுடலால் நிறம் மாற்றியிருந்தன.

ஆறாம் மாதத்தில் தங்கள் புழு உடலிலிருந்து பறக்கும் பூச்சிகளாகிவிடும் இவ்வினங்கள் இரவுகளில்தான் சாதாரணமாக பறக்கின்றன. சுமார் 25 கி.மீ தூரம்வரை பறந்து குளிர்மையான பிரதேசத்தில் அதையடுத்த மாதங்களில் வாழ்கின்றன. பகலில் இவை அதிகம் பறப்பதில்லை என்பதால்தான் அங்கிருந்த மரங்களிலெல்லாம் அசையாமல் ஒட்டிக்கொண்டிருந்தன. மத்தியதரைக் கடல் பிரதேசத்தில் பெரும்பாலும் காணக்கூடிய இவ் வண்ணத்துப்பூச்சி இனம் இங்கிலாந்திலும் காணக் கூடியதாக இருக்கிறது.

“ஓரியண்டல் ஸ்வீட்கம்” மரங்களில் இருந்தும்தான் நாங்கள் வாய்க்குள் வைத்துச் சப்பும் சுயிங்க்த்துக்கான முக்கிய மூலப்பொருள் எடுக்கப்படுகிறது என்பதையும் பூங்கா வாசலிலிருந்த இயற்கைச் சரித்திர அருங்காட்சியகத்தில் அறிந்துகொள்ள முடிந்தது.

இம்மரங்களின் அடிப்பகுதியில் வெட்டி அதிலிருந்து வடியும் ரசம் சேமிக்கப்படுகிறது. பொதுவாக Liquidambar என்ற இனத் தாவரத்தின் ரசத்தைக் காய வைத்து அதிலிருக்கும் மூலப்பொருளைத்தான் நாம் மெல்லும் பசைக்காகப் பயன்படுத்துகிறார்கள்.

இதன் சரித்திரம் ருசிகரமானது. இன்றைய சுயிங்கம் 20 நூற்றாண்டில் தற்செயலாக உண்டாக்கப்பட்டு வேறு பொருட்களுடன் கொடுக்கப்பட்ட இலவசப் பொருளாக இருந்தது. மரப்பட்டைகளைச் சப்பும் பழக்கமோ வட ஐரோப்பியர்களிடையே சுமார் 9000 வருடங்களுக்குமுன்னரே இருந்தது. அவர்கள் பெர்ச் மரப்பட்டைகளை அவற்றிலிருக்கும் மருத்துவக் குணங்களுக்காக சப்பினார்கள். அதை தவிர வட ஐரோப்பியக் கடுங் குளிர் மாதங்களில் உணவுப் பற்றாக்குறை நிலவியதால் மரப்பட்டைகளில் இருக்கும் சக்திக்காக அதைச் சப்பினார்கள்.

ரோடோஸ், துருக்கிய பிராந்தியங்களில் மரங்களில் இருந்து எடுக்கப்படும் சாறு மெல்லும் பசை தவிர எண்ணெய்க்காகவும் பாவிக்கப்படுகிறது. இது பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஒரு முக்கிய வியாபாரப் பொருளாக விளங்குகிறது.

வண்ணத்துப் பூச்சிப் பூங்காவின் அழகும், நேர்த்தியும், ரம்யமான சூழலும் மணித்தியாலங்கள் சில கடந்

தொடர்ச்சி 24-ம் பக்கம்...

---

என்றாலும், இஸ்ரேலைவிட ஈரானின் மிக ஆபத்தான எதிரியாக ஈராக் இருந்தது. அதே ஈராக், இஸ்ரேலுக்கும் சிக்கலான எதிரியாகவும் இருந்தது. ஈரானை பலப்படுத்தினால், ஈராக்கை கட்டுப்படுத்தலாமென இஸ்ரேல் நினைத்தது. ஈரானை ஆயுதரீதியில் பலப்படுத்தினால், சில சமயங்களில் ஈராக் மீது தாக்குதலையும் அது தொடங்கலாம். அல்லது அந்த ஆயுதம் கொடுக்கும் லிங்கின் மூலம், ஈராக்கில் உள்ள சியாக்களிற்கும் ஆயுதம் கொடுத்து, அங்கு உள்நாட்டு சிக்கலை ஏற்படுத்தலாமென நினைத்தது.

ஜேர்மனியில் நடந்த மாநாடொன்றில் பல நாடுகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். அதில் இஸ்ரேலும், ஈரானும் அடக்கம். கிம்சீயினால் விசேடமாக அனுப்பப்பட்ட ஆள் ஒருவரும் இஸ்ரேல் குழுவில் இருந்தார்.

ஈரான் அதிகாரிகளுடன், அவர் நெருக்கத்தை ஆரம்பித்தார். “உங்களிற்கு சில உதவிகள் செய்யலாம்” என்ற தகவலையும் அனுப்பினார்.

ஈரான் வெளியுறவுத்துறைக்கு இந்த தகவல் பாஸ் செய்யப்பட்டது. இஸ்ரேல் இரகசியமாக நேசக்கரம் நீட்டும்போது ஏன் உதற வேண்டுமென நினைத்தார்கள். சரி, பேசித்தான் பார்ப்போம் என முடிவெடுத்தார்கள். இரண்டு தரப்பும் இரகசியமாக நேரில் சந்திப்பதென முடிவாகியது.

எங்கு சந்திப்பது? பயங்கர எதிரிகளான இரண்டு நாட்டு பிரதிநிதிகளும் பேச்சு நடத்திய செய்தி லீக் ஆனால், சொந்த நாட்டு மக்களே காறித்துப்ப மாட்டார்களா? (தொடரும்)

சூட்டிங் ஸ்பொட்



ஜகஜால கில்லாடி




காத்தாடி







## சினி விமர்சனம்




நடிப்பு: அசார், சஞ்சிதா ஷெட்டி, சிங்கப்பூர் தீபன், ஈதன், யோகி பாபு.

ஒளிப்பதிவு: வம்சிதரன் முகுந்தன்

இசை: ஏ.ஆர்.ரெஹானா

தயாரிப்பு: யோகி அன்ட் பார்ட்னர்ஸ்

இயக்கம்: விக்னேஷ் கார்த்திக்

நடுத்தரமான குடும்பம், அன்பான அம்மா, அதட்டலான தங்கை, கண்டிப்பான அப்பா என்று, அக்மார்க் தமிழ் சினிமா ஹீரோ குடும்பம் தான் இந்தப் படத்தின் ஹீரோ அசாருடையது. உருப்படாதவன் பட்டம் இருந்தாலும்; சீரியசாக வேலையும், காதலும் தேடுகிறார். காதலியாக சஞ்சிதா ஷெட்டி கிடைக்கிறார். காதல் கைகூடி திருமணமும் நிச்சயமான பிறகு வருகிறது அந்த வில்லங்கம். அசரீரியாகக் கேட்கும் குரல், அசாரை வழிநடத்த ஆரம்பிக்கிறது. கிழவியிடம் அடி வாங்கு, தற்கொலைக்கு முயற்சிக்கும் பெண்ணைக் காப்பாற்று, பிரியும் தம்பதிகளைச் சேர்த்து வை என்று, நிறைய டாஸ்க் கொடுக்கிறது.

எல்லாவற்றையும் சிரமப்பட்டுச் செய்து முடிக்கிறார், அசார். கடைசியாக ஒரு டாஸ்க் வைக்கிறது. அதாவது, ஒரு பெண்ணை சுட்டுக் கொல்லச் சொல்கிறது. அந்தப் பெண், அசார் மணக்கவிருக்கும் சஞ்சிதா ஷெட்டி. பிறகு என்ன நடக்கிறது என்பது மீதி கதை. இரண்டு மணி நேரம் சிரிக்க வைக்க வேண்டும், சிறிது பயமுறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், லாஜிக் பற்றி எந்தக் கவலையுமின்றி காமெடியும், திகிலும் கலந்துகட்டி அடிக்கிறார்கள். புதிதாக எதையும் யோசிக்காமல், எல்லோரும் பயணித்த அதே பாதையில்தான் இவர்களும் பயணித்து இருக்கிறார்கள். கொஞ்சம் பயமும், கொஞ்சம் சிரிப்பும் வருகிறது.

அசாருக்கு காமெடி நன்றாக வருகிறது. அவரது நண்பராக வரும் சிங்கப்பூர் தீபனும் தன் பங்குக்கு சிரிக்க வைக்க முயற்சிக்கிறார். சில காட்சிகளில் வந்தாலும், இருவரையும் தூக்கிச் சாப்பிட்டுவிட்டுப் போகிறார் யோகி பாபு. அவர் தோன்றுகின்ற அந்த டி.வி எபிசோட், 'நான் ஸ்டாப்' காமெடி ரகம். சஞ்சிதா ஷெட்டிக்கு அதிக வேலையில்லை. ஒளிப்பதிவாளரும், இசை அமைப்பாளரும், இது காமெடி படம்தானே என்று அதிகம் மெனக்கெடவில்லை. என்றாலும், பின்னணி இசையில் ஏ.ஆர்.ரெஹானா கவனம் ஈர்க்கிறார். 'ஏண்டா கதையில காமெடி வெக்கல' என்று யாரும் கேட்டுவிடக்கூடாது என்பதில் மட்டும்தான் அக்கறையாக இருந்திருக்கிறார்கள்.

# சின்னத்திரை



### ரியல் வேலுநாச்சி

சின்னப்பாப்பா பெரியபாப்பா, டார்லிங் டார்லிங், சரவணன் மீனாட்சி தொடர்களில் நடித்து, குறுகிய காலத்தில் எல்லோரையும் திரும்பி பார்க்க வைத்தவர் விஜே சித்ரா. ஜீ டான்ஸ் லீக் நிகழ்ச்சியில் நடனத்தில் வெளுத்துக்கட்டினார். கொஞ்சநாளாக அனைத்து மீடியாவிலிருந்தும் ஒதுங்கியிருந்தவர், கலர்ஸ் டிவியின் மூலம் திரும்பி வந்திருக்கிறார். அதில் ஒளிபரப்பாகும் வேலுநாச்சி சீரியலில் சித்ரா நடிக்கிறார். வேலுநாச்சியாகவும் அவர்தான் நடிக்கிறார். இந்த சீரியல் இளைஞர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெறுமென நம்புகிறார். உடல் எடையை எட்டு கிலோ குறைத்து, சிலம்பம், மரம் ஏறுதல், களை வெட்டுதல் என பலவற்றை கற்ற பின்னரே சீரியல் ஆரம்பித்திருக்கிறார்கள். சீரியலில் மரம் ஏறும் காட்சி, கையில் சிராய்ப்பு ஏற்படும் காட்சியெல்லாம் உண்டாம். அதெல்லாம் நிஜமான காட்சிகளாம்.



### பார்வைக்குத்தான் வில்லி!

23 வருடங்களாக நடிப்பில் இருக்கிறார் சங்கீதா பாலன். குடும்பம் பொருளாதார சிக்கலில் தவிக்க, சீரியலிற்கு நடிக்க வந்தவர் அதிகமாக நெகடிவ் ரோலில்தான் நடிக்கிறார். சீரியலில் அப்படி நடித்தாலும், நிஜத்தில் அன்பான தாய் என நெகிழ்கிறார். ஆரம்பத்தில் காமெடி ரோல்கள்தான் செய்திருக்கிறார். அப்படியான வாய்ப்புக்களைத்தான் விரும்புகிறேன் என கூறியுள்ளார். திருமணமாகி சிறிதுகாலத்திலேயே அவரது கணவர் இறந்துவிட, மகளை வளர்க்க கடுமையாக போராடுவதாக கூறியுள்ளார். சீரியலில் பொட்டு வைத்து, ரௌடியாகவே தன்னை பார்த்த மக்கள், நேரில் பார்க்கும்போது நம்ப சிரமப்படுவதாக கூறுகிறார்.



### மௌனிகாவின் கலக்கல்!

விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் புதிய தொடர் அவளும் நானும். இரட்டையர்களை கதைக்களமாக கொண்ட தொடர். இதில் நடிக்கும் மௌனிகா தேவி, நிஜமான இரட்டையர்களே நடிக்கிறார்களோ என்று சந்தேகப்படும் விதமாக நடித்து வருகிறார். ஆந்திராவில் மொடலிங் செய்துகொண்டிருந்தவரை, இந்த சீரியலில் நடிக்க வைத்துள்ளனர். சீரியலை பார்த்து விட்டு, நீங்கள் இரட்டையர்களா என பலர் கேட்கிறார்களாம். நடிப்பில் அவ்வளவு வித்தியாசம் காட்டுகிறாராம். தன்னுடைய முகத்திற்கு நெகடிவ் ரோல் செட் ஆகாதென பலரும் சொல்கிறார்களாம். ஆனால் படையப்பா நீலாம்பரி மாதிரி ஒரு நெகடிவ் ரோல் செய்ய வேண்டுமென்ற ஆசை அவரிடமுள்ளது.



### அன்வருடன் எனக்கு பெர்சனல் பிரச்சனை!

பகல் நிலவு சீரியல் பஞ்சாயத்து இப்போதைக்கு முடியாது போலிருக்கிறது. ரியல் லவ் ஜோடி அன்வர் சமீரா, தொடரிலிருந்து வெளியேறியபோது, சீரியல் நடிகர்களிடம் குழு அரசியல் வந்துவிட்டதாக சொன்னார்கள். உடனடியாக சௌதர்யா, ஷர்மிளா, சிந்து ஷியாம் அதை மறுத்தார்கள். சௌதர்யா ஒருபடி மேலே போய், அன்வருக்கும் எனக்கும் சில பெர்சனல் பிரச்சனைகள் உள்ளன என்றும் கூறியிருந்தார். அது பற்றி அவரிடம் கேட்டபோது "ஆரம்பத்தில் எல்லோரும் நட்பாகத்தான் இருந்தோம். ஏதோ தவறான புரிதலில் அன்வர் சமீரா அவசரப்பட்டு விட்டார்கள். 'கார்த்திக் சௌதர்யா ஜோடியோடு எமக்கு கம்பினேஷன் சீன் வைக்க வேண்டாம்' என டைரக்டரிடம் போய் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் அதை ஏற்கவில்லை. அதனால் ஆத்திரமடைந்து சூட்டிங்கிற்கு பிந்தி வர தொடங்கினார்கள். அவர்கள் முன்னணி ஜோடியென்பதால், இயக்குனர் பணிந்து, அவர்களின் பேச்சை கேட்டார். கிட்டத்தட்ட இயக்குனரை மிரட்டினார்கள். சமீராவிற்கு அழும் காட்சிகள் அதிகம். ஒருநாள் விளையாட்டாக, 'நீ அழுதே உன்னை எல்லோரும் பார்க்க வைக்கிறாய்' என்றேன். அதை சமீரா எப்படி அன்வரிடம் சொன்னார் தெரியாது. என்னுடன் பிரச்சனைப்பட்டார். அதற்கு பின்னர் கதைப்பதை நிறுத்தி விட்டோம். அவர்கள் வெளியேறினால் என்ன? நாங்கள் சீரியலை நல்லவிதமாக கொண்டு செல்வோம்" என்றார்.

# வண்ணத் திரை



## தெருவிற்கு வந்த டாப்ஸி

பிறந்தநாளில் கேக் வெட்டி, பார்ட்டிக்கு போய்த்தான் நடிக, நடிகையர்கள் கொண்டாட்டம் நடத்துவார்கள். டாப்ஸி இதில் வித்தியாசமானவர். லண்டன் தெருவொன்றில் தனது பிறந்தநாளை கொண்டாடியுள்ளார். தில் ஜூங்லி படத்திற்காக லண்டன் சென்றிருந்தபோது, அங்குள்ள தெருவொன்றில் பாடல் காட்சி படமாக்கப்பட்டுள்ளது. அன்றுதான் டாப்ஸிக்கு பிறந்தநாள். ஆனால் அவர் மறந்துவிட்டார். ஆனால் படக்குழுவினர் பிறந்தநாளை நினைவில் வைத்து, டாப்ஸிக்கு வாழ்த்து சொல்லியுள்ளனர். பிறந்தநாளை வித்தியாசமாக செய்ய வேண்டுமென படக்குழுவினர் தீர்மானித்தனர். பின்னர் டக்ஸி ஒன்றை பிடித்துக்கொண்டு லண்டனில் தெருத்தெருவாக அரட்டையடித்தபடி திரிந்து பிறந்தநாள் கொண்டாடியுள்ளனர்.

## இரண்டாம் பாகத்தில் பார்த்திபன்

இது இரண்டாம் பாக சீசன். ஏற்கனவே வெளியாகி வெற்றிபெற்ற படங்கள் இரண்டாம் பாகமாக தயாராகி வருகின்றன. விஸ்வரூபம், சாமி, சண்டக்கோழி, மாரி, விண்ணைத்தாண்டி வருவாயா, புலிகேசி, இந்தியன் என இரண்டாம் பாக படங்கள் தயாராகி வருகின்றன. இந்த வரிசையில பார்த்திபனும் களமிறங்கியுள்ளார். 1993 இல் அவர் இயக்கி நடித்த உள்ளே வெளியே படம் வெற்றியடைந்தது. அதையே கையிலெடுத்திருக்கிறார். பார்த்திபன் ஹீரோ, சமுத்திரக்கனி முக்கிய வேடத்தில் நடிக்கிறார். ஹீரோவென்பதால் உடல் தோற்றத்தில் கவனமெடுத்திருக்கிறார் பார்த்திபன். கடுமையான உடற்பயிற்சியின் மூலம் 15 கிலோ எடை குறைந்துள்ளார். ஹெயார் ஸ்டைலையும் ஸ்டைலாக மாற்றி, யூத்தாக மாறியுள்ளார்.

## அண்ணனுடன் இணையும் தனுஷ்

சகோதரர்களான தனுஷ் செல்வராகவன் கூட்டணியில் வெளியானது புதுப்பேட்டை படம். கொக்கிகுமார் என்ற வேடத்தில் ரௌடியாக தனுஷ் கலக்கியிருந்தார் இந்தப்படத்தில். கொக்கிகுமார் இன்றும் பேசப்படும் வேடம். இந்தநிலையில், பன்னிரண்டு வருடங்கள் கழித்து புதுப்பேட்டை இரண்டாம் பாகம் வெளியாகவுள்ளது. இதற்கான முயற்சியில் தனுஷ் இறங்கியுள்ளார். அவரே தயாரித்து நடிக்கிறார். இதற்கான கதையை செல்வராகவன் எழுதி முடித்து விட்டார். விரைவில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகுமென தெரிகிறது.

## இலங்கை அகதிக்கு அஜித் செய்த உதவி

சினிமாவில் இருப்பவர்கள் சின்ன உதவி செய்தாலும், அதை பெரிதாக விளம்பரப்படுத்துவார்கள். ஆனால், இந்த விசயத்தில் தல அஜித் வித்தியாசமானவர். சத்தமில்லாமல் உதவிகளை செய்துவிடுவார். சம்பந்தப்பட்டவர்கள் பகிரங்கமாக சொன்னால்தான் தெரியவரும். இலங்கைத்தமிழ் அகதியொருவர் தனக்கு நடந்த சம்பவத்தை அண்மையில் வெளியிட்டுள்ளார். தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார். அஜித்தின் ஜனா படம் வெளியான சமயத்தில் தமிழகத்தில் அகதியாக வாழ்ந்திருக்கிறார். ஒருமுறை அகதிமுகாமிலிருந்து சென்றவர்கள் அஜித்தை சந்தித்துள்ளனர். அப்போது, ஏதாவது உதவி தேவையா என அஜித் கேட்டிருக்கிறார். தமது முகாமில் கழிப்பறை வசதியில்லையென அவர்கள் கூற, மறுநாளே கழிப்பறை கட்ட ஏற்பாடு செய்திருக்கிறார் அஜித். கழிப்பறை கட்ட அஜித்தான் உதவினார் என்பது அகதிமுகாமிலிருந்த பலருக்கே தெரியாதாம்.

## மெகா வில்லன்கள் இருவர்

மணிரத்னம் இயக்கும் மல்டி ஹீரோ படம் செக்கச் சிவந்த வானம். சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்கிறார். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார். அரவிந்த்சாமி, சிம்பு, அருண் விஜய், விஜய் சேதுபதி, பிரகாஷ்ராஜ், தியாகராஜன், ஜோதிகா, ஐஸ்வர்யா ராஜேஷ் என நட்சத்திரங்கள் நடிக்கிறார்கள். லைகா தயாரிக்கும் இந்த படத்தை பிரமாண்டமாக இயக்கிக் கொண்டிருக்கிறார் மணிரத்னம். தொழிற்சாலை கழிவுகளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக பேசுகிறது இந்த படம். சிம்பு ஒரு இன்ஜினியராகவும், விஜய் சேதுபதி பொலிசாகவும், அரவிந்தசாமி, அருண் விஜய் ஆகியோர் அதிரடி வில்லன்களாக நடிக்கிறார்கள். தனி ஒருவன், போகன் படங்களில் அரவிந்த்சாமி வில்லன் வேடத்தில் மிரட்டினார். அஜித்தின் என்னை அறிந்தால் படத்தில் அருண் விஜய் வில்லனாக மிரட்டியிருந்தார். இவர்கள் இருவரையும் முந்தைய பட ஸ்டைலில் இருந்து மாற்றி, புதிய பாணி வில்லனாக நடிக்க வைக்கிறாராம் மணிரத்னம்.

## மீண்டும் “அப்படி” நடிப்பாரா பூஜா?

வைத்தீஸ்வரன், திருவண்ணாமலை, தலைஎழுத்து உள்ளிட்ட படங்களில் நடித்திருப்பவர் பூஜா காந்தி. கன்னடத்தில் நடித்து வருகிறார். சர்ச்சைக்குரிய தண்டபாலயா படத்தில் ரவுடிப் பெண்ணாக நடித்திருந்தார். இதன் 2ம் பாகத்தில், பொலிஸ் நிலையத்தில் அவரை பொலிசார் அரை நிர்வாணமாக சித்திரவதை செய்யும் காட்சியில் நடித்திருந்தார். அவரது அரை நிர்வாண நடிப்பு சர்ச்சையை கிளப்பினாலும், படம் ஹிட் அடித்தது. தற்போது இதன் 3ம் பாகத்தில் நடிக்கிறார். சில வருடங்களின் முன் கர்நாடகாவின் தண்டபாலயா கிராமத்தில் நடந்த சில அசாதாரண சம்பவங்களை அடிப்படையாக கொண்டு கதை அமைக்கப்பட்டிருந்தது. 2ம் பாகத்தில் பூஜா காந்தியின் அரை நிர்வாண நடிப்பால் சர்ச்சையை கிளப்பிய இயக்குனர், 3ம் பாகத்தில் என்ன உத்தியை கையாள போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

## சாய் பல்லவியால் நடிகர் குமுறல்

பிரேமம் படத்தின் மூலம் ஓவர் நைட்டில் பிரபல்யமானவர் சாய் பல்லவி. தற்போது ஏ.எல்.விஜய் இயக்கத்தில் கரு படத்தில் நாயகியாக நடிக்கிறார். இதற்கு முன், தெலுங்கில் இரண்டு படங்களில் நடித்திருக்கிறார். படப்பிடிப்பு தளத்தில் சாய் பல்லவி தன்னிடம் மரியாதை குறைவாக நடந்து கொண்டார், அவரது செயல்கள் தன்னை எரிச்சல் அடைய வைத்ததாக நடிகர் நாக சவுரியா சில தினங்களின் முன் புகார் கூறினார். இதுபற்றி சாய் பல்லவியிடம் கேட்டால் "நான் என்ன மரியாதை குறைவாக நடந்தேன் என அவர் சொல்லவில்லை. எனக்கும் தெரியவில்லை. இதுபற்றி அவர் என்னிடம் பேசவேயில்லை. என்றாலும், எதையும் மனதில் வைக்காமல் வெளிப்படையாக பேசியது மகிழ்ச்சியளிக்கிறது. அப்படியென்றால்தான், எனது செயல்பாட்டை நான் உணர முடியும். அவரது குற்றச்சாட்டையடுத்து, எனக்கே என் மீது சந்தேகம் வந்தது. உடனே இயக்குனர் விஜய்யிடம் போய், படப்பிடிப்பில் எனது நடத்தையில் என்ன தவறிருக்கிறதென்பதை கண்காணித்து சொல்லுங்கள் என்றேன். இயக்குனரும் கண்காணித்துவிட்டு, அப்படியெதுவும் இல்லையென்றார். நாகசவுகரியாவின் பேச்சால் மனம் பாதித்தது உண்மைதான். ஆனால் அவரது வெளிப்படையான பேச்சை மெச்சுகிறேன்" என்றார்.

## நீச்சலுடைக்கு நோ சொல்லும் அனுபமா

சினிமா வாய்ப்புக்களை அதிகப்படுத்த நடிகைகள் கையாளும் உத்தி சமூக வலைத்தளங்களில் தாராள கவர்ச்சி காட்டுவது. ருவிற்றர், இன்டகிராம், பேஸ்புக்கில் தாராள கவர்ச்சி காட்டி ரொப்லெஸ், ரூ பீஸ் படங்களை வெளியிட்டு வருகிறார்கள். திரைப்படங்களிலும் இப்படி தாராளம் காட்டுகிறார்கள் அனேக நடிகைகள். இவர்களில் அனுபமா பரமேஸ்வரன் வித்தியாசமானவர். தற்போது அவருக்கு நிறைய வாய்ப்புக்கள் கிடைத்தாலும், கதை பிடித்திருந்தால் மாத்திரமே ஒப்புக்கொள்கிறார். மணிரத்தினம் இயக்கிய படமொன்றில் ஒப்பந்தமான அனுபமா, பின்னர் அதிலிருந்து வெளியேறியுள்ளார். சில காட்சிகளில் ஹீரோவுடன் நெருக்கமாக நடிக்க வேண்டுமென்பதாலேயே வெளியேறியுள்ளார். நீச்சலுடை, கவர்ச்சியுடை அணிய மாட்டேன் என்ற நிபந்தனையை, கதை கேட்கும்போதே கூறிவிடுகிறார். கண்ணியமான, பக்கத்து வீட்டு பெண் போன்ற பாத்திரங்களில் நடிக்கவே விரும்புகிறேன் என கூறியுள்ளார்.

9-ம் பக்க தொடர்ச்சி...

சுட்டு விழுத்துவார், இன்னொருவரின் தலையில் அப்பிளை வைத்துவிட்டு, நூறு மீற்றர் தொலைவில் நின்று அப்பிளை மட்டும் சுட்டுவிழுத்துவார். ஒரு தகரத்தில் பிரபாகரன் என்ற பெயரை, துப்பாக்கி ரவைகளால் ஏற்படுத்தப்பட்ட ஓட்டைகளின் மூலம் எழுதினார்.

இதெல்லாம் உண்மையில் கற்பனை கதைகள். முக்கியமாக, போராளியின் தலையில் ஒரு பொருளை வைத்துவிட்டு, இன்னொரு போராளி அதை சுட அவர் எவ்வளவு பெரிய துப்பாக்கி சுடும் வீரனென்றாலும் புலிகள் அனுமதிப்பதில்லை. புலிகள் அமைப்பிற்குள் எந்தக்காலத்திலும் இப்படியான சாகசங்கள் அனுமதிக் கப்பட்டிருக்கவில்லை. துப்பாக்கியால் தவறுதலாகவேனும் சுட்டு இன்னொரு வரை காயப்படுத்துவது பயங்கர தண்டனைக்குரிய குற்றமாக புலிகள் கருதினார்கள். துப்பாக்கியை எப்படி கையாள்வது, சக போராளியை அதனால் காயப்படுத்தாமல் இருப்பது எப்படியென்பதில் கறாரான நடைமுறைகளை இறுதிவரை பேணிய புலிகள், இப்படியான வீண் சாகச நிகழ்வுகளை அனுமதிப்பார்கள் என்பது தர்க்க நியாயமே அற்றது.

தகரத்தில் பிரபாகரன் பெயர் எழுதிய விவகாரமும் உண்மையல்ல. இந்த கதை எப்படி கிளம்பியதென தெரியவில்லை. யாரோ நல்ல கற்பனை வளமுள்ளவர்கள் அடித்து விட்டிருக்கிறார்கள்.

இதேபோல, இன்னொரு கதையும் உள்ளது. பிரபாகரனும், கடாபியும் துப்பாக்கி சுடும் போட்டியில் ஈடுபட்டனர். இருவருக்கும் பத்து ரவை வழங்கப்பட்டது. இருவரும் தலா ஒன்பது ரவையை சுட்ட நிலையில், சமமான புள்ளிகளை பெற்றிருந்தனர். பிரபாகரனை போட்டியில் வெல்லக் கூடாது என்பதற்காக பத்தாவது ரவையை இலக்கிற்கு வெளியில் கடாபி சுட்டாராம்!

இந்த கதை உண்மையா?

இதில் பாதி உண்மையுள்ளது. மிகுதி உல்டா. உண்மையை முதலில் குறிப்பிடுகிறோம். துப்பாக்கி சுடும் போட்டிகள் புலிகளிற்குள் வழக்கமாக நடப்பதுண்டு. இப்படியான போட்டி களை பிரபாகரன் ஊக்கப்படுத்துவார். துல்லியமான துப்பாக்கி சுடுபவர்கள் அமைப்பிற்கு தேவையென பிரபா கரன் நினைத்தார். துப்பாக்கி சுடும் போட்டிகளை பற்றி தெரியாதவர்களிற் காக முதலில் அதைப்பற்றி சிறிய அறிமுகம் தந்து விடுகிறோம். அதை தெரியாமல், நாம் விசயத்தை சொன் னால், படிப்பவர்களிற்கு முழுமையாக புரியாது.

ஒரு மனித உருவம் செய்யப்பட்டு, இலக்காக நிறுத்தப்படும். அந்த உருவத்தை சுற்றி வட்டங்கள் இருக் கும். அந்த வட்டங்கள் சுருங்கி, நெஞ்சுப் பகுதியில் மையம் உருவாக்கப்பட்டி ருக்கும். நெஞ்சு பகுதியில் துப்பாக்கி ரவை தாக்கினால், மனிதர்கள் மரணமாகி விடுவார்கள் அல்லவா. அந்த சிறிய வட்டத்திற்குள் சுட்டால் பத்து புள்ளிகள். அதற்கு அடுத்த வட்டத்திற்குள் ரவை பாய்ந்திருந்தால் ஒன்பது புள்ளிகள். இப்படியே ஏழு புள்ளிகள் வரை வட்டம் இருக்கும். ஒரு மனிதனை துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தும் பகுதிகளிற்கே அதிக புள்ளிகள்.

இந்த இலக்குகளில் துப்பாக்கி சுடும் போட்டிகள் புலிகளிற்குள்ளும் அடிக்கடி நடக்கும். தன்னுடைய மெய்பாதுகாவலர் அணியிலுள்ளவர் களுடன் பிரபாகரன் அடிக்கடி சவால் விட்டு, இப்படியான போட்டிகளில் ஈடுபடுவார். சமயங்களில் தளபதிகளு டனும் துப்பாக்கி சுடும் போட்டியில் ஈடுபடுவார். பிரபாகரனும் நன்றாக துப்பாக்கி சுடுவார். தொடர்ந்து



துப்பாக்கி சுடும் இலக்கின் அருகில் தளபதி தீபனும் போராளிகளும்

பயிற்சியில் ஈடுபட்டு வந்தால், எந்த விசயத்திலும் நல்ல பெறுபேற்றை பெறலாம். துப்பாக்கி சுடலும் இப்படித்தான். பத்து ரவைகளில், நூறு புள்ளிகளை பலமுறை பலர் பெற்றிருக்கிறார்கள். ஒருமுறை நூறு புள்ளிபெற்றவர், எல்லா போட்டியிலும் நூறுபுள்ளிபெறுவதில்லை. இன்னொரு முறை தொன்னூற்று ஒன்பதையும் பெறுவார். பிரபாகரன் தன்னுடன் போட்டிக்கு வருமாறு கடாபியையும் அழைத்திருக்கிறார். அதெல்லாம் அடிக்கடி நடக்கும் உற்சாகமான போட்டிகள். பதிவேட்டில் புள்ளிகளை பதியும் சீரியசான போட்டிகள் கிடை யாது. அதனால் வெற்றி தோல்வியென்ற பதிவுகள் எதுவும் கிடையாது. அன்றைய நாளில் யார் சிறப்பாக செயற்பட்டாரோ, அவர் அதிக புள்ளியை பெற்றார். அவ்வளவுதான்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் மிக சக்திமிக்க தளபதிகளில் ஒருவ ராக கடாபி விளங்கினார். 1995 முதல் 2002 வரை கடாபிக்கு உச்ச காலகட்டம். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், பொட்டம்மான் இரண்டாம் நிலை தலைவர் என்றால், கடாபி இன்னொரு விதத்தில் புலிகளிற்குள் ஆளுமை செலுத்தினார். விடுதலைப்புலிகளின் முக்கியமான படையணிகளை அவர்தான் கட்டுப் படுத்தினார். இம்ரான் பாண்டியன் படையணி, ராங்கி அணி,கவச எதிர்ப்பு அணி, கனரக ஆயுத அணி, கரும்புலிகள், கனரக ஆயுதப்பயிற்சி என ஏராளம்துறைகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். ஒருகாலத்தில், அதிக போராளிகளை வழிநடத்திய தளபதியாகவும் அவர்தான் இருந்தார்.

ஆனால், ஒரேநாளில் கடாபியை அத்தனை பொறுப்பிலிருந்தும் பிரபாகரன் நீக்கினார். அதற்கு என்ன காரணமென்பதை, இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன தொடரில் சில மாதங்களிற்கு முன்னர் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். பல வாசகர்கள் அதை படித்திருப்பார்கள். புதிய வாசகர்களிற்காக மிக சுருக்கமாக அதை குறிப்பிடுகிறோம்.

பிரபாகரனின் பாதுகாப்பு நடவடிக் கைகளில் கடாபி தலைமையிலான இம்ரான்பாண்டியன் படையணி ஈடுபட்டதால், அங்கு கடுமையான சட்டதிட்டங்கள் இருந்தன. யாரும் புலிகளை விட்டு விலக முடியாது. பிரபாகரனின் இருப்பிடம் பற்றிய தகவல் வெளியில் செல்லக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு. சிறிய பிழை விட்டால்கூட, அந்த படையணி யின் சிறைச்சாலையில் அடைத்து விடுவார்கள். வெளியில் ஏதாவது அலுவலாக சென்றால்கூட, உறவினர்களுடன் பேசக்கூடாது. மீறி பேசினாலும் சிக்கல்.

பின்னாளில் புகழ்பெற்ற இன்னொரு தளபதியான இரட்ணம் மாஸ்ரர்தான், இம்ரான்பாண்டியன் படையணியின் புலனாய்வு பிரிவிற்கு பொறுப்பாக இருந்தவர். யாராவதொரு போராளி வெளியில் செல்கிறார் என வைத்துக்கொள்ளுங்கள். வழியில் தெரிந்தவர், உறவினர் என யாராவ தொருவர் மறித்து கதைத்திருப்பார். மறுநாள், அந்த முகாமிற்கு ஒரு அறிக்கை வரும். குறிப்பிட்ட போராளி, எந்த இடத்தில், எத்தனை பேருடன், எத்தனை நிமிடம் நின்று கதைத்தார் என்ற விபரம் அதில் இருக்கும். ஓரிருமுறை அதற்கு எச்சரிக்கையுடன் மன்னிப்பு கிடைக்கும். அதற்கு பின்னரும் இப்படியே நடந்தால், கடவுளாலும் அவரை காப்பாற்ற முடியாது. கடாபியின் நீதி அப்படி!

புலிகளை விட்டு விலகும் இம்ரான் பாண்டியன் படையணிகாரர்களையும் அந்த முகாமிற்குத்தான் கொண்டு செல்வார்கள். அந்த முகாம் என்றா சொன்னேன்?, அது சிறைச்சாலை!

அந்த சிறைச்சாலை கொஞ்சம் மோசமானது. கொஞ்சம் என்றும் சொல்ல முடியாது. பயங்கர மோசமானது என்றுதான் பிரபாகரனிற்கு ரிப்போர்ட் போனது.

அந்தசிறைச்சாலைஎப்படியிருக்கும்? அங்கு என்ன பிரச்சனை வந்தது? புலிகள் அமைப்பின் அசைக்க முடியாத தளபதியாக உருவெடுத்திருந்த கடாபியின் வீழ்ச்சிக்கு என்ன காரணம்? கடாபியின் இறுதிக்கணத்தில் நடந்தது என்ன என்பதையெல்லாம் வ்ரும் வாரம் குறிப்பிடுகிறோம்.

(தொடரும்)

11-ம் பக்க தொடர்ச்சி...

முழுமையடையாத ஒன்று. நான் யார் என்ற கேள்விக்கு சீக்கிரமே ரோமன் ரெய்ன்ஸ் பதில் கண்டு பிடிக்க வேண்டும். மெக்மேஹான் அதற்கேற்றார்போல் ஸ்டோரிலைன் உருவாக்க வேண்டும். இல்லையேல், ஷெத் ரோலின்ஸ், டீன் அம்ப்ரோஸ், ஃபின் பாலேர் எனப் பின்னாலேயே தகுதியானவர்கள் பலர் வெயிட் டிங். கொஞ்சம் அசந்தாலும் ஆப்படித் துவிடுவார்கள் பார்த்துக் கொள்ளுங்க.

சில வீரர்கள் WWEயின் முகமாகியிருக்கிறார்கள் என்றால் அதற்குப் பின்னால், அதாவது ஸ்டேஜுக்குப் பின்னால் தெளிவான திட்டமிடுதல் இருந்தது. சரியான நேரத்தில் வீரர்களின் திறமையைக் கண்டறிந்து சரியான நேரத்தில் சரியான ஸ்க்ரிப்டோடு இவர்கள் 'புஷ்' செய்யப்பட்டனர். ஆனால், ரோமன் ரெய்ன்ஸை புல்லட் ரயில் வேகத்தில் 'புஷ்' செய்துகொண்டிருக்கிறார் மெக்மேஹான். என்ன பிரச்னை எனத் தெரியவில்லை. ரசிகர்கள் ரோமன் ரெய்ன்ஸைப் பார்த்தாலே 'ஸொப்பா...' என்கிறார்கள். குழந்தைகள் மட்டுமே 'ரோமன்... ரோமன்...' என அலறுகிறார்கள். குழந்தைங்களுக்கு பிடிச்ச பீஸூய்யா!

எனவே, மெக்மேஹான் கொஞ்சம் ஆர அமர யோசித்து, பொறுமையாகக் காய் நகர்த்தலாம். அதைச் செய் யாமல், ஆறே ஆண்டிற்குள் ட்ரிபிள் க்ரவுன் சாம்பியன், ரோயல் ரம்பி ளில் அதிகப்பேரை எலிமினேட் செய்த வீரன், சர்வைவர் சீரிஸில் அதிகப் பேரை எலிமினேட் செய்த வீரன், ரஸ்ஸல்மேனியாவில் அண்டர்டேக் கரை தோற்கடித்த வீரன் எனப் பல சாதனைகளை முறியடிக்க வைத்துக் கொண்டிருக்கிறார். இதனாலேயே, 'அட போங்கய்யா...' என ரசிகர்கள் அலுப்பு மருந்து வாங்க எழுந்துவிடுகி றார்கள். இதையெல்லாம், வின்ஸ் மெக்மேஹனும் ரோமன் ரெய்ன்ஸூம் இணைந்து சரிசெய்தால் ரோமன் ரெய்ன்ஸ், WWEன் அடுத்த முகமாக மாற வாய்ப்புள்ளது. இல்லையேல் வெஞ்சன கிண்ணம்கூட கிடைக் காது. இவ்வளவு நாளாக 'புஷ்' செய்த தெல்லாம் புஷ்ஷாகிவிடும்!




# பொய்க்காலில் அல்ல, புகழ்க்காலில் நிற்கும் உயரம்!

**எம்.ஜி.ஆர்.** திரையுலகில் நடிகர்கள், நடிகைகள், கவிஞர்கள் பலரையும் அறிமுகப்படுத்தியுள்ளார். தனது படங்களில் இளைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்குவார். அவரது படங்கள் மூலம் அறிமுகமான எல்லோருமே திறமை மிக்கவர்களாக விளங்கினர். அப்படி அறிமுகமான கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர், முறையாகத் தமிழ் கற்று, பல சிறந்த பாடல்களை எழுதியுள்ள புலவர் புலமைப்பித்தன்!

படிக்கும் காலத்திலிருந்தே திராவிட இயக்கத்தின் தொண்டராக வாழ்க்கையைத் தொடங்கியவர் புலமைப் பித்தன். கோவையில் அரசியல் விரோதத்தால் கொல்லப்பட்ட திமுக தொண்டர் ஒருவரின் குடும்பத்துக்கு நிதி வழங்க எம்.ஜி.ஆர் வந்தபோதுதான் புலமைப் பித்தன் அவரிடம் முதன்முதலில் பேசினார். வசூலான தொகை போதாது என்று கருதிய எம்.ஜி.ஆர், தனது சொந்தப் பணத்தில் இருந்து கணிசமான தொகையை இறந்தவரின் குடும்பத்துக்கு வழங்கியது புலமைப் பித்தனின் மனதில் இன்னும் பசுமையாக உள்ளது.

எம்.ஜி.ஆர் நடித்த 'குடியிருந்த கோயில்' படத்தில் பாடல் எழுதும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. 'நான் யார், நான் யார், நீ யார்?... ' என்ற கருத்தாழம் மிக்க அவரது முதல் பாடலே சூப்பர் ஹிட்டாக அமைந்தது. 'அடிமைப் பெண்' படத்தில் 'ஆயிரம் நிலவே வா...', 'இதயக்கனி' படத்தில், 'நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற...', 'உழைக்கும் கரங்கள்' படத்தில், 'நாளை உலகை ஆளவேண்டும்...' உட்பட பல பாடல்களை புலமைப்பித்தன் எழுதி இருக்கிறார்.

"திரைத்துறையிலும் அரசியல் துறையிலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அளவுக்கு இமயமாய் எம்.ஜி.ஆர் உயர்ந்தது பொய்க் காலில் வந்த உயரமல்ல; புகழ்க் காலில் நிற்கும் உயரம். எவ்வளவோ பேருக்கு அவர் உதவிகள் செய்திருக்கிறார். அதை எல்லாம் பட்டியல் போடுவது முடியாத காரியம்" என்று கூறும் புலமைப் பித்தனுக்கு சொந்த அனுபவமே உண்டு.

கோவை மாவட்டம் சூலூர் அருகே பள்ளபாளையம் கிராமத்தில் புலமைப் பித்தனின் குடும்பத்துக்கு சொந்தமான வீட்டை அவரது தந்தையும் அண்ணன்கள் இருவரும் சேர்ந்து 1967ம் ஆண்டு அடமானம் வைத்து பணம் வாங்கினர். அடுத்த ஆண்டே அவரது தந்தை இறந்து போனார். 1971ம் ஆண்டு பெப்ரவரி 7ம் திகதிக்குள் கடனாக வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்கத் தவறினால், கடன் கொடுத்தவருக்கே வீடு சொந்தமாகிவிடும்.

அப்போது, படங்களில் புலமைப் பித்தன் ஒருசில பாடல்கள் எழுதிக் கொண்டிருந்த காலம். பேர் இருந்த அளவுக்கு பணம் இல்லை. பல நாட்கள் தயக்கத்துக்குப் பின் ஒருநாள், வாஹினி ஸ்டுடியோவில் படப்பிடிப்பு முடிந்து ஒப்பனை அறைக்குச் சென்ற எம்.ஜி.ஆருடன் கூடவே புலமைப்பித்தனும் சென்றார். அவர் ஏதோ சொல்ல நினைப்பதை குறிப்பால் உணர்ந்தார் எம்.ஜி.ஆர்!

யாரையும், எதையும் உடனடியாக புரிந்து கொள்ளும் திறனும், கூர்ந்த கவனிப்பும் எம்.ஜி.ஆருக்குக் கிடைத்த வரம். உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையிலும் கூட அவரது கூர்மைத் திறன் குறையவில்லை. தனக்கு சிகிச்சை அளித்த ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டாக்டர் கானு என்பவருக்கு தங்கத்தில் சிறிய யானை சிலையை பரிசளிக்க எம்.ஜி.ஆர் முடிவு செய்தார்.

அதற்காக, சென்னையில் உள்ள நகைக் கடை ஒன்றில் தங்கத்தில் சிறிய யானை சிலை செய்யப்பட்டு எம்.ஜி.ஆரின் பார்வைக்கு அனுப்பப் பட்டது. அதை கவனித்துவிட்டு யானையின் தும்பிக்கையும் வாலும் ஏறக்குறைய ஒரே அளவில் இருப்பதாகவும் வாலை இன்னும் சற்று சன்னமாக மாற்றும் படியும் எம்.ஜி.ஆர் கூறினார். நகைக் கடையினர் ஆச்சரியத்தில் மூழ்கினர்! அந்த அளவுக்கு எதையும் கூர்மையாக, உடனே கிரகித்துவிடுவார்.

தன்னுடன் உள்ளே வந்த புலமைப் பித்தனைப் பார்த்து சிரித்தபடியே, "என்ன?" என்று எம்.ஜி.ஆர் கேட்டார். தனது வீடு அடமானத்தில் இருப்பதையும் குறிப்பிட்ட திகதிக்குள் பணம் கொடுக் கத் தவறினால் பூர்விக வீடு கையை விட்டுப் போய்விடும் என்பதையும் ஒருவழியாக திக்கித் திணறிக் கூறினார் புலமைப்பித்தன்!

"நான் பணம் தருகிறேன்" அடுத்த விநாடி பதில் வந்தது எம்.ஜி.ஆரிடம் இருந்து! "இல்லண்ணே, நீங்க எனக்கு பாட்டு மட்டும் கூடுதலாக கிடைக்க ஏற்பாடுசெய்யுங்கள்" என்றார் புலமைப் பித்தன். "பாட்டும் தரேன், பணமும் தரேன். ஏன் நான் பணம் தரக்கூடாதா? உங்கள் கடமையில் எனக்குப் பங்கில்லையா? என்னை ஏன் நீங்க வேறாக நினைக்கணும்?" என்று அன்புடன் கடிந்து கொண்டார் எம்.ஜி.ஆர்!

பின்னர், அவர் கொடுத்த பணத்தில் வீட்டை மீட்டு, அதற்கான பத்திரத்துடன் சென்னை திரும்பி படப்பிடிப்பில் இருந்த எம்.ஜி.ஆரை புலமைப்பித்தன் சந்தித்தார். பத்திரத்தை அவர்.காலடியில் வைத்து வணங்கக் குனிந்த புலமைப்பித்தனின் தோள்களை ஆதரவாகப் பற்றி எம்.ஜி.ஆர் அணைத்துக் கொண் டார். தன் பெற்றோர் வாழ்ந்த நினைவுச் சின்னத்தையும், இழக்க இருந்த



கவுரவத்தையும் மீட்ட நிம்மதியில் புலமைப்பித்தன் கண்கலங்க நின்றார்!

அதிமுகவை எம்.ஜி.ஆர் தொடங்கிய போது, ஆரம்ப காலத்தில் இருந்தே உடன் இருந்தவர்களில் புலமைப்பித்தனும் ஒருவர். எம்.ஜி.ஆர் முதல்வரான பின்னர், 1977ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி சட்டமேலவை உறுப்பினராக புலமைப்பித்தனை நியமித்தார். பின்னர், சட்டமேலவை துணைத் தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.


"தன்னைப் போற்றியவருக்கு மட்டுமல்ல; தூற்றுவோருக்கும் தயங்காமல் உதவி செய்யும் பொன்மனம் எம்.ஜி.ஆருக்கு மட்டுமே சொந்தமானது" என்று நன்றியோடு நினைவு கூரும் புலமைப்பித்தனை, 1984ம் ஆண்டு தமிழக அரசின் அரசவைக் கவிஞராக முதல்வர் எம்.ஜி.ஆர் நியமித்தார். பதவியேற்பு நிகழ்ச்சியின் போது, புலமைப் பித்தன் பாடிய கவிதையில் எம்.ஜி.ஆரை வாழ்த்தி வரும் வரிகள் இவை...

**"குழந்தையின் பல் பட்ட இடத்தில்**
**பால் மட்டும் சுரக்கும்**
**அன்னை இதயம் அவனது இதயம்!"**

தொடரும்...

ஒருமுறை எம்.ஜி.ஆர் கலந்து கொண்ட கூட்டத்தில் பெண்களும் ஏராளமாகத் திரண்டனர். கூட்டத்தில் பேசி முடித்த பின், "ஆண்களுக்குத் தனியாக ஒரு விஷயம் சொல்லப்போகிறேன். பெண்கள் எல்லோரும் வெளியேறுங்கள்" என்றார். பெண்கள் அனைவரும் வெளியேறியபின், "இப்போது ஆண்களும் அமைதியாக வெளியேறலாம்" என்றார். புரியாமல் நின்ற கூட்டத்தைப் பார்த்து, "பெண்கள் நெரிசலில் சிக்கி அவதிப்படக் கூடாது என்பதற்குத்தான் அப்படிச் சொன்னேன்" என்று சிரித்தபடி எம்.ஜி.ஆர் கூறியதும், அவரது சமயோசிதத்தை ரசித்தபடி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கூட்டத்தினர் கலைந்தனர்!






# இலக்குகளை எட்டிப் பிடிக்க உதவும் தொழில் செய்யும் கலை!

ஒரு தொழிலைத் தொடங்கி, அதை வெற்றிகரமாக நடத்திப் பரம்பரை பரம்பரையாகத் தழைக்க என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பதைத் தொடர்ந்து பேசி வருகிறோம். ஏற்கெனவே சொன்னது போல, பிஸ்னஸ் என்பது ஏதோ போகிற போக்கில் பெட்டிக்கடை வைப்பது மாதிரி அல்ல. 'Doing Business is an Art'. அந்தக் கலையை எப்படிக் கற்பது என்பதை இனி பார்க்கலாம்.

ஒவ்வொரு பிஸ்னஸுக்கும் ஒரு செயல்முறை வடிவம் இருக்கிறது. எல்லா பிஸ்னஸுக்கும் ஒரே மாதிரியான செயல்முறையைப் பயன்படுத்த முடியாது. பிஸ்னஸ் வகை, அதன் அளவு, இலக்குகள் போன்றவற்றைப் பொறுத்துதான் நமக்கான செயல்முறை வடிவத்தை நாம் திட்டமிடவேண்டும்.

நம் பிஸ்னஸ் தொடர்பான செயல்முறையைத் திட்டமிடுவதில்தான் நாம் அதிக நேரத்தைச் செலவிடவேண்டும். ஒவ்வொரு பிஸ்னஸிலும் நாம் வகுத்திருக்கும் திட்டங்கள், நம்முடைய கொள்கைகள், இலக்குகள், வாடிக்கையாளருடனான தொடர்பு ஆகிய விஷயங்களை அடிப்படையாக வைத்தே நம்முடைய பிஸ்னஸ் செயல்முறை வடிவத்தை நாம் திட்டமிட முடியும்.

அதாவது, நம்முடைய பிஸ்னஸ் உற்பத்தியா, சேர்வீஸா, உள்நாட்டில் தொழில் செய்யப் போகிறோமா அல்லது ஏற்றுமதி செய்யப் போகிறோமா, யார் யாருக்கு என்ன வேலை, யார் யாரிடம் பதில் சொல்லவேண்டும் என்பது போன்ற அனைத்தையும் திட்டமிட்டுக் கட்டமைப்பதே பிஸ்னஸ் செயல்முறை வடிவம்.

இந்த செயல்முறை வடிவத்தில் பிரதானமாக இருப்பது மூன்று விஷயங்கள். ஒன்று, மனிதர்கள்; இரண்டாவது பொருள்கள்; மூன்றாவது பணம். இந்த மூன்றையும் சுற்றித்தான் பிஸ்னஸின் வொர்க்ஃப்ளோ (WorkFlow) இருக்கும். அவற்றை ஒழுங்காக நடைமுறைப்படுத்துவதும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும்தான் பிஸ்னஸ் செயல்முறை வடிவத்தின் முக்கியமான அம்சம். இனி ஒவ்வொன்றைப் பற்றியும் தனியாகப் பார்க்கலாம்.

### குடும்பத்தை உருவாக்குங்கள்

ஒரு பிஸ்னஸின் செயல்முறை வடிவத்தில் சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொருவரும் அவர்களுக்கான பணிகளையும், அவர்கள் யார் யாருடன், எவற்றுடன் தொடர்பில் இருக்க வேண்டும் என்பதையும், யாரிடம் அவர்கள் ரிப்போர்ட் செய்யவேண்டும், யாரிடமிருந்து பணிகளுக்கான உத்தரவுகளைப் பெறவேண்டும் என்பது உள்ளிட்ட பல விஷயங்களையும் தெளிவுபடுத்திக்கொண்ட பிறகே அதனைச் செயல்படுத்த வேண்டும். இது நிறுவனத்தின் முதலாளி முதல் வாடிக்கையாளர் வரை அனைத்துத் தரப்பு மனிதர்களையும் உள்ளடக்கியது.

இவர்கள் அனைவருமே ஒரே குடும்பமாக இருக்கும் வகையில்தான் நம்முடைய செயல்முறை வடிவமும், அதற்கான கொள்கைகளும் வகுக்கப்பட வேண்டும். அதாவது, ஒரு குடும்பத்தில் ஆயிரம் பிரச்னைகள், நெருக்கடிகள், இன்ப துன்பங்கள் வந்தாலும், எல்லாவற்றையும் தாண்டி ஒரே குடும்பமாக இருக்கும் கலாசாரம் ஒரு பிஸ்னஸில் இருக்கவேண்டும்.

மனிதர்களைக் கையாள்வதற்காகவே படித்து நிபுணத்துவம் பெற்ற ஒரு மனிதவளத்துறை நிபுணரின் தலைமையில், ஒரு குழுவை அமைத்து ஒரு பிஸ்னஸின் அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைக்கும் வேலையைச் செய்யவேண்டும். பணியில் இருக்கும் ஒருவர், தனது செயல்பாடுகளைத் தெளிவாகப் புரிந்து வைத்திருந்தாலே அவருடைய பணியைச் சரியாகச் செய்துமுடிப்பதில் எந்தப் பிரச்னையுமே வராது. அதை மிகவும் கவனத்தோடு செய்ய வேண்டும். அவரவர் திறமை மற்றும் செயல்திறனுக்கேற்ப வேலைகள் ஒதுக்கப்பட வேண்டும்.

மாறாக, ஒருவரை வேலைக்கு நியமித்துவிட்டு,என்ன வேலை,யாரிடம் ஆலோசனை கேட்பது, யாரிடம் வேலையை முடித்துக் காட்டுவது போன்ற எதையுமே சொல்லாமல் விட்டுவிட்டால், அவரால் நம்முடைய பிஸ்னஸுக்கு எந்த முன்னேற்றமும் இருக்காது. அவரும் விரைவில் அந்த வேலையிலிருந்து வெளியேறிவிடுவார்.


அவர் வேலையை விட்டுப்போனால் என்ன? வேலைக்கு ஆட்களா இல்லை என முடிவெடுப்பது மிகவும் தவறான போக்கு. . தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரின் இழப்பு நம்முடைய நேரத்தையும் உழைப்பையும் சேர்த்தே எடுத்துச் சென்றுவிடுகிறது என்பதை மறந்துவிட வேண்டாம். எந்த வேலையை எப்போது செய்யத் தொடங்கவேண்டும், எப்போது முடிக்கவேண்டும் என்பது தெளிவாக இருக்கவேண்டும். வொர்க்ஃப்ளோவில் முடிக்கப்பட வேண்டிய வேலைகளை அட்டவணைப்படுத்த வேண்டும். அதில் முதலில் செய்யவேண்டிய காரியங்களை முதன்மையாக வைத்துக்கொண்டு, பின்னர் மற்ற வேலைகளைத் திட்டமிடலாம்.

### பொருள்களின் நகர்வு

பிஸ்னஸோடு தொடர்புடைய பொருள்களின் நகர்வு, மிகக் கச்சிதமாக

தொடர்ச்சி 24-ம் பக்கம்...

**தொழில் செயல்முறைத் திட்டம்**





# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

டி.நாராயண ரெட்டி
செக்ஸாலஜிஸ்ட்

ஆய கலைகளில் செக்ஸையும் சேர்த்தாயிற்று. ஆனால், செக்ஸ் என்பதைக் கலையாகச் செய்கிறோமா..? நாள்தோறும் பரபரப்பாக றெக்கை கட்டிக் கொண்டு வாழும் இன்றைய யுகத்தில் செக்ஸை ஆழ்ந்து அனுபவிக்க நேரம் இருக்கிறதா..? செக்ஸ் என்பது ஆழ்ந்து அனுபவிக்க வேண்டிய ஒன்றா..? இல்லை சிறுநீர், மலம் கழிப்பதைப்போல வெளியேற்றித் தணித்து விடக்கூடிய ஒன்றா? இல்லை தாகத்துக்குத் தண்ணீர் குடிப்பதைப்போலத்தான் உடலுறவா..? இப்படி எக்கச்சக்க கேள்விகளும் தொக்கி நிற்கின்றன. பலர் என்னிடம் நேரடியாகவே கேட்டுவிடுகிறார்கள். நல்ல ஆரோக்யமான செக்ஸ் உறவு என்பது எவ்வளவு நேரம் நீடிக்க வேண்டும்? நீடிக்க முடியும்? அதற்கான பதிலைக் கடைசிப் பத்தியில் சொல்கிறேன்.

தொடரைப் படித்துவிட்டு மெயில் மூலமும் போன் மூலமும் பல கேள்விகளை வாசகர்கள் அனுப்பி இருக்கிறார்கள். அதில் சிலரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறேன்.

**“இன்டெர்நெட்டில் கதியாகக் கிடக்கும் லட்சோபலட்ச ஆண்களில் ஒருவன் நான். ஆனால், என்னுடைய பிரச்னை வினோதமானது. ஒரு பெண்ணைப்போல ஃபேக் ஐடியில் பெண்களோடு சாட்டிங் செய்கிறேன். அவர்களுடன் நட்பாகி அவர்களிடம் பேசும்போதுக்கிளர்ச்சியடைகிறேன். அப்படி சாட்டிங் செய்யும் ஒவ்வொருமுறையும் சுய இன்பம் அனுபவித்து உறங்கச் செல்கிறேன். அப்படிச் செய்தால்தான் நன்கு உறக்கம் வருகிறது. இப்படி ஃபேக் ஐடியில் ஒளிந்துகொண்டு சாட் செய்வது வாடிக்கையாகிவிட்டது. நான் அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் அப்படிச் செய்து சுய இன்பம் அனுபவிப்பது நல்லதா கெட்டதா..?” என்று கேட்டிருக்கிறார் ஓர் இளைஞர்.**

**இதற்கான என் பதில்:** ‘இது உடல் ஆரோக்கியம் சம்பந்தப்பட்டதில்லை. மன ஆரோக்கியம் சம்பந்தப்பட்டது. சைபர் செக்ஸ் என்று சொல்வோம். ஒருநாள் உங்களுடையது ஃபேக் ஐடி என்ற உண்மை தெரியவரும்போது நம்பிக்கை உடைந்து அவர்களிடம் திட்டு வாங்க வேண்டிவரும். ஓப்பனாக ஸ்டேட்டஸில் ‘துரோகி’, ‘சீட்டர்’ என்று உங்களைத் திட்டும் சூழலுக்குத் தள்ளப்படுவீர்கள். ஒருவேளை தெரியாமலே இதைத் தொடர்ந்தாலும். நீங்கள் இப்பழக்கத்துக்கு அடிமையாகி விடுவீர்கள். அப்படி சாட் செய்து சுய இன்பத்தில் ஈடுபட்டால்தான் தூக்கமே வரும் என்ற நிலைக்கு மனநிலை மாறி இருக்கும். அது ஆபத்தானது. மனக் கஷ்டத்தை ஏற்படுத்தும். அது பேர்சனாலிட்டி டிஸார்டரை உண்டு பண்ணும். ஏனென்றால் இது இரட்டை வாழ்க்கை. இதை உடனடியாகக் கைவிடுவதுதான் நல்லது. நீங்கள், இந்தப் பழக்கத்தை விட்டுவிட்டு ஆரோக்யமான நேர்முகமான நட்பினைப் பெண்களுடன் பாராட்டுவதுதான் மனசுக்கும் நல்லது.”



**25 வயதுள்ள இளைஞர் எனக்கு மெயில் அனுப்பி இருக்கிறார். “நான் செக்ஸுவலா ஃபிட்டா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள மருத்துவரீதியான டெஸ்ட் எதுவும் இருக்கா டாக்டர்..?” இதுதான் அவருடைய கேள்வி.**

இதற்கான என் பதிலை மெயில் செய்திருந்தேன். அது: ‘செக்ஸுவல் ஃபிட்னெஸ்’ என்பதே அபத்தமான வார்த்தைதான். ஏனென்றால் ஓர் ஆண் உடல்ரீதியாக ஆரோக்யமாக இருப்பான். ஆனால், மனரீதியாகப் பிரச்னை இருக்கும். சிலர் மனரீதியாக நன்றாக இருப்பார்கள். ஆனால், உடல் ரீதியாகப் பிரச்னை இருக்கும். இதெல்லாம் இல்லாமல் ஓரினச் சேர்க்கையாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டுமே நோர்மலாக இருக்கும். ஆகையால் உறுதியாக ஓர் ஆணோ பெண்ணோ செக்ஸுவலாக ஃபிட் எனச் சொல்வது ரொம்பக் கஷ்டம். அது விஞ்ஞானப் பூர்வமானதும்கிடையாது. பொதுவாகசெக்ஸில் ஈடுபடுவதற்கு உடல் ரீதியாக என்னென்ன விஷயங்கள் இருக்கின்றன என செக் பண்ணித் தெரிந்து கொள்ளலாம். ஜனன உறுப்புகளில் பிரச்சனை இருக்கலாம். அவற்றைப் பார்த்து நன்றாக இருக்கும் என்று மட்டும்தான் சொல்ல முடியும். அதேமாதிரி வெளியே தெரியாத சில மனப் பிரச்னைகளும் இருக்கும். அதற்கு மனோதத்துவ நிபுணரிடம் ஆலோசனை பெற வேண்டும். ஃபிட் என ஒன்றுமே இல்லை.”

**பெண்கள் சார்பாக ஒரு கேள்வி...**

**“நான் 5 மாத கர்ப்பிணி. செக்ஸில் ஈடுபடும்போது சிரமமாக ஃபீல் ஆகிறது. எதனால் இப்படி? இதற்கு என்ன ட்ரீட்மென்ட் டாக்டர்?”**

அதற்கான என் பதில்: ‘கர்ப்பமாக இருக்கும்போது பொசிஷன் காரணமாக வசதியாக இல்லாமல் இருப்பது உறவில் ரொம்பவே சகஜம். ‘சென்ட்ரல்ப்ரீவியா ப்ளாசென்டா’ போன்ற கர்ப்பப்பை சிக்கலும், ஆண் மற்றும் பெண் குறியில் நோய்த்தொற்றுகள் இருப்பதும், பெண்ணின் மேல் ஆண், அவள் வயிற்றின் மேல் பாகம் அழுத்த உறவில் ஈடுபடும்போதும் இதுபோல ஏற்படுவதுண்டு. கர்ப்பமாக இருக்கும்போது உறவில் ஈடுபடக் கூடாது என்பதும், கர்ப்பமாக இருக்கும்போது உறவில் ஈடுபட்டால் பிரசவம் ஈஸியாக இருக்கும் என்பதும் இரண்டுமே மூடநம்பிக்கைகள்தான். இருவருக்கும் ஆவல் இருந்து பெண்ணுக்கு வசதியான பொசிஷனை இருவரும் கலந்தாலோசித்து மெதுவாக உறவில் ஈடுபடலாம். இதுபோன்ற காலங்களில் உறவுகொள்வது மனரீதியாக இருவருக்குமே நெருக்கத்தைக் கொடுக்கும் என்பது ஓரளவு உண்மை. வயிற்றுப்பகுதி அழுத்த உறவில் ஈடுபடுவதுதான் சிக்கலாகும். மற்றபடி நீங்கள் தாராளமாக உறவில் ஈடுபடலாம். உடனடியாக நீங்கள் ரெகுலர் செக்அப் செல்லும் மருத்துவரிடம் நேரில் ஆலோசனை பெறுங்கள்.’

தொடரின் ஆரம்பத்தில் கேட்டிருந்த கேள்விக்கான பதில் என்ன தெரியுமா?

‘Coital thrusting’ எனப்படும் ஆண் குறியால் பெண்குறிக்குள் உந்தித்தள்ளி விந்தணு வெளியேற்றப்படும் வரையிலான ‘அனுபவிக்கும்’ இன்பத்துக்கு நேர வரையறையெல்லாம் இல்லை. மனிதருக்கு மனிதர் செக்ஸின் கால அளவு வேறுபடும். அவ்வளவு ஏன்? ஒரே மனிதனுக்கே ஒவ்வொருமுறையும் வெவ்வேறு நேர அளவில் இருக்கும்.

உலகப்புகழ்பெற்ற செக்ஸ் ஆராய்ச்சியாளர் கின்ஸியும் அவர் டீமும் உலகம் முழுவதும் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் உலகம் முழுவதுமுள்ள 75 சதவிகித ஆண்களுக்கு 2 நிமிட தொடர் உந்துதலுக்குப் பிறகு விந்து பெண்ணுறுப்புக்குள் செலுத்தப்படுகிறது என்று கண்டறிந்திருக்கிறார்கள்.. மற்றொரு உலகப்புகழ்பெற்ற செக்ஸ் ஆராய்ச்சியாளர்களான மாஸ்டர்ஸ் - ஜான்சன் ஆகியோர் ஒரு சராசரி ஆண், உடலுறவில் ஈடுபட்ட 4 நிமிடங்களில் உச்சக்கட்டத்தை எட்டி விந்தணுவைப் பெண்ணுறுப்புக்குள் செலுத்திவிடுகிறான் என்று கண்டறிந்திருக்கிறார்கள். அவுஸ்திரேலிய செக்ஸ் ஆராய்ச்சியாளர் ப்ரெண்டன் ஜெட்ச்சா 5.4 நிமிடங்களை உறவு நீடிக்கும் நேரமாகக் கணித்திருக்கிறார். ஒரு நிமிடத்தில் உச்சக்கட்டத்தை அடைவதும், 10 நிமிடத்துக்கு மேல் ஆகியும் உச்சக்கட்டத்தை எட்டாமல் இருப்பதும் மனம் சம்பந்தப்பட்டது. நேரம் கால அளவெல்லாம் செக்ஸுக்கு கணிப்பதே அபத்தம் என்பதே என் எண்ணம். **(கற்றுத் தருகிறேன்...)**





முல்லைத்தீவில் இம்முறை நடந்த நிகழ்வில் முதலமைச்சர்

# விவசாயிகள் கௌரவத்திற்கு தகுதியற்றவர்களா?

## என்ன நினைக்கிறது விவசாய அமைச்சு?

ஹரிஹர மகாதேவன்

கண்காட்சிகள், உழவர் விழா என பல விழாக்களை பெருந்தொகை பணத்தை செலவழித்து நடாத்தியதன் மூலம் மாகாணசபையின் பெரும் அளவிலான நிதியை ஐங்கரநேசன் வீண் விரயம் செய்துள்ளார். விவசாய கால்நடை திணைக்களம் வருடாந்தம் விவசாயிகளை ஊக்கப்படுத்த போட்டிகள் நடத்தி, பரிசில்கள் வழங்கி வந்தது. ஆனால் 2016ஆம் ஆண்டிலிருந்து மாகாணரீதியாக விவசாய அமைச்சரினால் (ஐங்கரநேசன்) ஆடம்பரமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இது நிதி வீண் விரயம் ஆகும்.

இந்த பகுதிகள், கடந்த வருடம் மே மாதம் வெளியான வடமாகாண அமைச்சர்கள் மீதான விசாரணைக் குழுவின் அறிக்கையில் இடம்பெற்ற பகுதிகள். அப்போதைய விவசாய அமைச்சராக இருந்த பொ.ஐங்கரநேசனின் மீது, அந்த விசாரணைக்குழு 'குற்றம் கண்டுபிடித்த' விடயங்களில் இதுவும் ஒன்று.

வடமாகாணத்தில் உழவர் விழாக்களை பெருமெடுப்பில் நடத்தியது் நிதி துஷ்பிரயோகமென ஒரு விசித்திர முடிவை விசாரணைக்குழு எடுக்க, இம்முறை மாவட்டரீதியில் சிறந்த பண்ணையாளர்கள், விவசாயிகள் கௌரவிப்பு என்ற பெயரில் சுரத்தில்லாமல் முடிந்துள்ளார்கள். இம்முறை உழவர்களிற்கான விழா நடந்ததா என்பதை சாதாரண மக்கள் அறிந்துகொள்ளவே வாய்ப்பில்லாமல், ஏனோதானோவென முடிந்துள்ளது.

இதுவரை மாகாணரீதியாக நடந்த உழவர் விழா இம்முறை, மாவட்டரீதியாக நடத்தப்பட்டுள்ளது. நிகழ்வு 'சப்' என முடிய இதுவும் ஒரு காரணம். வழக்கமாக உழவர் தினத்தில் பலவிதமான போட்டிகள் நடத்தப்படுவது வழக்கம். இம்முறை, அதுவும் மிஸ்ஸிங்.

மொத்தத்தில் உழவர்தினம் இம்முறை சோபையிழந்திருந்தது. போதுமான கவனத்தை பெற்றிருக்கவில்லை. ஏனிந்த குழப்பம் நேர்ந்தது?

முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பதவிவகித்த காலப்பகுதியில் விவசாய அமைச்சு பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்கமைத்து வந்தது. உழவர் தினம், மண் தினம், வடமாகாண பேரிடர் தணிப்பு தினம், வலசைப்பறவைகள் தினம், மரநடுகை மாதம் என வரிசையாக நிகழ்வுகள் நடந்தன. அவர் அமைச்சு பதவியிலிருந்து விலகிய பின்னர் எந்த நிகழ்வும் சரியாக ஒழுங்கமைத்து நடத்தப்படவில்லை. மாகாணசபையில் பிரேரணையாக நிறைவேற்றப்பட்ட பின்னரே இந்த நிகழ்வுகளில் பல நடத்தப்பட்டன. குறித்த நாளில் அந்த தின நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டுமென பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தாலும், இப்பொழுது அவை நடத்தப்படுவதில்லை. அல்லது, ஏனோதானோவென நடத்தப்படுகின்றன.

ஐங்கரநேசனின் அரசியல் எதிரிகளும், அவரது ஒழுங்கமைக்கும் திறனை பாராட்டுவதுண்டு. சாதாரண நிகழ்வுகளையும் பேசப்படும் விதமாக ஒழுங்கமைப்பதில் கில்லாடி. அதனால்தான் வடக்கு விவசாய அமைச்சோ திணைக்களமோ மரநடுகை விழாவை நடத்த முடியாமல் திணறிக்கொண்டிக்க, தனி ஆளாகா தனது சூழலியல் அமைப்பின் மூலம் நல்லூரில் பிரமாண்டமாக அவரால் செய்ய முடிந்தது. இந்த பிரமாண்ட ஒழுங்கமைப்புத்தான் அவருக்கு வில்லங்கமாகவும் முடிந்தது.

இம்முறை உழவர் விழாக்கள் ஏன் சோபை இழந்தன என, விவசாய திணைக்கள அதிகாரிகள் சிலருடன் பேசினோம். விசாரணைக்குழுவின் அறிக்கையைத்தான் காரணமாக சொன்னார்கள். தம்மால் சுதந்திரமாக சிந்திக்க முடியாமல் போனதாக சொன்னார்கள். "ஐங்கரநேசன் நிகழ்வு நடத்திய பணத்தை வீண் விரயமென அந்த விசாரணைக்குழு சொன்னது. நாங்கள் இம்முறை திட்டமிடும் நிகழ்வையும் வீண் விரயமென இன்னொரு குழு சொல்லாதென்பதற்கு உத்தரவாதமுள்ளதா? அதனால் சத்தமில்லாமல் விசயத்தை முடித்தோம்" என்றார் ஒரு அதிகாரி.

அதுவரை மாவட்ட மட்டத்தில் நடந்த, உழவர்தின நிகழ்வுகளை மாகாணமட்ட நிகழ்வாக்கினார் ஐங்கரநேசன். மாகாண மட்ட நிகழ்வாக அது நடத்தப்படும்போது, எல்லா மாவட்ட விவசாயிகளும் ஒன்றுகூடுவார்கள். இடத்துக்கிடம் மாறுபடும் பயிர்ச்செய்கை, தொழில்நுட்பம், சந்தை வாய்ப்புக்கள் பற்றி விவசாயிகள் அறிவுப்பரிமாற்றம் செய்துகொள்ளும் களமாகவும் அமையும். வடக்கை பொறுத்தவரையில் விவசாயிகள் ஒன்றுகூடும் ஒரே நிகழ்வாக உழவர் விழா மட்டுமேயிருந்தது. இப்பொழுது அதிகாரிகளே அதற்கு ஆப்பு வைத்துவிட்டனர்.

முன்னைய உழவர் விழாக்களின் போது, மாகாண மட்டத்தில் நிகழ்வுகள் நடந்தன. ஆனால் முறையான திட்டமிடலுடன் மாவட்டாரீதியிலான போட்டிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்தின் தேவைகள், விவசாய முறைகளை கவனத்தில் கொண்டு போட்டிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்தில் நுண் நீர்ப்பாசனம், காளான் வளர்ப்பு, கிளிநொச்சியில்புதிய பயிர் ஆக்கவியல் தொழில்நுட்பத்துடன் வர்த்தக ரீதியிலான பழ உற்பத்தி, நெல், மிளகாய், காளான் வளர்ப்பு, முல்லைத்தீவில் மறுவயல் பயிர்கள், பயிர்மாற்று திட்டம், தூவல் நீர்ப்பாசனம் மூலம் நிலக்கடலை உற்பத்தி, வவுனியாவில் சிறந்த சேதன உள்ளீட்டு உற்பத்தியாளர்கள், வயல் நிலங்களில் மாற்று பயிர்செய்கையாளர்கள், காளான் வளர்ப்பு, மன்னாரில் நெல் செய்கையில் களை முகாமைத்துவம் என பிரதேசத்தின் தன்மை, தேவைக்கு தக்கதாக போட்டிகள் நடத்தப்பட்டன. வெகுஜன கவர்ச்சியுடன் நடத்தப்பட்ட உழவர் விழாக்கள், மக்களிடம் விவசாய விழிப்புணர்வை ஓரளவு ஏற்படுத்தியிருந்தனஇ

வழக்கமாக தைப்பொங்கல் தினத்தில் உழவர் தின நிகழ்வுகள் நடத்தப்படும். ஆனால் இம்முறை உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்ததால், தைப்பொங்கல் நாளில் விழாவை நடத்தவில்லை. வெவ்வேறு திகதிகளில் கடந்தவாரத்தில்தான் மாவட்ட மட்டத்தில் நிகழ்வுகள் நடந்தன.

ஐங்கரநேசனின் பதவிக்காலத்தில் உழவர் விழாவிற்கென செலவிடப்பட்ட நிதியில், 76 வீதம் விவசாயிகளின் பரிசிற்காக செலவிடப்பட்டிருந்தது. விவசாயிகளின் பரிசிற்கென பெருமளவு நிதி அப்பொழுது ஒதுக்கிடப்பட்டிருந்தது. இந்த நிதியையே விசாரணைக்குழு வீண்விரயமென குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இடத்தில் பொதுவாக நமது அதிகாரிகளிடம் உள்ள எண்ணமொன்றை பற்றியும் குறிப்பிட வேண்டும்.

விவசாயிகள் என்பவர்கள் தோட்டத்தில் மட்டுமே இருக்க வேண்டியவர்கள், அரங்கிற்கு வரவேண்டியவர்கள் அல்ல... அவர்கள் பெரும் கௌரவிப்பிற்குரியவர்கள் அல்ல... அவர்கள் நவீன விவசாய நுட்பங்களை அறிந்துகொள்ள வேண்டியதில்லையென்றுதான் நமது அதிகாரிகள் நினைக்கிறார்கள். உழவர் விழா திட்டமிடும் முறை, முதலமைச்சரின் விசாரணைக்குழு அறிக்கையென்பன நமது அதிகாரிகளின் சிந்தனைப்போக்கை நன்றாக வெளிக்காட்டுகிறது. ஐங்கரநேசனின் காலத்தில் நடத்தப்பட்ட உழவர் விழாக்களில் விவசாயிகள் மாலை அணிவிக்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டனர். இம்முறை அது நடக்கவில்லை. நிகழ்விற்கு வந்த விருந்தினர்களிற்கு மட்டுமே மாலை அணிவிக்கப்பட்டது.

ஐங்கரநேசன் அமைச்சராக இருந்த

தொடர்ச்சி அடுத்தபக்கம்...




## தகவலிற்கு முன்னர் வந்த கல்!

கண்டி கலவரத்திற்கு கண்டனம் தெரிவித்து கிழக்கில் 06ம் திகதி கதவடைப்பு போராட்டம் நடந்தது. இதன் போது சில இடங்களில் தமிழ் மக்களின் வர்த்தக நிலையங்கள் மீது கல்வீச்சு தாக்குதல் நடந்துள்ளது. கதவடைப்பு போராட்டம் அவசர கதியில், முறையாக ஒழுங்கமைக்கப்படாமல் ஏற்பாடு செய்யப்பட்டதே இந்த குழப்பத்திற்கு காரணம். அக்கரைப்பற்று, அட்டாளைசேனை பள்ளிவாசல்களில் கதவடைப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, காலையில் அந்த பிரதேச கடைகள் அடைக்கப்பட்டன. போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்காமல் போராட்டத்தை நடத்துமாறு பள்ளி வாசல்களில் அறிவிக்கப்பட்டது. பின்னர் மெல்லமெல்ல மற்ற பிரதேசங்களிற்கும் போராட்டம் பரவியது. தமிழ் பகுதிகளிற்கு இதனால் தகவல் சென்று சேரவில்லை. அதற்குள் கல் வந்து விழுந்திருக்கிறது. சில இடங்களில் பேரூந்திற்கும் கல்வீச்சு நடந்துள்ளது.



## பருத்தித்துறையில் நாய்கள் காப்பகம்!

பருத்தித்துறை நகரசபையில் ஒரு முன்னுதாரண திட்டம் தயாராகிறது. பிரதேசத்தில் உள்ள கட்டாக்காலி நாய்களை பராமரிக்க காப்பகம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள். தன்னார்வ அமைப்பொன்று இதற்காக நிதி வழங்க முன்வந்துள்ளது. காப்பகம் ஒன்றை அமைத்து, நாய்களை பராமரிக்கும் வேலை நகரசபைக்கு. காப்பகம் அமைப்பது, இப்பொழுது பிரதேசசெயலகத்தின் கையில் உள்ளது. அவர்கள் நிலம் வழங்கினால் காப்பகம் அமைக்கலாம். நகரசபை நிலத்திற்காக விண்ணப்பித்துள்ளது. பிரதேசசெயலகம் நிலம் வழங்கினால், வடக்கில் ஒரு முன்னோடி திட்டம் ஆரம்பமாகும்!

## நியூஸ் பிட்ஸ்



## டீல்!

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு சட்டம், ஒழுங்கு அமைச்சு வழங்கப்படுமென கடந்த வாரம் முழுவதும் பரபரப்பாக பேசப்பட்டது. எனினும், இந்தவாரம் அப்படியொரு சம்பவத்திற்கான வாய்ப்பிருப்பதாகவே அரசாங்கம் காட்டிக்கொள்ளவில்லை. மைத்திரியின் திடீர் மனமாற்றமே, பொன்சேகாவிற்கு அந்த அமைச்சு செல்வதை தடுத்துள்ளது. மைத்திரியிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தியது, மஹிந்த ராஜபக்ச!

கடந்த 03ம் திகதி மைத்திரிபால சிறிசேனாவிற்கும், மஹிந்த ராஜபக்சவிற்குமிடையில் சந்திப்பொன்று நடந்துள்ளது. மைத்திரியின் சகோதரர் டட்லி சிறிசேனவின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடந்தது. இதன்போது மஹிந்தவிடமிருந்து ஒரேயொரு வேண்டுகோள் மட்டுமே விடுக்கப்பட்டுள்ளது. சட்டம், ஒழுங்கு அமைச்சு பொன்சேகாவிடம் வழங்கப்படகூடாது என்பதே அந்த கோரிக்கை.

“தேவையான எந்தவொரு ஒத்துழைப்பையும் வழங்குகிறோம். ரணிலை பிரதமர் பதவியில் நீடிக்கச் செய்து, நீங்கள் இப்படியே தொடர்ந்து பயணியுங்கள். நாம் எந்தவகையிலும் இடையூறு செய்யமாட்டோம். எனினும், சட்டம் ஒழுங்கு அமைச்சு பொன்சேகாவிடம் வழங்கப்படகூடாது. அப்படி வழங்கினால், அனைத்தும் சிக்கலில்த்தான் முடியும்“ என்றுள்ளார் மஹிந்த. தான் முன்வைக்கும் ஒரேயொரு கோரிக்கை இது மட்டும்தான் என்றும் கூறியிருந்தார்.

இதையடுத்து. பொன்சேகாவை சட்டம், ஒழுங்கு அமைச்சராக நியமிக்கும் எண்ணத்தை ஜனாதிபதி கைவிட்டுள்ளார்.

சமயத்தில் நிகழ்வுகள் பிரமாண்டாக நடத்தப்பட்டு, வெகுஜன கவனத்தை ஈர்த்திருந்தன. இதனால் பாத்தீனிய ஒழிப்பு, மரநடுகை, இயற்கை விவசாயம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டிருந்தது. அது சமூக வலைத்தளங்களிலும் பேசப்பட்டது. ஆனால் ஐங்கரநேசன் பதவிவிலகிய பின்னர், விவசாய அமைச்சின் நிகழ்வுகள் எதுவுமே வெகுஜன கவனத்தை ஈர்க்கவில்லை. இம்முறை உழவர் தின நிகழ்வுகள் விவசாயிகளை உற்சாகமூட்டும் விதமாக எழுச்சியேற்படுத்தும் விதமாக அமைந்திருக்கவில்லை. இதை அதிகாரிகளும், அமைச்சரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.




2017 கோப்பாயில் நடந்த உழவர்தின நிகழ்வு

நிதி விரயமென விசாரணைக்குழு எதை கருதுகிறதென தெரியவில்லையென, அந்த அறிக்கை வெளியான சமயத்திலேயே தீபம் கேள்வியெழுப்பியிருந்தது. விவசாயம், சூழல் விடயங்களில் நமது சமூகத்தின் கவனம் போதியளவு ஈர்க்கப்படாமலிருக்கிறது. இயற்கை விவசாயம், விவசாய தொழில் நுட்பங்கள் பற்றிய உரையாடலும், அறிமுகமும் தமிழகத்தில் கூட பரவலடைந்துவரும் நிலையில், இலங்கையில் அதுபற்றிய முறையான அறிமுகமும், உரையாடலும், கவனமும் திரும்பாமல் இருக்கிறது. உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் என பாலபடம் கற்றாலும், வாழ்க்கைக்கான புத்திசாலித்தனமான தொழிலாகவிவசாயத்தைஇளம்சமூகம் பார்ப்பதுவெகுவாக குறைந்து வருகிறது. விவசாயத்தை மீட்டெடுப்பதற்கும், அது பற்றிய உரையாடலை பரவலாக்கி, விவசாயிகளிற்கு உரிய கௌரவம் வழங்க அதிகபட்ச நிதி ஒதுக்கீடு செய்வதில் எந்த தவறுமில்லை. குளிரூட்டப்பட்ட அறைகளில் இருக்கும் அதிகாரிகளிற்கு செலவிடும் தொகையைவிட, விவசாயிகளிற்கு குறைந்தளவு நிதியே செலவிடப்படுகிறது.

விவசாயிகள் பற்றிய அதிகாரிகளின் பார்வையும், கொள்கையும் மாற்றமடைய வேண்டும். நிலமும், நீரும், விவசாயமும் நமது உயிராதாரங்கள். அதைகாப்பாற்றவும்,விருத்திசெய்யவும் எவ்வளவு பணம் ஒதுக்கினாலும் பொருத்தமே.

மண் தினம், வடமாகாண பேரிடர் தணிப்பு தினம், வலசைப்பறவைகள் தினம், மரநடுகை மாதம் என இந்த வருடத்தில் இன்னும் மிச்சமுள்ள நிகழ்வுகளிலாவது விவசாய அமைச்சரும், அதிகாரிகளும் கவனம் செலுத்துவார்களா?




# கருணாவிற்கு புலிகள் வழங்கிய இரகசிய வாக்குறுதி!

## கருணா தப்பிச்செல்வதற்கு முன்னர் இரகசிய உடன்பாடு எட்டப்பட்டது

பீஷ்மர்

விடுதலைப்புலிகளில் இருந்து பிரிந்த கருணா, அதிக நம்பிக்கை வைத்தது போர்நிறுத்த ஒப்பந்தத்திலேயே. போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை மீறி, புலிகள் பெருமளவு படையணியை, கனரக ஆயுதங்களுடன் நகர்த்த மாட்டார்கள் என கருணா நினைத்தார். ஏ 11 வீதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. விடுதலைப்புலிகள் அந்த வீதியை கடக்க இராணுவம் அனுமதிக்காதென கருணா நம்பினார். இந்தளவு விசயங்களையும் கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தேன்.


கருணா - பிரபாகரன்

புலிகள் ஏ 11 வீதியை கடந்ததுடன், அம்பாறையின் திருக்கோவிலிலும் தரையிறங்கினார்கள். அங்கிருந்தபடி கருணாவின் இளநிலை தளபதிகளுடன் தொலைத்தொடர்பு கருவிகளின் ஊடாக பேச்சு நடத்தினார்கள். கிட்டத்தட்ட ஒருநாள் முழுவதும் இந்த பேச்சு நடந்தது. களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள கருணாவின் முகாமில் இருந்தவர்களுடனேயே இந்த பேச்சு நடந்தது.

கருணாவிற்கு அடுத்த நிலையில் இருந்த தளபதிகள் ஜிம்கெலி தாத்தா, ரெபோர்ட் உள்ளிட்ட பலரை புலிகளின் பக்கம் மீண்டும் திருப்பியது இந்த பேச்சுத்தான்.

ஒரு நாள் முழுவதும் நடந்த பேச்சின்பின் களுவாஞ்சிக்குடி முகாமில் இருந்த கருணா அணியினர், மனம்மாறி புலிகளுடன் இணைந்தனர். அவர்களின் மூலமே தரவை மற்றும் வடமுனை முகாம்கள் மீது புலிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள்.

விடுதலைப்புலிகளில் இருந்து பிரிந்தபோது, தனது படையணிகளை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, கிழக்கை முழுவதும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாமென்றுதான் கருணா கணக்குப் போட்டார். ஆனால் அது நடக்கவில்லை. கருணாவின் கனவை புலிகளின் தொடர் நடவடிக்கைகள் தான் கலைத்தன என்றாலும், கருணாவிற்கு உயிர்ப்பயத்தை ஏற்படுத்தி, இனி கிழக்கில் நிற்க முடியாதென்ற நிலைமையை ஏற்படுத்தியது, மேலே சொன்ன இரண்டு முகாம்கள் மீதான தாக்குதலே.

தரவை, வடமுனையில் கருணா இரகசியமாக முகாம் அமைத்திருந்தார். ஆயுதங்களும் அங்கு சேமிக்கப்பட்டிருந்தன. கருணா அணியின் அதிஉயர்மட்ட இரகசிய முகாம்களாக அவை இருந்தன.

அந்த முகாம்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியபோதுதான், நிச்சயமற்ற தன்மையை கருணா உணர்ந்தார்.தனக்கு விசுவாசமானவர்கள் என யாரை அடையாளப்படுத்தலாமென்பதில் அவருக்கு குழப்பம். நம்பிக்கையானவர்கள் என அவர் நம்பியவர்கள் இப்பொழுது புலிகளுடன். கூடவே, பாதுகாப்பானதென கருதிய முகாம்களையும் புலிகளிடம் காட்டி கொடுத்து விட்டார்கள்!

தரவை, வடமுனையில் புலிகள் தாக்குதல் நடத்தியபோது, கருணா குடும்பிமலையில் இருந்த மருதம் முகாமில் இருந்தார். இரண்டு பிரதேசங்களிற்குமிடையில் அதிக தூரம் இருக்கவில்லை. எந்த நேரமும் புலிகள் மருதம் முகாமை தாக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டது.

இப்படியொரு நிலைமையை கருணா எதிர்பார்க்கவில்லை. 09,10,11ம் திகதிகளில் கருணா எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு, அவர் மிக குழம்பிய நிலையில் காணப்பட்டார். அவர் எதிர்பார்த்ததொன்று, ஆனால் நடந்தது தலைகீழாக.

கிழக்கில் தனது படையணிகளுடன் நிற்க முடியாதென்ற நிலைமை ஏற்பட்டபோது கருணாவிற்கு மிக குறைந்ததெரிவுகளே இருந்தன. மீண்டும் புலிகளுடன்இணையமுடியாது.தனக்கு மரணதண்டனை விதிப்பார்கள் என கருணா நினைத்தார். வெளிநாட்டுக்கு தப்பிச்செல்வதும் ரிஸ்க் ஆனது. ஆயுள் முழுவதும் வீட்டுக்கு வெளியே தலைகாட்டாமல் பதுங்கியிருக்க வேண்டும். அப்படியிருந்தும் புலிகள் மோப்பம் பிடித்தால், போட்டுதள்ளி விடுவார்கள். அடுத்தது, அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்வது. இதற்குள்ளும் இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒன்று இராணுவத்துடன் இணைந்து செயற்படுவது. இரண்டு, வெளிப்படையாக இணைந்து செயற்படாமல் இருப்பது. (இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்கு சென்றுவிட்டு, அரசுடன் எனக்கு தொடர்பில்லையென கூறினாலும் யாரும் நம்பப்போவதில்லை. ஆனால் தனித்து இயங்குகிறோம் என சொல்லிக்கொள்ளலாம்)

என்ன செய்வதென்ற குழப்பத்தில் தனது உயர்மட்ட தளபதிகளை மருதம் முகாமிற்கு 10ம் திகதி அழைத்தார். எல்லோரும் பதற்றத்துடன் இருந்தார்கள். அடுத்து என்ன செய்யலாமென்ற ஆலோசனை நடந்தது. கருணாவிற்கு மிக விசுவாசமான ஒருவர் சொன்னார் "நாங்கள் மட்டக்களப்பில் இனி தனித்து நிலங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது. அதனால் இராணுவத்துடன் சேர்ந்து செயற்படுவோம். அப்படியென்றால் தான் புலிகளை சமாளிக்கலாம்" என.

அவர் சொல்லிக்கொண்டிருந்த போது, அங்கு சலசலப்பு உருவாகி விட்டது. "புலிகள் எங்களுக்கு சரியான அங்கீகாரம் தரவில்லை, எம்மை வைத்தே யுத்தம் செய்கிறார்கள், எமது பகுதியை நாமே கவனிக்க வேண்டும் என்று சொன்னீர்கள். சரி, அதை ஏற்றோம். ஆனால், அதற்காக இராணுவத்துடன் எம்மால் இணைய முடியாது. நாம் காட்டுக்குள் தலைமறைவாக இருந்து புலிகள், இராணுவம் இரண்டு தரப்புடனும் போராடுவோம்" என்றார்கள் பல தளபதிகள். இதனால் அந்த கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

கூட்டத்தின் பின் கலந்துபேசிய தளபதிகள் பலர், கருணாவின் முடிவுடன் உடன்படுவதில்லையென்ற முடிவை எடுத்தனர். இந்த சமயத்திலேயே களுவாஞ்சிக்குடி முகாமுடன் புலிகள் தொடர்பை ஏற்படுத்தி பேசினார்கள். கருணாவை நம்பி புலிகளையும்பகைத்தாகிவிட்டது, கருணாவின் முடிவுடன் தொடர்ந்து

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

உடன்பட முடியாமலிருக்கிறதென்ற தத்தளிப்பில் தளபதிகள் இருந்த சமயத்தில், புலிகள் தரப்பிலிருந்து சாதகமான சிக்னல் கிடைக்க, பல தளபதிகள் புலிகளிடம் சரணடைய ஆரம்பித்தனர்.

மொத்தத்தில் கருணாவின் சாம்ராஜ்யம் உடைந்து கொட்டுப்பட ஆரம்பித்தது. அவருக்கு என்ன செய்வதென்று தெரியாத நெருக்கடியை, ஒவ்வொரு நாளும் அதிகம்அதிகமாக புலிகள் ஏற்படுத்தினார்கள்.

கருணா விவகாரத்தை இயன்றவரை சமரசமாக முடிக்கவே புலிகள் விரும்பினார்கள் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். மிகப்பெரிய அமைப்பாக வளர்ச்சியடைந்த புலிகள், இராணுவரீதியிலான எந்த விட்டுக்கொடுப்பையும் கருணாவுடன் செய்துகொள்ள தயாராக இருக்கவில்லை. ஆனால், கருணாவிற்கு பொதுமன்னிப்பளித்து, கருணா எடுத்துக்கொண்ட சொத்துக்களுடன் வெளிநாட்டிற்கு சென்று வாழ அனுமதித்தார்கள். ஆனால் அப்பொழுது கருணா அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

புலிகள் கருணாவின் மீது இறுதி தாக்குதலை ஆரம்பித்த சமயத்தில், கிழக்கிலுள்ள சில பிரமுகர்கள்,

**2004 ஏப்ரல் 11ம் திகதி காலை. கிளிநொச்சியிலுள்ள புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்திற்கு கருணா ஒரு தொலைநகல் அனுப்பினார். தனது அமைப்பை கலைத்து விட்டு, கிழக்கைவிட்டு வெளியேறிச் செல்வதாக அதில் குறிப்பிட்டிருந்தார்.**

வெளிநாடுகளில் இருந்த சில பிரமுகர்கள், சில அமைப்புக்கள் எனபலமுனையில் சமரச பேச்சுக்கள் ஆரம்பித்தன. இரண்டு தரப்பிற்குள்ளும் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்த அவர்கள் முயன்றனர். கருணா கிழக்கை விட்டு வெளியேற வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இருந்து புலிகள் பின்வாங்கவில்லை. ஆரம்பத்தில் இதற்கு கருணா உடன்படாததாலேயே கடுமையான மோதல் ஏற்பட்டது. ஆனால், புலிகளின் அதிரடி தாக்குதல் ஆரம்பித்த பின்னர், சமரசத்திற்கு கருணா இறங்கி வந்தார். அவருக்கு அதைவிட வேறு தெரிவுகள் இருக்கவில்லை.

இதன்மூலம் இரண்டு தரப்பும் தலா எட்டுவாக்குறுதிகளை வழங்கி, இரகசிய உடன்படிக்கைக்கு இணங்கினார்கள். இவை அனைத்துமே வாய்மூலமான இரகசிய வாக்குறுதிகள். உயர்மட்ட அளவில் நடந்த பேச்சுக்களில் பரிமாறப்பட்டவை. மிகச்சில பேர் மட்டுமே சம்பந்தப்பட்ட விசயங்கள் அவை. தீபம் வாசகர்களிற்காக இப்போது அவற்றை தருகிறோம்.

கருணா தரப்பிலிருந்து புலிகளிற்கு எட்டு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

*1. உடனடியாக கருணா போராட்டத்தை நிரந்தரமாக நிறுத்திக்கொள்வார்.*


*2. கிழக்கிலுள்ள முகாம்களில் நிலைகொள்ள வைக்கப்பட்ட படையணிகளை மீளப்பெற்று, அவற்றை கலைத்து, அவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.*

*3. கருணா அணியிடமுள்ள அனைத்து ஆயுதங்களையும் புலிகளிடம் மீள ஒப்படைப்பார்கள். புலிகளின் எந்தவித இராணுவ சொத்தும் கருணா தரப்பினர் வைத்திருக்க முடியாது.*

*4. கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள், போராளிகளை உடனடியாக ஆபத்தின்றி விடுதலை செய்வார்கள்.*

*5. வடக்கு, கிழக்கில் இருந்து கருணா (இந்த இடத்தில் தமிழீழம் என்ற சொல்லை பாவித்திருந்தார்கள்) உடனடியாக வெளியேறுவார். எந்த காலத்திலும் இங்கு திரும்பி வர மாட்டார்.*

*6. எதிர்காலத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக இராணுவ அல்லது அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடாமல் ஓதுங்கியிருப்பார்.*



*7. வெளியேறிய பின்னர் புலிகளை விமர்சிக்கமாட்டார். புலிகள் பற்றிய அனைத்து விசயங்களிலும் மௌனம் சாதிப்பார். ஊடக பேட்டிகளிலிருந்து ஓதுங்கியிருப்பார்.*

*8. உடனடியாக வடக்கு, கிழக்கிலிருந்து வெளியேறி, ஸ்ரீலங்கா பகுதிக்கு சென்றாலும், இயன்ற விரைவில் இலங்கைக்கு வெளியே ஒரு பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துக்கொள்வார்.*

இதற்கு பின்னர் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து எட்டு வாக்குறுதிகள் கருணாவிற்கு வழங்கப்பட்டன. அவை

*1. கிழக்கை விட்டோ அல்லது இலங்கையை விட்டோ கருணா வெளியேறுவதற்கு எந்த இடையூறும் செய்யமாட்டோம்.*

*2. கிழக்கிலிருந்து வெளியேறி இலங்கையின் ஏனைய பகுதியில் இருக்கும்போதோ, அல்லது இலங்கையை விட்டு வெளியேறி வெளிநாட்டில் இருக்கும் போதோ, கருணாவை கொல்லும் எண்ணம் இல்லை. அப்படியொரு முயற்சி நடக்காது.*

*3. கருணாவால் எடுக்கப்பட்டுள்ள புலிகளின் சொத்துக்களான பணம் மற்றும் பெறுமதியான ஏனையவற்றை திரும்ப ஒப்படைக்கும்படி கேட்கப்போவதில்லை.*

*4. கருணாவுடன் பிரிந்து சென்ற போராளிகளிற்கு எந்த கெடுதலும் செய்யமாட்டோம். அவர்களின் இயல்பு வாழ்க்கையை தொடர அனுமதிப்போம்.*

*5. அதேநேரம், கருணா அணியிலிருந்த யாராவது, மீண்டும் எம்முடன் இணைய விரும்பினால் அதை எங்களால் தடுக்க முடியாது.*

*6. விடுதலைப்புலிகளின் தலைமைக்கு எதிராக, கருணாவுடன் இணைந்து சாதாரண போராளிகளை வழிநடத்திய கருணாவின் கீழிருந்த தளபதிகளையும் தண்டிப்பதில்லை. சிறிய விசாரணையின் பின்னர், அவர்கள் விரும்பிய முடிவை எடுக்கலாம்.*

*7. கிழக்கை விட்டோ அல்லது இலங்கையை விட்டோ அவர்கள் செல்ல விரும்பினால், அதற்கு எந்த தடையும் விதிக்கமாட்டோம்.*

*8. கருணாவிற்கு ஆதரவு தெரிவித்த மற்றும் புலிகளின் அலுவலகங்களிற்கு நெருப்பு வைத்த, கொடும்பாவிகளை எரித்த கிழக்கு பொதுமக்களிற்கும் நிபந்தனையற்ற மன்னிப்பு வழங்குவோம். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது.*

இரண்டு தரப்புடனும் பேச்சு நடத்திய சில இடைத்தரகர்களின் மூலமே இந்த வாக்குறுதிகள் பரிமாறப்பட்டன. கிழக்கு விசயத்தை சுமுகமாக முடிக்க வேண்டுமென்பதில் பிரபாகரன் எவ்வளவு அக்கறையாக இருந்தார் என்பதற்கு இந்த சம்பவம் ஒரு உதாரணம். ஆனால் புலிகள் ஒரேயொரு நிபந்தனை வைத்திருந்தார்கள். இந்த உடன்பாடு நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பிப்பதென்றால், கருணா தரப்பிலிருந்து ஒரு விசயம் நடக்க வேண்டும். தனது அமைப்பை கலைத்துவிட்டு, கிழக்கிலிருந்து வெளியேறுகிறேன் என எழுத்துமூலம் கருணா அறிவிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை!

*2004 ஏப்ரல் 11ம் திகதி காலை. கிளிநொச்சியிலுள்ள புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்திற்கு கருணா ஒரு தொலைநகல் அனுப்பினார். தனது அமைப்பை கலைத்து விட்டு, கிழக்கைவிட்டு வெளியேறிச் செல்வதாக அதில் குறிப்பிட்டிருந்தார்.*

புலிகள் கருணாவிற்கிடையிலான எழுதப்படாத உடன்படிக்கை 2004 ஏப்ரல் 11ம் திகதி காலையில் ஆரம்பித்தது!

அன்றுதான் கிழக்கை விட்டு வெளியேறிச்செல்லும் இறுதிக்கட்ட நடவடிக்கைகளை கருணா ஆரம்பித்தார். தனது கட்டுப்பாட்டில் இருந்த தாக்குதல் அணிகளை ஒரு இடத்தில் ஒன்றுகூட வைத்து, தனது முடிவை அறிவித்தார். உயர்மட்ட தளபதிகள் இதை மௌனமாக ஏற்றுக் கொண்டனர். அடிமட்ட போராளிகள் சிலர்தான் கருணாவிற்காக கதைத்து, இந்த முடிவை ஏற்க முடியாதென்றார்கள். ஆனால், அண்ணளவாக 4,000 போராளிகளை கருணா வீடு செல்ல பணித்தார். அவர்களின் ஆயுதங்களும், சீருடைகளும் ஒரு இடத்தில் குவிக்கப்பட்டது. அடையாள அட்டை, சயனைட் குப்பி மற்றும் புலிகளின் உடமைகள் அனைத்தும் வாங்கப்பட்டது. முகாமிலிருந்த புலிகள் சாதாரண உடையுடன் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். விசயத்தை கேள்விப்பட்ட பல பெற்றோர், முகாம் வாசலுக்கு வந்து தமது பிள்ளைகளை அழைத்து சென்றனர்.

இன்னொரு முகாமில் நிலாவினி தலைமையில் 400 பெண் போராளிகள் நின்றார்கள். ஆண் போராளிகளை போல, பெண் போராளிகளை இந்த விசயத்தில் கருணாவால் சமாளிக்க முடியவில்லை. “கிழக்கில் இயங்கிய விடுதலைப்புலிகள் அமைப்பை கலைக்கிறேன். நான் புலிகளில் இருந்து விலகி கொழும்பிற்கு செல்கிறேன். நீங்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புங்கள். இப்போது, உங்களின் ஆயுதங்கள், சீருடை, குப்பி, தகடு என்பவற்றை ஒப்படையுங்கள்“ என கருணா அவசரகதியில் உரையாற்றினார். ஆரம்பத்தில் இதை பெண் போராளிகள் நம்பவில்லை. தமது விசுவாசத்தை சோதிக்க, தளபதி அப்படி பேசுகிறார் என்றுதான் நினைத்தார்கள்.

அவர்கள் புரியாமல் பேசிக் கொண்டிருந்தது கருணாவிற்கு எரிச்சலையூட்டியது. விடுதலைப்புலிகள் தாக்க வருகிறார்கள், ஒரு நிமிடம் தாமதித்தால்கூட உயிராபத்தாகிவிடும் என கருணா எச்சரித்தார். ஆனால் அந்த பெண்போராளிகள் வீட்டுக்கு செல்ல சம்மதிக்கவில்லை. இறுதியில் வேறு வழியில்லாமல், தனது மெய்ப் பாதுகாவலரை அழைத்து, அவரிடமிருந்த கைக்குண்டு ஒன்றை அந்த போராளிகளிற்கு அண்மையில் வெடிக்கவைத்தார். பெண்போராளிகள் கூச்சலிட்டபடி சிதறி ஓடினார்கள்.

*2004 ஏப்ரல் 12ம் திகதி. கிழக்கை விட்டு வெளியேறிச் செல்லும் ஏற்பாட்டை கருணா செய்திருந்தார். அப்போதைய ஐ.தே.க எம்.பி அல்சாஹிர் மௌலானாவின் ஏற்பாட்டில், கருணா மட்டக்களப்பிலிருந்து கொழும்பை நோக்கி புறப்படவிருந்தார். புறப்படுவதற்கு சற்று முன்னதாக ஒரு சம்பவம் நடந்தது.*

அதுதான் புலிகள் கருணா உடன்படிக்கையின் முதலாவது மீறல். அந்த உடன்படிக்கை வலுவிழக்க காரணமாக இருந்ததும் அதுதான். அந்த தவறை கருணா தரப்பே செய்தது.

*அது என்ன தவறு?*

*அடுத்த வாரம் சொல்கிறேன்.*

*(தொடரும்)*





13-ம் பக்க தொடர்ச்சி...

ததை உணர முடியாமலே எங்களைக் கவர்ந்தன. மேலும் கீழுமாகப் பள்ளத் தாக்குகளின் ஊடாகவும் குன்றுகளின் ஊடாகவும் நடந்து களித்தோம்.

ஒரு பக்கமாக இருந்த குன்று ஒன்றின் மீது 1780 களில் கட்டப்பட்ட சிறிய ஒரு ஓர்த்டொக்ஸ் மடமும் தேவாலயமும் இருக்கிறது. அலெக்ஸாண்டி ரோஸ் யிப்ஸிலாந்திஸ் என்ற மோல்டாவிய நாட்டு - அரசகுமாரன் ஒத்தமானிய அரசர்களுடன் போர்களில் ஈடுபட்டு தோற்றுப்போய் இப்பகுதியில் வந்து ஒளிந்திருந்தபோது அதை ஸ்தாபித்ததாக கூறப்படுகிறது.

இன்னொரு கதை அதே அரசனின் மகள் கடுஞ் சுகவீனமுற்று இருந்தபோது இங்கே வந்து இந்தக் குன்றிலிருந்து வரும் நீரூற்று ஒன்றில் வரும் நீரைப் பருகி கலோபெத்ரா கன்னி [மரியாள்] ஆசீர்வாதத்தால் சுகம் பெற்றதால் அதற்காக இக் கோவில் கட்டப்பட்டதாக சொல்கிறது.

எப்படியாயின் ரோடோஸில் பல குன்றுகளிலும் இருக்கும் தேவாலயங்களும் மடங்களும் இரண்டு விதமான தொடர்புகளை கொண்ட கதைகளைச் சொல்வதை கவனிக்கக்கூடியதாக இருக்கிறது. ஒன்று அன்னை மரியாள் இஸ்லாமிய அரசர்களுடன் போரிட்ட ஒரு முக்கியஸ்தரை பாதுகாத்ததாகவோ அல்லது குணப்படுத்தியதாகவோ அக் கதைகள் சொல்கின்றன.

இப்படியான கதைகளும் சரித்திரங்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து சுற்று வட்டாரத்தில் வாழும் மக்களின் சமய நம்பிக்கையுடன் கலந்திருக்கிறது. பொதுவாக கிரீஸைப் பொறுத்தவரை ஒத்தமானிய ராஜ்யத்தின் படையெடுப்பும் ஓர்த்தடொக்ஸ் கிறீஸ்துவ நம்பிக்கையும் நாட்டின் சரித்திர, கலாச்சார, பாரம்பரியத்தில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்களையே இவைகள் தெரியப் படுத்துகின்றன.

ரோடோஸுக்கு போகமுன்பு கிரேக்கத்தின் சிறிய தீவுகளில் ஒன்றான அங்கே இத்தனை முக்கியமான சரித்திரம் புதைந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கடற்கரைக் குளியல் எங்களது சுற்றுலாவின் முக்கிய குறியாக எப்போதும் இருந்ததில்லை. ஆனால், பெரும்பாலானோர் ரோடோஸைக் குளியலிலும், போதையிலும் கடந்து செல்லும்போது அங்கே ஐரோப்பாவின் அதிமுக்கியமான சரித்திர விடயங்களின் காலடிச் சுவடுகளை கவனிப்பதில்லை.

திரும்பிப் போகும்போது மதியம் தாண்டியிருந்தது. அவ் வழியில் இருந்த கிரிட்டீனா என்ற ஒரு சிறிய கிராமமும் அதன் சதுக்கமும் நாங்கள் ஏற்கனவே கவனித்த ஒரு அழகான இடம். அங்கே சிறியதாக இரண்டு உணவு விடுதிகள் இருந்தன. வளைந்து வளைந்து குன்றுகளுக்கூடாக போகும் வழியில் ஒரு குன்றின் உச்சியில் அமைந்திருந்தது கிரிட்டீனா கிராமத்தின் மையத்திலிருந்த சதுக்கம்.

அதை முழுவதுமாக அடர்ந்த சில மரங்கள் தங்களின் பாரிய விருட்சத்தினால் ஆக்கிரமித்து இயற்கையாக நிழலும் அழகும் வழங்கிக் கொண்டிருந்தன. அங்கே ஒரு தடவையாவது சாப்பிட வேண்டும் என்று நாங்களிருவரும் ஆசைப்பட்டது இப்பிரயாணத்தில் நிறைவேறியது.

அடுத்தநாள் இதே நேரம் நாங்கள் விமான நிலையத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருப்போம் என்று கதைத்தபடி நானும், கதிரும் "தவரணாபியாட்ஸா" உணவகத்தில் சாப்பிட்டோம்.

வழக்கம் போல ரோடோஸ் சுற்றுலாவுக்கு முன்னும் பின்னும் அவ்விடத்தைப் பற்றிய பல விடயங்களை தெரிந்து கொண்டாலும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகவும் நான் சில விடயங்களை மேலும் ஆழமாகத் தேட வேண்டியிருந்தது. அந்த ஆர்வத்தை எனக்கு உண்டாக்கியதற்காகவும், எனது பிரயாண அனுபவத்தை வாசித்ததற்கும் நன்றி!

**முற்றும்.**

---

18-ம் பக்க தொடர்ச்சி...

இருக்க வேண்டும். கொள்முதல் செய்வது முதல் உற்பத்தி, விற்பனை, விநியோகம், திரும்ப வாங்குவது வரை அத்தனை நிலைகளிலும் பொருள்களைக் கையாள்வது என்பது நன்குதிட்டமிடப்பட்ட செயல்பாடாக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு நிலையிலும் பொருள்களைக் கையாள்வதற்கு சரியான நபர் நியமிக்கப்பட வேண்டும். அதே சமயம், பொருள்களின் நகர்வுகள் என்பது ஒவ்வொரு நிலையிலும் பதிவு செய்யப்பட வேண்டும். ஏனெனில், அப்போதுதான் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக்கொள்ளவும், இழப்புகளைக் குறைக்கவும், அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் திட்டமிடவும் முடியும்.

பாதாளம் வரை பாயும் பணம்

ஒரு பிஸ்னஸுக்கு மிகு முக்கியமான தேவை ' பணம். பிசினஸில் வைட்டமின் என்பது 'வி' எனச் சுருக்கமாகச் சொல்லப்படுகிற பணம் தான். இதன் நகர்வு என்பது சரியாக இல்லாவிட்டால், மிகப் பெரும் நஷ்டத்தை அடைய வேண்டி வந்துவிடும்.

இந்தப் பணமானது நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் என்றால் அதன் நகர்வைக் கண்காணித்துக்கொண்டே இருக்க வேண்டும். பணத்தைக் கையாள்பவரை முடிவுசெய்வதிலிருந்து, பணம் எங்கெல்லாம், எதற்கெல்லாம் போகிறது என்பது வரை அனைத்தும் திட்டமிடப்பட வேண்டும்.

பணம் பாதாளம் வரை பாயும் என்பார்கள். ஆனால், பாதாளம் வரை பாயாமல் நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

தொழில் செயல்முறை வடிவத்தில் செய்ய வேண்டிய முக்கியமான விஷயங்கள்:

1. செயல்பாடுகளைத் திட்டமிடுதல்
2. செயலை ஒருங்கிணைத்தல்
3. விவரங்களைச் சேகரித்தல்
4. விவரங்களை ஆராய்தல்
5. பிரச்னையைக் கண்டறிதல்
6. அடுத்தகட்ட நடவடிக்கையைத் திட்டமிடுதல்
7. தொடர்ந்து கண்காணித்தல்

ஆகியவைதான்.

இவற்றை பிஸ்னஸின் ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு செயல்பாடுகளிலும் கடைப்பிடிப்பதே ஒரு வெற்றிகரமான பிஸ்னஸுக்கு வழிவகுக்கும்.

உலகம் நாளுக்கு நாள் நவீனமாகிக்கொண்டு இருந்தாலும், எவ்வளவோ தொழில்நுட்பங்கள் வளர்ந்தாலும், நாம் செய்யவேண்டிய வேலைகள் அதிகரித்துக்கொண்டேதான் இருக்கின்றன. ஆனால், அவற்றை செய்து முடிப்பதற்கான காலம் என்பது மிக மிகக் குறைவாகவே இருக்கிறது.

நமக்கு இருக்கும் குறுகிய காலத்தில் நமக்கான அத்தனை வேலைகளையும் முடிக்க, வலிமையான செயல்முறை வடிவம் கட்டாயம் தேவை. அப்படி ஒன்றை உருவாக்கி, அதன்படி செயல்பட்டால்தான் நம்முடைய இலக்குகளை நம்மால் எட்டிப் பிடிக்க முடியும். தொடரும்...

---

4-ம் பக்க தொடர்ச்சி...

பேர் குழந்தைகள். இரண்டாவது உலகப் போர்கூட இத்தனை ஆண்டுகள் நடந்ததில்லை. சிரியாவின் நரக நாட்கள் அத்தனை நீண்டவை!

### ஐநா தீர்மானம்

போரை ஒரு மாதத்துக்கு நிறுத்துங்கள் என்று ஐநா சபை கடந்த பெப்ரவரி 24ல் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் சிரிய அரசு இந்தப் போர் நிறுத்தத்தை பகலில் அதுவும் சில மணி நேரங்களுக்கு மட்டும்தான் கடைப்பிடிப்போம் என்கிறது.

அரசை எதிர்க்கும் படைகளிடம் ஆபத்தான ஆயுதங்கள் இருப்பதால் போர் நிறுத்தத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாது என்கிறது. அரசை எதிர்ப்போர் ஆயுதங்களுடன் சரண் அடைந்தால்தான் இது சாத்தியம் என்கிறது. அத்துடன் முற்றுகைக்குள்ளான பகுதியில் உள்ள மக்களுக்கான உணவுப் பொருட்கள், உயிர் காக்கும் மருந்துகள் போன்றவை 40 லொரிகளில் டமாஸ்கஸில் தயாராக இருக்கின்றன. அரசுப் படைகள் அனுமதி தராததால் அவை காத்துக்கிடக்கின்றன.

சிரியாவே நாசமானாலும் பரவாயில்லை, எதிரிக்கு அடங்கிவிடக் கூடாது என்பதே எல்லோருடைய முடிவாகவும் இருக்கிறது. சிரிய அரசுக்கு இப்போது ரஷ்யா பக்கபலமாக இருக்கிறது. அரசை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளின் படைகளுக்கு அமெரிக்கா துணையாக இருக்கிறது. 30,000 பேரைக் கொண்ட எல்லை பாதுகாப்புப் படையை உருவாக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இது சிரிய அரசுக்கு மிகப் பெரிய



கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சிரிய அரசுப் படைகள், சிரிய ஜனநாயக ஆதரவுப் படைகள், சிரிய எதிர்க்கட்சிகளின் ஆதரவுப் படைகள், ஐஎஸ் படைகள், தாஹிர் அல் ஷாம் என்ற படை என்று களத்தில் ஐந்து வெவ்வேறு அணிகள் இருக்கின்றன.

ஐநா சபை மட்டும் முயற்சி எடுத்தால் போதாது, அரபு நாடுகளும் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பும் தீவிர முயற்சி மேற்கொண்டால்தான் இந்த அர்த்தமற்ற போர் ஓய்ந்து இருப்பவர்களாவது நிம்மதியாக வாழ முடியும். போர் ஓய்ந்தாலும் சிரியாவைச் சீரமைத்து பழைய நிலைக்குக் கொண்டுவர குறைந்தது இருபது முதல் ஐம்பது ஆண்டுகள் தேவைப்படும். வெகு விரைவில் உள்நாட்டுப் போர் ஓய்ந்து சிரியாவில் அமைதி நிலவ வேண்டும். அதுதான் மனிதம் மிச்சமிருக்கும் மனங்களில் ஒலித்துக்கொண்டிருக்கும் பிரார்த்தனை!

# சென்றதும் வென்றதும்! 6

## ஜேம்ஸ் குக்

'மனிதர்களால் நினைத்துப்பார்க்க முடியாத இடத்துக்குப் போக வேண்டும் என்பதுதான் என் எளிமையான கனவு' என்றார் ஜேம்ஸ் குக்.

அப்படி ஒரு வாய்ப்பு அவரைத் தேடி வந்தது. 'டெர்ரா ஒஸ்ட்ராலிஸ் (Terra Australis) போய் வரவேண்டும். முடியுமா?' என்று கேட்டார்கள். 'ஓ... நான் தயார்' என்று கிளம்பிவிட்டார் ஜேம்ஸ் குக்.



அது என்ன டெர்ரா ஒஸ்டிராலிஸ்? 15ம் நூற்றாண்டு முதல் 18ம் நூற்றாண்டு வரை தயாரிக்கப்பட்ட பல வரைபடங்களில் இந்தப் பெயரைப் பார்க்கலாம். ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா போல அது ஒரு பெரிய கண்டம் என்றும், பல அற்புதமான உயிரினங்களைக்கொண்ட பெரிய நிலப் பிரதேசம் என்றும், நீண்ட பனிப் பிரதேசம் என்றும் பலவிதமாகச் சொல்வார்கள்.

சரி, குறிப்பாக அது எங்கே இருக்கிறது? இங்கேதான் சிக்கலே. யாரும் அதைப் பார்த்தது இல்லை. இருக்கு, ஆனால் எங்கே என்று தெரியாது. இருந்தாலும், ஜேம்ஸ் குக் கிளம்பிவிட்டார். ஏற்கெனவே, அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரை முழுக்க சுற்றி வந்தவர். தெற்கில் நியூஸிலாந்து வரை சென்றவர். தெற்கில் இன்னும் கொஞ்சம் போனால், ஒளிந்துகொண்டிருக்கும் 'அந்த டெர்ரா ஒஸ்ட்ராலிஸ் என்னும் மாயக் கண்டத்தைக் கண்டுபிடித்துவிட முடியாதா என்ன?

1772ம் ஆண்டு குக்கின் இரண்டாவது பயணம் ஆரம்பமானது. இந்த முறை, 'ரிசல்யூஷன்', 'அட்வென்ச்சர்' என்ற கப்பல்கள் தயாராக இருந்தன. கப்பலில் ஏறியதுமே குக் வழக்கம்போல பணியாளர்களை அழைத்தார். அதே பழைய பல்லவி. தினமும் குளி, துணிகளைத் துவைத்துக் காயப்போடு, சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் கைகளைக் கழுவிக்கொள் எனும் அறிவுரைகள்.

அப்போது, 'ஸ்கர்வி' எனப்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு நோய் தாக்கும். மாலுமிகள், கப்பல் பணியாளர்கள், பயணிகள் பலரும் பயணத்தின்போதே உயிரிழந்தனர். தன்னுடன் வருபவர்களுக்கு ஸ்கர்வி வந்துவிடக் கூடாது என ஓர் ஆராய்ச்சியாளராகவே மாறி, பல பரிசோதனைகளை மேற்கொண்டார் ஜேம்ஸ் குக்.

பலவிதமான புட்டிகளில், வகைவகையான சாறுகளைப் பிழிந்து, அவற்றை அனைவருக்கும் கொடுத்தார் ஜேம்ஸ் குக். என்ன கொடுத்தாலும் ஏன், ஏது எனக் கேள்விகள் கேட்காமல் வாங்கி, டபக்கெனக் குடித்துவிட வேண்டும். ஊறவைத்த கரட், மோல்ட், ஒரேஞ்ச், எலுமிச்சைச் சாறு ஆகியவை குக் அதிகம் பயன்படுத்திய மருந்துகள். இயற்கை மருத்துவத்தில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. தன்னுடன் சில மருத்துவர்களையும் அழைத்து வந்திருந்தார். செடி, கொடி, இலை, தழை எனப் பலவற்றைச் சேகரித்து, அவற்றின் மருத்துவக் குணங்களைக் கண்டு பிடிப்பார்கள். இந்தப் பரிசோதனை பெரும் வெற்றி பெற்றது. ஜேம்ஸ் குக் சென்ற கப்பல்கள் தவிர, மற்ற கப்பல்களில் சென்றவர்களில் பலரை ஸ்கர்வி நோய் தாக்கியது.

அதன் பிறகு புறப்பட்ட கப்பல்கள் அனைத்திலும் ஜேம்ஸ் குக்கின் வழிமுறையே கையாளப்பட்டது. குறிப்பாக, எலுமிச்சைச் சாறு பலவித உபாதைகளுக்கு உதவியாக இருந்தது. வரைபடம் இருக்கிறதா என்பதைவிட, எலுமிச்சைச் சாறு இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட பிறகுதான் கப்பலையே இயக்கினார்கள். எல்லா மாலுமிகளும் தங்கள் பணியாளர்களுக்கு ஜேம்ஸ் குக் வழங்கிய அதே முழ நீள அறிவுரைகளை வழங்கினார்கள். சுத்தமாக இருந்து, நல்ல உணவைச் சாப்பிட்டார்கள்.

சரி, டெர்ரா ஒஸ்ட்ராலிஸ் என்ன ஆனது? நியூஸிலாந்தில் டேராபோட்டுத் தங்கிய ஜேம்ஸ் குக், அங்கிருந்து எல்லாத் திசைகளிலும் சென்று பார்த்தார். எந்தக் கண்டத்தையும் காண முடியவில்லை. கடுமையான குளிர் வாட்டியது. பெரிய பெரிய பனிப் பாறைகள் தென்பட்டன. திடீரென்று சூறாவளி தாக்கியது. இரவு நேரங்களில் புயல் வீசியபோது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டார்கள்.

இப்படி 10,600 மைல் தூரத்தை ஜேம்ஸ் குக் கடந்துசென்றார். எந்தவித நிலப்பரப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. 'டெர்ரா ஒஸ்ட்ராலிஸ் என்பது ஒரு கற்பனை இடம். யாரும் அதைத் தேடிப் போக வேண்டாம்' எனத் தன் நோட்டுப் புத்தகத்தில் எழுதினார்.

அவர் சொன்ன பிறகுதான் உலகம் ஏற்றுக்கொண்டது. புதிய கண்டத்தைக் கண்டுபிடித்து புகழ் பெற்றவர்கள் மத்தியில், ஒரு கண்டம் இல்லவே இல்லை என்பதைச் சொன்ன முதல் பயணி, ஜேம்ஸ் குக். நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை முதல்முறையாக, விரிவாக வரைபடத்தில் குறித்தவர் இவர்தான். பசிபிக் பெருங்கடல் பகுதி பற்றியும் விரிவாக வரைபடத்தில் குறித்தார். ஜேம்ஸ் குக் போட்டுக் கொடுத்த பாதையில்தான் அதற்குப் பிறகு வந்தவர்கள் அனைவரும் சென்றார்கள்.

ஜேம்ஸ் குக்கின் மூன்றாவது பயணம் ஆச்சர்யமும் அதிர்ச்சியும் கலந்தவை. 1779ம் ஆண்டு ஹவாய் தீவை வந்தடைந்த ஜேம்ஸ் குக், அங்கே சில வாரங்கள் தங்கினார். பிறகு, 'கீலாகெக்குவா விரிகுடா' (Kealakekua Bay) எனும் பகுதிக்குச் சென்றார். கப்பலை விட்டு அவர் கீழே இறங்கியதும், ஹவாய் மக்கள் கும்பல் கும்பலாக ஓடிவந்து வணங்கினார்கள். 'லோனோ... எங்கள் தெய்வமே வந்துவிட்டீர்களா' என்று ஆரவாரம் செய்தார்கள்.


பிறகுதான் தெரிந்தது, அது அவர்களுடைய பண்டிகை தினம். லோனோ என்னும் கடவுளை வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த நேரம், வித்தியாசமான உடையில் வந்த ஜேம்ஸ் குக்கை அவர்கள், 'லோனோ' என்றே நினைத்துவிட்டார்கள்.

சில தினங்களில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. 14 பெப்ரவரி 1779 அன்று, ஏதோ கருத்து வித்தியாசம். ஜேம்ஸ் குக் குழுவினருக்கும் கிராம மக்களுக்கும் நடந்த வாய்ச் சண்டை, அடிதடி வரை போய்விட்டது. சிலர், பின்னால் இருந்தபடி ஜேம்ஸ் குக்கின் தலையைத் தாக்கினார்கள். கீழே விழுந்தவரை சிலர் கத்தியால் குத்த, ஜேம்ஸ் குக் அதே இடத்தில் மரணம் அடைந்தார்.

அவசரப்பட்டு இப்படிச் சிலர் நடந்துகொண்டாலும், ஹவாய் மக்கள் ஜேம்ஸ் குக்கை நினைத்து வருந்தினார்கள். 'அவர் லோனோவாக இல்லாமல் இருக்கலாம், இருந்தாலும் அவர் எங்களுக்குக் கடவுளைப் போன்றவர்தான்' என்று அஞ்சலி செலுத்தினார்கள்.

இன்றும் ஜேம்ஸ் குக்கின் அடையாளம் இதுதான். அவர் உலகின் தலைசிறந்த பயணிகளில் ஒருவர் மட்டுமல்ல, நல்ல மனிதர்.


(பயணங்கள் தொடரும்...)



# புதிரோடு விளையாடு!

விதவிதமான விலங்குகள், மாநாட்டைக் கூட்டியிருக்கு... வண்ணங்களைக் கொடுத்து, அவங்களைக் குஷியாக்கு!

1




2

எல்லாமே ரெண்டு ரெண்டாத் தெரியுதா... ஒண்ணு போலவே அடுத்ததும் இருக்குதா... சின்னச்சின்ன வித்தியாசம் புரியுதா... ஒண்ணாவே இருக்கும் ரெண்டு ஜோடி தெரியுதா?



7



அஞ்சாமல் பாருங்க... இவங்க நம்ம நண்பர்கள்தானுங்க... அஞ்சு வித்தியாசத்தைக் கண்டுபிடியுங்க!




5

உற்றுப் பாருங்க, எத்தனைப் பூச்சிங்க? எண்ணிப் பார்த்துச் சரியாச் சொல்லுங்க!

மாணவர் பூங்கா

3

கத்தரிக்கோலை எடுத்துக்க... கவனமா படத் துண்டுகளை வெட்டிக்க... காலிக் கட்டங்களைச் சரியாப் பொருத்திக்க!




எண்களின் வரிசைப்படி புள்ளிகளை இணைச்சுக்கோ... டைனோசர் தோழனை முழுமையாக்கிப் பார்த்துக்கோ!

4




## விடைகள்:

2. 

3. 

5. 

7. 

# மாய மனிதன் க்ரிஃபின்

6

VENU VARIATH
ஓவியம்: கே.எஸ்.ரகு
தமிழில்: ரமேஷ்


















இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 11.03.2018 அன்று வெளியிடப்பட்டது.